


கல்கி
KALKI 30-4-1972 45 காசு



AIYARS-M.173 TM

கல்கி



பொருளடக்கம்

பரிதாபி சித்திரை, 18 - ஏப்ரல் 30, 1972

ஒருமைப்பாட்டுக்கு முதலிடம் தருக	-	3
ராஜாஜியின் கருத்துக்கள்	-	4
திரு அனந்தையில் திக்விஜயேந்திரர்	-	6
அருள்வாக்கு	-	9
அலை ஓசை	-	11
இன்றைய பிரச்னை	-	19
அன்பே, அலிமா!	-	22
கவிமணியின் தமிழ்ப்பணி	-	25
ஸைக்கோ ஸாரநாதன்	-	27
நான் உன்னை அழைக்கவில்லை...	-	39
மாமா, மாமா, ஒரு கதை	-	42
அம்மா	-	50
நாம் தமிழர்	-	58
இருதய நோய்க்கு ஓர் அரிய சாதனம்	-	65
அர்ஜுனன் ஆன ஆரன்	-	67
வட்டமேஜை	-	69
இளைஞர் சமுதாயம்	-	70

அட்டைப்படம்: திருவாரூர்த் தேர். (ஹரலிங்கம்)

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11 50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	27-00	ரூ. 13-50

பெரியவர்கள் கூறுவர்: "பலமே பெரிதென்று"

ஆனால், பகத் இதை ஏற்கவில்லை. விவசாயத்திலும், கல்வியிலும் இப்போது புதிய முறைகள் உள்ளன என்பதை அவர் அறிவார். இவற்றைக் கற்று அறிந்து பயன்படுத்தும் புத்திமானே பலவான் என்பதையும் அவர் உணர்வார். நல்ல கல்வியறிவு இருந்தால்தான் விளைச்சலை நன்கு பெருக்க முடிந்தது அவரால். அவரைப் போலவே அவர் குழந்தைகளும் நல்ல கல்வியறிவு பெற வேண்டுமென்று அவர் விரும்புவதில் ஆச்சரியமில்லையே.



கல்கி
மலர் 31
இதழ் 40

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

ஒருமைப்பாட்டுக்கு முதலிடம் தருக

வெளிப் பகையை வெற்றிகரமாக முறியடித்து வாகை சூடிவிட்டாள் பாரதத் தாய். ஆனால் அன்னையின் புனித மேனிக்குள்ளேயே தோன்றியுள்ள புண்கள் அவளுக்கு ஊறு விளைவிக்காமல் காக்க வேண்டிய தருணம் வந்திருக்கிறது. மாநில சுயாட்சிக் கோரிக்கை வளர இடம் தந்தால் அது எத்தகைய எதிர் விளைவுகளில் கொண்டு விடும் என்பதை அனைவரும் புரிந்துகொண்டு, இந்த விஷ விருட்சத்தை முளையில் கிள்ளுவதன் அவசியத்தையும் அவசரத்தையும் உணர வேண்டும்.

''நாங்கள் தனி ஆட்சி கேட்கவே இல்லை. மேலும் அதிகாரங்களே கேட்கிறோம்'' என்கிறார் முதலமைச்சர். ஆனால் அவர் கலந்துகொள்கிற மகாநாட்டைத் திறந்து வைக்கும் அவரது கட்சிப் பிரமுகரோ, ''எங்கள் கோரிக்கையைக் கேளாவிடில் தேசத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முஜிபுர் ரஹ்மான் தோன்றுவார்'' என்கிறார்! முதல்வர் எந்த இனத்திலே, எந்த விதத்திலே அதிக அதிகாரம் கோருகிறார், எதற்காகக் கோருகிறார் என்பது புரியவில்லை. மாநிலத்துக்கு அதிகாரம் தரப்பட்டிருந்த 'மதுவிலக்கு' விஷயத்தில் அந்த அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து தமிழகத்து மக்களுக்கு மகத்தான தீங்கு செய்தவர்களிடம், மற்ற இனங்களிலும் தட்டிக் கேட்பதற்கின்றி அதிகாரம் வழங்கினால் எத்தகைய ஆபத்துக்கள் விளையுமோ?

தமிழ்நாட்டை மட்டுமின்றி, பாரதம் முழுவதையும் கவனித்தாலும் அகில இந்திய ஒருமைப்பாட்டுக்கு விரோதமான போக்குகள் ஆங்காங்கு வலுத்து வருகின்றன. மொழிவாரி மாநிலப் பிரிவினையின்போதே ராஜாஜி, இது பழைய ஆதிவாசிகளின் குறுகிய வாழ்முறைக்கு வழிவகுக்கும் ஏற்பாடு என்று எச்சரித்தார். அவர் அவ்விதம் கூறியதற்குப் பெருத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது எல்லா மாநிலங்களிலுமே பிறமொழி சிறுபான்மையினர் கொண்டுள்ள நிம்மதியின்மையையும், ராஜ்யங்களிடையே எல்லைத் தாவா, நதி நீர்ப்பங்கீடு இவற்றில் வலுத்து வரும் பூசல்களையும், அகில தேசியத் தலைவர்களை மறந்து அல்லது மறைத்து ஆங்காங்கே பிரதேச காந்திகள் சிருஷ்டிக்கப்படுவதையும், பிரதேச மொழிகளைக் கல்லூரி போதனை மொழியாக்கி அறிவாளிகளின் தேசியப் பரிவர்த்தனையை முடக்கிப் போடுவதையும் பார்க்கும்போது தேசிய உணர்வுக்கு நிச்சயமாக ஊறு விளைவிக்கப்படுகிறது என்றே தீர்மானிக்கிறோம்.

ஒரு மாநிலம் உணவுக்காக வயிறு காய்கிறபோது, பெருத்த உபரி வைத்துள்ள இன்னொரு மாநிலம் பேரம் பேசுமளவுக்கு நிலைமை ஆகியிருப்பதை என்னென்பது? இப்போது மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களைக் கொண்டேதான் அவை இந்தச் ''சாதனை''களைச் செய்து, தில்லி சர்க்காரை இவை குறித்து ஏதும் செய்ய முடியாத நிலையில் வைத்துள்ளன. ஏன், தில்லி சர்க்கார் வகுக்கும் திட்டங்களையே எடுத்துக் கொள்வோம். தேசிய உணர்வு போய், பிரதேச உணர்வே முற்றிவிட்டது என்பதற்கு ஓர் அழுத்தமான உதாரணம் மத்தியத் திட்டங்கள் குறித்து மாநிலங்கள் செய்யும் வற்புறுத்தல்கள். இந்தப் பிரம்மாண்ட திட்டங்கள் தேசத்துக்கு இப்போது அவசியம்தானா என்பது ஒருபுறமிருக்கட்டும். தேசம் முழுவதற்கும் ஒருசீராக அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கே இந்தத் திட்டங்கள் போடப்படுவதாக ஐதீகம். ஆனால் ஒவ்வொரு மாநிலமும் தனது வள வசதிகள் குறைவாக இருந்தாலும்கூட அதில்தான் குறிப்பிட்ட அணையைப் போட வேண்டும், ஆலையை வைக்க வேண்டும் என்றெல்லாம் தில்லியுடன் சர்ச்சையிடுவதைப் பார்க்கிறோம். ஓர் ஆலையை எங்கு அமைத்தால் தேசம் முழுவதற்கும் நலன் ஏற்படும், செலவு குறைவாக இருக்கும் என்பதில் மாநில அரசுகளுக்குக் கருத்தே இல்லாமலிருப்பது விந்தை! அரசுகளிடமிருந்து மக்களுக்கும் தவறான கருத்துக்கள் பாய்கின்றன. அந்தந்தப் பிரதேசத்தில் இருப்பவர்களும் தங்களுக்குப் பலவித பாத்தியதைகளை வலியுறுத்துகிறார்கள்! தில்லி சர்க்காரும்

வோட்டு வேட்டையை முன்னிட்டு இதில் பலவித தகிடுதத்தம் செய்ய வேண்டியிருக்கிறது !

மாநிலங்களுக்கு இப்போது இருக்கிற அதிகாரத்தை அவை (துஷ்)பிரயோகிப்பதே தேச ஒருமைப்பாட்டுக்குத் தலைவலி உண்டாக்கியிருக்கிறது என்பதுதான் உண்மைநிலை.

எனவே இப்போது உடனடியாகச் செய்ய வேண்டியது, மாநில அதிகாரப் பெருக்கம் அல்ல; அல்லவே அல்ல! இன்று மேற்கொள்ளவேண்டிய பணி, தேசிய உணர்வை மக்களிடம் ஆழமாக ஏற்படுத்துவதாகும். சுதந்திரப் போராட்டத்தின்போது எப்படிப் பாரத தேசம் முழுவதும் ஒரு குடும்பமாக இசைந்து செயல்பட்டதோ, அவ்விதமே சுதந்திர பாரதத்தைச் செம்மையாக்கும் திருப்பணியிலும் அனைவரும் ஐக்கியமாகத் தோளோடு தோள் சேர்ந்து உழைக்குமாறு செய்ய வேண்டும்.

நமது அரசியல் செய்யத் தவறியதை, சமயமும் கலைகளும் இன்னமும் செய்து வருகின்றன. மத உணர்வே முக்கியமாகத் தேசமக்கள் அனைவரையும் இன்னமும் சகோதர உணர்வில் காத்து வருகிறது. ஆனால் வர வர சமயமும் கலாசாரமும் புதுத் தலைமுறையில் மங்குவதையும் காண்கிறோம். இந்தக் காப்புக்கள் நலிவுற்றால் பாரத தேசத்தின் எதிர்காலம் குறித்து விசனிக்க வேண்டியதாகும்.

வெளிப் பகையை வெற்றி கண்ட பாரத சர்க்கார் மெத்தனமாக இல்லாமல் — தேசிய ஒருமைப்பாடு என்ற ஓயாத கோஷத்துடன் திருப்தி அடையாமல் — காரிய ரீதியில் தேசிய உணர்வு வளர்வதற்கு வழி வகைகள் காண வேண்டும். இதைக் கட்சிப் பிரச்னையாகவும், தேர்தல் விஷயமாகவும் ஆக்கி மாசுபடுத்திவிடாமல், தேசத்திலுள்ள பெரியார்களையெல்லாம் ஆலோசனை கேட்டு உரிய தோர் உபாயம் காண வேண்டியது இல்லி சர்க்காரின் பொறுப்பாகும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

வியட்நாம் போரில் அமெரிக்கா அணு ஆயுதங்களை உபயோகிக்காது என்றும், தென் வியட்நாமின் போர் முன்னணிக்கு அமெரிக்கத் துருப்புக்களை அனுப்பாது என்றும் யு. எஸ். ராஜாங்கக் காரியதரிசி ஸ்ரீவில்லியம் ரோஜர்ஸ் கூறியிருக்கிறார். ஆயினும் ஏதேனும் ஒருவிதத்தில் — எந்தவிதத்தில் என்று அவர் கூறவில்லை — கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தென் வியட்நாமுக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவி தரும் என்று அவர் தெரிவித்திருக்கிறார். இதற்கு மாறாக இந்திய சர்க்காரோ, அமெரிக்கா ஹனோயில் குண்டு போடுவதை நிறுத்த வேண்டும் என்று விடாமல் வற்புறுத்திவருகிறது; அதாவது, அமெரிக்கா தென்வியட்நாமைக் கைவிட வேண்டும் என்கிறது. இந்த விவகாரத்தில் இந்திய சர்க்கார் கம்யூனிஸ்ட்களின் தரப்பில் இருக்கிறது. ஆனால் இந்திய மக்கள் நிச்சயமாக இதை விரும்பவில்லை. புது தில்லியில் மக்கட் சபை அங்கத்தினர்கள் என்ன சொன்னாலும், நம் மக்கள் கம்யூனிஸ ஆக்கிரமிப்பு வளருவதை விரும்ப மாட்டார்கள்.

* * *

அதிகாரபூர்வ அங்கீகாரம் பெற்று வங்காள தேசம் காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கிறது. காமன்வெல்த்தில் ஏற்கனவே உள்ள எல்லா நாடுகளும் புதியதொரு நாட்டை அநுமதிப்பதற்கு ஒப்புதல் தரவேண்டும் என்பது விதி. காமன்வெல்த்தில் வங்காள தேசம் அநுமதிக்கப்பட்டதை வரவேற்று பிரிட்டிஷ் பிரதமர் ஸ்ரீ ஹீத், ஷேக் முஜிபுக்கு வாழ்த்து அனுப்பியுள்ளார். உலக சமாதானத்தை நோக்கி ஓர் அடி முன்னேறினதாகும்.

* * *

உத்தரப் பிரதேச முதன் மந்திரி சட்டசபையில் கூறியுள்ள ஒரு விஷயம் மகிழ்ச்சியூட்டுகிறது. உ. பி. மாநிலத்திலிருந்து ஆங்கிலத்தை அகற்றுவது சாத்தியமல்ல என்று அவர் கூறியிருக்கிறார். ஆங்கிலத்தை அகற்றிவிட்டால் அதன்பின் உ. பி. மக்கள் மற்ற மாநிலங்களுக்குப் பின்தங்கிப் பிரதிகூல நிலையில் இருப்பார்கள் என்று அவர் சொல்லி வருகிறார். ஆங்கில மொழி சர்வதேச விவகாரங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதோடு, அம்மொழிதான் அகில இந்தியத் தொடர்பு மொழியுமாகும் என்ற பகிரங்க உண்மையை ஹிந்தி வெறியர்களும் மெல்ல மெல்ல உணரத் தொடங்கியுள்ளனர். இன்னும் விரைவாக அவர்கள் இந்த உணர்வைப் பெற்றால் தேச ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் மிக நன்மையாக இருக்கும்.

* * *

* தமிழக முதன் மந்திரி மதுக் கடைகளைத் திறக்க அனுமதித்திருப்பதை ஆட்சேபித்து விருதுநகரில் சர்வோதயத் தொண்டர் திரு ஆர். டி. பி. சுப்பிரமணிய நாடார் உண்ணாவிரதம் இருக்கிறார். சேலத்தில் திருமணி உண்ணாவிரதம் இருக்கிறார். பொது மக்களிடை மதுவிலக்கு வேண்டுமா, வேண்டாமா என்று வாக்கெடுப்பு நடத்துவதாக முதன்மந்திரி ஒப்புக் கொண்டால் உண்ணாவிரதம் நிறுத்தப்படும் என்று விரதம் இருப்பவர்கள் கூறுகின்றனர். தமிழகம் முழுவதிலும் வாக்கெடுப்பு நடப்பது இயலாத காரியம். உதாரணத்துக்கு ஓரிரு தாலூக்காக்களில் வாக்கெடுப்பு நடத்திப் பார்ப்பதில் நடைமுறை சிரமம் இராது. ஆனால் உண்ணாவிரதமிருப்போரின் சவாலை ஏற்கத் தமிழக முதன்மந்திரிக்குச் சிறிதும் மனம் வராது எனலாம். இப்படி வாக்கெடுப்பதைப் பற்றி முதன் மந்திரி யோசனை செய்வதற்கு நிறைய சந்தர்ப்பம் தந்தாயிற்று. ஆனபடியால் இந்த உண்ணாவிரதம் உயிர் போகும் வரையில் தொடரும் விரதமாகும். மகாத்மா காந்தியை நிகர்த்த ஒருவர் அன்றி, மற்றவர் எவரும் உண்ணாவிரதத்தின் மூலம் ஒரு சர்க்காரின் பிடிவாதத்தை மாற்ற முடியும் என்று எதிர்

---

* இது ஏப்ரல் 20ந் தேதி எழுதப்பட்டது.

பார்ப்பதற்கில்லை. உண்ணாவிரதம் இருக்கும் அன்பர்கள் என் யோசனையைக் கேட்டு உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும். விருப்பமிருந்தால் அவர்கள் கள்ளுக் கடையின் முன் மறியல் செய்து, சிறைபுகலாம். தமிழக மக்களுக்கு அரசாங்கம் செய்துள்ள கொடுந் தீங்கு குறித்துத் தங்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பையும் வேதனையையும் இவ்விதம் வெளியிட்டு அவர்கள் சிறிது ஆறுதல் பெறலாம்.

* * *



இந்தக் கொள்ளைக்காரன் சரணடைய மறுக்கிறான்.

ஒருவரது உயிர் அவர் தம் இஷ்டப்படி விநியோகித்துக் கொள்ளக் கூடிய, அல்லது தள்ளக்கூடிய சொத்தல்ல. ஒருவரது உயிர் என்பது அவரிடம் தரப்பட்ட 'டிரஸ்ட்' — அதாவது நம்பிக்கையின் பேரில் வைத்திரு என்று தரப்பட்ட பொருள் ஆகும். அவ்வளவே. பிறர் பொருட்டு ஒருவரிடம் நம்பித் தந்த 'டிரஸ்ட்' சொத்தைச் சொந்தச் சொத்தாக உபயோகிக்கக் கூடாது. இதனால் தான் சாகும்வரையில் உண்ணாவிரதம் மேற்கொள்வதை நான் எப்போதுமே ஆட்சேபித்து வந்திருக்கிறேன். அப்படிச் செய்வது 'டிரஸ்ட்' சொத்தாகிய உயிரைத் தன் சொந்தச் சொத்தாகத் தூர் விநியோகம் செய்வதாகும். பிரஜையின் உயிர் என்பது சர்க்காரின் சொத்து என்பார் சர்வாதிகாரி. அது பகவானின் சொத்தே என்று நான் சொல்வேன். எனவே, அதை இஷ்டப்படி நீக்க, ஒருவருக்கு உரிமையில்லை என்பேன். ஒருவர் தனது ஆதீனத்திலுள்ள ஒரு குழந்தையைக் கொலை செய்வது எவ்வளவு குற்றமோ, அதே அளவுக்குத் தற்கொலை செய்து கொள்வதும் குற்றமாகும்.

* * *

ஒரு நல்ல செய்தி. அமெரிக்கா, ருஷியா, பிரிட்டன் உள்பட நாற்பத்தியேழு நாடுகள், விஷக் கிருமிகளைப் பரப்பிப் போர் செய்வதில்லை என்று முடிவு செய்து கையொப்பமிட்டுள்ளன. விஷக் கிருமிகளைப் பரப்பும் உபகரணங்களை இனி தயாரிப்பதில்லை என்றும் அவை முடிவு செய்துள்ளன. இதே போல் அணுஆயுதங்களைத் தயாரிப்பதில்லை என்றும், அணு ஆயுதப் போர் செய்வதில்லை என்றும் உலக நாடுகள் கூடி முடிவெடுக்க வேண்டும் என்று உலக மக்கள் மனமாரப் பிரார்த்திக்கின்றனர்.

* * *

சர்க்கார் எத்தனை எத்தனையோ விஷயங்களை அலசுகிறது. ஆனால் ஆள்கிற கட்சிக்குத் தங்கச் சுரங்கமாக விளங்கும் பெர்மிட் — லைசென்ஸ் ஏகபோகத்தைப்பற்றி மட்டும் அது மூச்சே விடுவதில்லை. தென் இந்தியக் கோயில்களின் கர்ப்பக்கிருஹத்தில் அர்ச்சகர் தவிர எவரும் பிரவேசிக்கக் கூடாது என்பது போல், பெர்மிட் — லைசென்ஸ் சுரங்கத்தில் தங்களைத் தவிர எவருக்கும் பிரவேசிக்கும் அனுமதி இல்லை என்று கருதி, அந்த விஷயத்தை விவாதத்துக்கே கொண்டு வருவதில்லை. லைசென்ஸ் விநியோகம் ஒரு சுதந்திரமான குழு வசம் மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஒரு பதிலும் இல்லை. தங்கச் சுரங்கத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்து மீறுபவர்களையும், வேடிக்கை பார்க்க வருவோரையும் உத்தேசித்துக் கர்ப்பக் கிருஹத்தில் பிரவேசம் மறுப்பதற்கு நியாயமுண்டு. ஆனால் பெர்மிட் — லைசென்ஸ் விநியோகத்தைச் சர்க்காரை நடத்தும் கட்சியின் நலனுக்கெனவே ஏகபோக்கியமாக்கியிருப்பதில் எந்த நியாயமும் இல்லை.

ராஜ்யங்களின் சுயாட்சிக் கூப்பாடு, இந்தக் கொள்ளையில் பங்கு கேட்பதேயாகும். இதற்கு இணங்கி விட்டால், ஒரு தவறான அமைப்பின்கீழ் மேலும் பல சுயநலக் கூட்டங்கள் தோன்றி, மேலும் ஊழல் உண்டாகும். தேசிய முன்னேற்றம், நீதி இரண்டும் இன்று கோருகிற முதற் பெரும் சீர்திருத்தம் பெர்மிட் லைசென்ஸ் ஆட்சியை ஒழிப்பதே.

* * *


சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு வெங்கடராம் அகால மரணமடைந்துவிட்டது இக்கட்சிக்குப் பேரிழப்பாகும். மனம் வாக்கு காயங்களால் அவர் கட்சிக்கு நற்றொண்டு ஆற்றி வந்தார். குறிப்பாகத் தமிழ்நாடு சுதந்திரக் கட்சித் தலைவர் திரு ஜீ. கே. சுந்தரத்துக்கு அவர் வலது கரமாகச் செயல்பட்டு வந்தார். சுதந்திரக் கட்சியின் தமிழ்நாடு கிளைக்கு எதிர்பாராத அதிர்ச்சி தந்தது அவர் மறைவு. கோவை மக்கள் எல்லோருமே வெங்கடராம் அவர்கள் மறைவுக்கு வருந்துவார்கள்.

திரு அனந்தையில் திக்விஜயேந்திரர்



கரமனையில் புதுப் பெரியவாள் உபந்நியாஸம்.

"புதுப் பெரியவாள்" என்று போற்றப்படும் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீமத் ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் கடந்த பல மாதங்களாகக் கர்நாடகத்திலும் கேரளத்திலும் செய்துவரும் திக்விஜயம் குறித்துப் பூரிக்காத ஆஸ்திகர் இல்லை. ஸ்ரீ காமகோடி பீடம் என்பது பரமேசுவர அவதாரமான பகவத்பாதர்கள், ஸ்ரீ மகா திரிபுரசுந்தரியான காமகோடியின் சாந்நித்தியத்தை ஆகர்ஷித்து ஸ்தாபித்த மகா பீடம். ஸ்வாமிகளுக்கு ஆசிரமம் தந்தவர்களோ பகவத்பாதர்களின் புனரவதாரமான நம் பெரியவர்கள்; இந்த இரண்டு மகா சக்திகளின் ஊட்டத்தில் ஸ்ரீ புதுப் பெரியவாள் தமது இயல்பான பக்தியாலும், ஞானத்தாலும், வித்யையாலும், அநுஷ்டான விசேஷத்தாலும், சரள குண நலத்தாலும் அற்புதப் பொலிவு பெற்றிருக்கிறார்கள். எனவேதான் சென்றவிடமெல்லாம் சிறப்புப் பெற்று ஜயேந்திரர்களா, திக்விஜயேந்திரர்களா என்று வியக்கும் வண்ணம் கன்னட, மலையாள மக்களை ஆகர்ஷித்திருக்கிறார். குருவாயூர் புனருத்தாரணத்தை ஸ்ரீ புதுப் பெரியவாள் தொடங்கி வைத்திருந்தது. ஆதி சங்கரரைத் தந்த கேரளம் அந்த மகா புருஷரே மீண்டும் தாம் பிறந்த பிராந்தியத்துக்கு வந்திருப்பதாகக் கருதி ஸ்வாமிகளிடம் அன்பும், பக்தியும் செலுத்தி வருகிறது.



சாலை அக்கிரகாரவரவேற்பில்

▼ நகரஊர்வலத்தில் ராஜநடையிடுகிறார் ஸ்வாமிகள்.




கேரள திக்விஜயத்தின் சிகரமாக அமைந்தது, ஸ்ரீ புதுப் பெரியவாள் அந்த ராஜ்யத் தலைநகரான திருவனந்தபுரத்தில் இட்டிருந்த முகாம். மார்ச் மாதம் 13ந் தேதியிலிருந்து 30ந் தேதி வரையில் பதினெட்டு நாட்கள் ஸ்வாமிகள் திருவனந்தபுரத்தில் இருக்கை கொண்டிருந்தார்கள். பதினெட்டு என்றாலே 'ஜயம்' எனப் பொருள். ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் பதினெட்டு நாள் வாசத்தில் திருவனந்தபுரம் ஆஸ்திகத்தில் புது வெற்றி கண்டது எனலாம்.

ஸ்ரீமடத்து முகாமில் ஸ்வாமிகள் பக்தி சிரத்தையுடன் புரிந்த பூஜைகளுக்கும், அன்றாடம் நிகழ்த்திய உபந்யாசங்களுக்கும் கூட்டம் கூட்டமாக மக்கள் திரண்டு வந்தனர். சநாதன தர்மத்தில் பிறழாமலே நவயுக மக்களை ஆன்ம நெறியில் ஈடுபடுத்த ஸ்வாமிகள் வகுத்துக் கூறும் எளிய வழிகளைக் கேட்டு மகிழ்ந்தனர். ஆயிரம் பல்லாயிரம் குழந்தைகளைப் பல்லாயிரக் கணக்கில் ஸ்ரீ ராம நாமம் எழுதச் செய்து ஸ்வாமிகள் பதக்கம் வழங்கியது கண்டு இன்புற்றனர்.


திருவனந்தபுரத்தில் பல இடங்களுக்கு ஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள். எல்லா இடங்களிலும் ஜன நெரிசல் சொல்லி முடியாது. முக்கியமாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். திருவனந்தபுரம் தேவஸ்வம் குழுவினர், ஸ்வாமிகள் முதலில் முகாமிட்டிருந்த தேவாரத்துக் கோயில் அரண்மனையிலிருந்து கோட்டை அரண்மனைக்கு அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். இந்த இரண்டரை மைல்களும் ஜே ஜே என்று மக்கள் குழுமி ஸ்வாமிகளை வணங்கினர். வலியசாலை மகாதேவர் ஆலயத்தில் ஸ்வாமிகளுக்கு ஏராளமான ஹிந்துமத ஸ்தாபனங்கள் வரவேற்புரை வாசித்தளித்தன. பிரம்ம சமாஜம், வியாபாரிகள் சங்கம், கிராம சமுதாயங்கள் ஆகியனவும் ஸ்வாமிகளுக்கு வரவேற்பளித்தன. 24ந் தேதி ஸ்வாமிகள் தமது முகாமில் ஐம்பது சிறாருக்கு உபநயனம் நடத்தி வைத்தார். 26ந் தேதியன்று திருவனந்தபுர பக்தர்களின் உற்சாகம் கரை புரண்டது. 'ஹிந்து சமாஜோத்ஸவம்' என்பதாக ஸ்வாமிகளை வைத்து ஒரு பெரிய ஊர்வலம் நடத்தினர். புராண சம்பவங்களை வர்ணிக்கும் அலங்கார வண்டிகளும், கிராமிய நடனங்களும், பஞ்ச வாத்தியம் முதலியனவுமாகத் திமிலோகப் பட்டது. சாஸ்தாமங்கலத்திலிருந்து கோட்டைக்குச் சென்ற இந்த ஊர்வலத்தில் ஸ்ரீ ஆசாரியர்கள் ஐந்து மைலும் பாதசாரியாகவே சென்றார்கள். ஊர்வலம் நடந்தேற ஆறு மணி நேரம் பிடித்தது. வழிநெடுக அத்தனை அடியார்களும் இருமருங்கும் நின்று வணக்கம் செலுத்தினர். மறுநாள் ஸ்வாமிகள், ஸ்ரீ வராகத்தில் எழும்பவிருக்கும் ஸ்ரீ ஸீதா கல்யாண மந்திரத்துக்கு 'அநுக்கிரக பத்திரம்' வழங்கினார். கரமனையில் முகாமிட்டிருக்கையில், ஸ்ரீ சங்கர பாதுகா மண்டபத்துக்கு மூலக்கல் நாட்டினார்.

கேரளத்தில் ஆஸ்திக மறுமலர்ச்சியை உண்டாக்கிவிட்டு, மார்ச் 30ந் தேதி அம்மாநிலத்திலிருந்து தமிழகத்துக்கு விடை கொண்டு, தற்போது குமரி முனையில் யாத்திரை செய்து வருகிறார் ஸ்ரீபுதுப் பெரியவாள். கேரளம் காமகோடி பீடாதிபதிகளின் இந்த விஜயத்தை என்றும் மறவாது!





ஸ்வாமிகள் முகாமிட்டிருந்த தேவாரத்துக் கோயிலில் பூர்ண கும்ப மரியாதை.

தேவஸ்வம் குழுத் தலைவர் ஸ்ரீ மாதவன் நாயர் அலங்காரப் பேழையில் வரவேற்பிதழ் சமர்ப்பிக்கிறார்.



திருவனந்தபுரத்துப் பெருமக்கள் பலரடங்கிய வரவேற்புக் குழுவினர் மங்கள பத்திரம் வாசித்து அளிக்கின்றனர்.





"உம்மாச்சி"

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

எல்லோரும் காலையில் எழுந்ததும் நாராயண ஸ்மரணம் செய்ய வேண்டும். மாலையில் பரமேசுவரனை தியானிக்க வேண்டும். மகாவிஷ்ணு உலகைப் பரிபாலிப்பவர். காலையில் உலக காரியங்களைத் தொடங்குமுன் அவரை ஸ்மரிக்க வேண்டும். பரமேசுவரனிடம் உலகமெல்லாம் லயித்து ஒடுங்குகின்றன. மாலையில் நம் வேலைகள் ஓய்கின்றன. நாம் பார்த்துக் கொண்டிருக்கும் உலகம் இருளுக்குள் ஒடுங்குகிறது. பட்சிகள் கூட்டில் ஒடுங்குகின்றன. அப்போது பரமேசுவரனை ஸ்மரிக்க வேண்டும். தோஷம் என்றால் இரவு. இரவு வருவதற்கு முற்பட்ட மாலை வேளை ப்ர — தோஷம். பிரதோஷத்தில் பரமேசுவரனை நினைக்க வேண்டும்.

ஈசுவரனை எப்போதும் அம்பாளோடு சேர்த்தே தியானிக்க வேண்டும். ஈசுவரன் சிவன் எனப்படுகிறார். அம்பாளுக்கு சிவா என்று பெயர். வேதத்தில் ஸ்ரீ ருத்ரம் சொல்கிறது :

> ''பயங்கர ரூபம் கொண்ட ருத்திரனுக்கு பரம மங்களமான ஒரு ஸ்வரூபம் உண்டு. அதற்கு சிவா என்று பெயர். அந்த சிவா தான் உலக தாபத்துக்கெல்லாம் ஔஷதமாக இருக்கிறது. ருத்திரனுக்கும் ஔஷதம் அந்த சிவாவே.''

அப்படிப்பட்ட சிவாவோடு சேர்த்து, ஸாம்ப பரமேசுவரனை (ஸ+அம்ப — அம்பாளோடு கூடியவனாக) தியானிக்க வேண்டும்.

வேதம் சொன்னதால் மட்டுமல்ல. நம் தேசக் குழந்தைகளும் அநாதிகாலமாக நமக்கு அப்படிக் கட்டளையிட்டிருக்கின்றன.

குழந்தைகள் நமக்குக் கட்டளை செய்வது என்ன? குழந்தைகள் ஸ்வாமியை 'உம்மாச்சி' என்றே சொல்லும். குழந்தைகளின் பரம்பரையில் சில தனி வார்த்தைகள் உண்டு. இவை ஆயிரக்கணக்கான வருஷங்களாக வந்து கொண்டிருக்கின்றன. பெரியவர்களின் வார்த்தைகளும்; அவற்றின் அர்த்தங்களும் மாறும். குழந்தை மொழி மாறுவதில்லை. 'உம்மாச்சி' என்ற குழந்தை மொழிக்கு 'ஸ்வாமி' என்று அர்த்தம். என்னிடம் குழந்தைகளை அழைத்து வருகிறவர்கள்கூட, ''உம்மாச்சித் தாத்தாவுக்கு நமஸ்காரம் செய்'' என்று அவற்றிடம் சொல்லக் கேட்டிருப்பீர்கள். இதென்ன ''உம்மாச்சி''? இதன் சரியான மூலம் என்ன என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

திருச்சி மலைக் கோட்டைக்குப் போயிருந்தேன். அங்கே உள்ள கோயில் ஸ்ரீபாதந்தாங்கிகளில் திருநல்லத் (கோனேரி ராஜபுரம்) திலிருந்து வந்திருந்தவர்களும் இருந்தார்கள். அவர்களில் ஒருவரை இன்னொருவர் ''உம்மாச்சு'' என்று கூப்பிடுவதைக் கேட்டேன். திருநல்லத்தில் ஸ்வாமியின் பெயர் உமாமகேசுவரன் என்பது. எனக்கு உடனே விஷயம் பளிச்சென்று புரிந்தது. உம்மாச்சு, உம்மாச்சி எல்லாம் உமாமகேசனைக் குறிப்பனவே என்று தெரிந்து கொண்டேன். ஆக, குழந்தைகளின் பாஷையிலிருந்தே அவர்கள் மிகப் பழம் காலத்திலிருந்து உமாதேவியுடன் சேர்ந்த மகேசுவரனைத்தான் ஸ்வாமியாக நினைக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. குழந்தைகளால் சொல்லப்படுகிற ஒரு விஷயத்துக்குப் பெருமை அதிகம். குழந்தைகளிடம் காமமும் குரோதமும் நிலைத்திருப்பதில்லை. இந்த விநாடி ஆசைப்பட்டு வாங்கிய பொருளை அடுத்த விநாடி கீழே போட்டுவிட்டுப் போய் விடும். இந்த விநாடி கோபித்துக் கொண்ட ஒருவரிடம் அடுத்த விநாடியே ஆசையோடு ஓடும். குழந்தைக்கு மோச எண்ணம் இல்லை. கபடம் இல்லை. இதனால்தான் உபநிஷத்துக்களும் நம்மைக் 'குழந்தையாக இரு' என்று உபதேசிக்கின்றன. குழந்தையே தெய்வம் என்பார்கள். அந்தக் குழந்தை, தெய்வம் என்றால் உமாமகேசுவரன் என்று சொல்கிறதென்றால், அந்தக் கட்டளையை நாம் ஏற்க வேண்டும். வேதத்தின் பாஷையும் குழந்தையின் பாஷையும் ஒன்றாகச் சொல்வதுபோல் எல்லோரும் சாயங்காலத்தில் அம்பிகை சகிதனான ஈசுவரனை தியானிப்போமாக!

நம: பார்வதீ பதயே: ஹரஹர மஹாதேவா!


சாதாரண காப்பிகளுக்கு எதிரான புரட்சியில் சேருங்கள்!

ACIL-R-625 (3) TAM

இலவசம்!



விசேஷ சலுகை-ஒவ்வொரு கண்ணாடி
ஜாடியிலுள்ளும் வெள்ளி முலாம்
பூசப்பட்ட ஒரு காப்பி ஸ்பூன்



வற்புறுத்தி வாங்குங்கள் ஒரு ஸ்பெஷல் காப்பி

விசேஷ சுவை
விசேஷச் சிக்கனம்
விசேஷ பாக்கிங்

விலை
ரூ. 2.87
வரிகள் தனி.

புதியது!
'அதி-ஸ்ட்ராங்கான'

ரிக்கரி®

இன்ஸ்டன்ட்

இது விசேஷமானது!
நெஸ்கஃபே தயாரிப்பாளர்கள் அளிப்பது



30. இதுவா உன் கதி?

தாரிணியின் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தபோது சௌந்தரராகவனின் உள்ளத்தில் பழைய அன்பும் ஆர்வமும் ததும்பிக் கொண்டிருந்தன. பூகம்பத்தினால் விளைந்த விபரீத நிகழ்ச்சிகளைப் பற்றிப் படித்தபோது அவனுடைய மனம் இளகிற்று. கடிதத்தின் கடைசிப் பகுதி இளகிய மனத்தை மறுபடியும் கல்லாக மாற்றியது.

சௌந்தரராகவனுடைய மனத்துக்குள் தன்னைப் போன்ற ஒரு புத்திசாலி இந்தியா தேசத்தில் இதுவரை பிறந்ததில்லை என்ற எண்ணம் குடிகொண்டிருந்தது. தாரிணி அவனிடம் கொண்டிருந்த காதல் அந்த எண்ணத்தைத் தூபம் போட்டு வளர்த்திருந்தது. இப்போது அவள் தனக்கு மனித வாழ்க்கை எடுத்ததின் பலனைப் பற்றிப் போதனை செய்ய ஆரம்பித்தது ஆத்திரத்தை உண்டாக்கியது. அதிகப் பிரசங்கி! சர்க்கார் உத்தியோகம், பெரிய சம்பளம், சௌக்கியமான பங்களா வாழ்வு முதலியவை குறித்து இவள் என்ன நமக்கு உபதேசிப்பது? நல்லவேளை! இப்படிப்பட்ட அதிகப்பிரசங்கியுடன் நமது வாழ்க்கையை என்றென்றைக்கும் பிணைத்துக் கொள்ளாமல் தப்பினோம்! மூத்தோர் சொல் வார்த்தை 'அமிர்தம்' என்று பெரியவர்கள் தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்? கல்யாண விஷயத்தில் அம்மா சொன்னதைக் கேட்கத் தீர்மானித்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று? அப்பா அடிக்கடி சொல்வதும் ஒருவிதத்தில் உண்மைதான். பெண்கள் வீட்டுக்குள்ளேயிருந்து வாழ்க்கை நடத்துவதுதான் நியாயம். தேசத் தொண்டு என்றும், பொது ஊழியம் என்றும் சொல்லிக்கொண்டு ஸ்திரீகள் வெளியில் கிளம்புவது என்று ஏற்பட்டு விட்டால் அப்புறம் அது எங்கே கொண்டு விடும் என்று யார் சொல்ல முடியும்? தாரிணியின் விஷயத்தில் கொஞ்சம் ஏமாந்துதான் போய்விட்டோம். அவளுடைய முக வசீகரமும் வெளி மினுக்கும் நம்மை ஏமாற்றி விட்டன. பார்க்கப் போனால், சீதாவைக் காட்டிலும் தாரிணி அழகிலே அதிகம் என்று சொல்ல முடியுமா? ஒரு நாளும் இல்லை. அல்லது சமர்த்திலேதான் சீதா குறைந்து போய் விடுவாளா? அதுவும் இல்லை! அன்றைக்குத் தன் அப்பா, அம்மாவிடம் சீதா எவ்வளவு சாதுர்யமாகப் பேசினாள்? அழகோடும் சமர்த்தோடும் சீதா அடக்கம் என்னும் அருங்குணத்தையும் அணிகலனாகப் பூண்டிருப்பாள். குடும்ப வாழ்க்கைக்குத் தகுந்தபடி நடந்துகொள்வாள். பெரியவர்களிடம் பயபக்தியோடு இருந்து நல்ல பெயர் வாங்குவாள். பணம் பணம் என்று ஜபம் செய்து கொண்டிருந்த அப்பாவையே மனம் மாறும்படி செய்து விட்டாளே! அவளுடைய பேச்சைக் கேட்டுவிட்டு, பணமும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். வேண்டிய பணம் நீ சம்பாதித்துக்





கொள்வாய். இந்த மாதிரி சமர்த்துப் பெண் கிடைப்பது துர்லபம். உனக்குப் பிடித்திருந்தால் எனக்கு ஆட்சேபமில்லை என்று சொல்லி விட்டாரே? கடவுளுடைய கருணை தன்னிடத்தில் பூரணமாய் இருக்கிறது. ஆகையினாலேதான் தாரிணியோடு தன் வாழ்நாள் முழுதையும் பிணைத்துக் கொண்டு இன்டாடாமல் இந்த மட்டும் தப்ப முடிந்தது. பெண் பார்க்கப் போன இடத்தில் தான் என்ன? கடவுளுடைய சித்தந்தானே லலிதாவைப் பார்க்கப் போன இடத்தில் சீதாவை முதலில் கொண்டு வந்து விட்டது? ஆனால் இந்த விஷயத்தில் கடவுளின் சித்தத்தைக்கூட இரண்டாவதாகத்தான் சொல்ல வேண்டும். அம்மாவுக்குத்தான் முதல் நன்றி செலுத்த வேண்டும். அம்மா மட்டும் அவ்வளவு பிடிவாதமாக இருந்திராவிட்டால் தான் எப்பேர்ப்பட்ட இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டு வாழ்நாளெல்லாம் இன்டாட நேர்ந்திருக்கும்?

இப்படியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்த ராகவனுடைய கவனம் உறை பிரிக்காமல் வைத்திருந்த இன்னொரு கடிதத்தின் மீது சென்றது. அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தான்.

அதில் அடங்கியிருந்த விஷயம் அவனைத் திகைக்கும்படி செய்தது. அது முஸபர்பூர் பூகம்பத் தொண்டர் படை முகாமிலிருந்து வந்த கடிதம். அதில் எழுதியிருந்ததாவது:

முஸபர்பூர்
12—2—34

அன்பார்ந்த ஐயா,

வருத்தம் தரும் ஒரு விஷயத்தைத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. பம்பாயிலிருந்து வந்த ஒரு தேச சேவிகை — தாரிணி என்னும் பெயர் கொண்டவள். —இந்த முகாமில் தங்கிப் பூகம்பத்தினால் நஷ்டமடைந்த ஜனங்களுக்குத் தொண்டு செய்து வந்தாள். அவளுடைய உயர்ந்த குணங்களினால் இங்கே எல்லோருடைய பாராட்டுதலுக்கும் உரியவளாயிருந்தாள். நேற்று மத்தியானம் விடுதியில் சாப்பிட்டு விட்டுப் போனவள் இரவு திரும்பி வரவில்லை. துரதிருஷ்டவசமாக அவளிடம் ஒரே ஒரு துர்ப்பழக்கம் இருந்தது. பூகம்பத்தினால் இந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் பூமிப் பிளவுகளுக்குப் பக்கத்தில் போய் அடிக்கடி எட்டிப் பார்த்துக் கொண்டு நிற்பாள். நாங்கள் பலமுறை எச்சரித்தும் அவள் கேட்கவில்லை. கடைசியாக நேற்றுப் பிற்பகல் தாரிணியைப் பார்த்தவர்கள் அத்தகைய பிளவு ஒன்றுக்குப் பக்கத்தில் நின்று அவள் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்ததாகச் சொல்லுகிறார்கள். எவ்வளவோ தேடிப் பார்த்தும் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. ''அன்று ஜனககுமாரி பூமிக்குள் போனது போல் நானும் போய்விட விரும்புகிறேன்'' என்று தாரிணி அடிக்கடி சொல்லுவது வழக்கம். அவளுடைய விருப்பம் நிறைவேறிவிட்டதென்றே வருத்தத்துடன் முடிவு செய்ய வேண்டியதாயிருக்கிறது. தாரிணியின் உற்றார் உறவினரைப் பற்றி எங்களுக்கு யாதொரு தகவலும் இல்லை. அவளுடைய டைரியில் தங்கள் விலாசம் குறிக்கப்பட்டிருந்தபடியால் இதைத் தங்களுக்கு எழுதுகிறோம். தாரிணியின் பந்துக்களைத் தங்களுக்குத் தெரிந்திருந்தால் அவர்களுக்கும் அறிவிக்கக் கோருகிறோம். ஒருவேளை தாரிணி எங்கேயாவது வழி தப்பிப் போயிருந்து திரும்பி வந்து விட்டால் தங்களுக்கு உடனே தெரியப்படுத்துகிறோம்.

இங்ஙனம்,
சரளாதேவி

இந்தக் கடிதத்தின் முதல் சில வரிகளைப் படிக்கும்போதே ராகவனுக்குத் தாரிணி மீது ஏற்பட்டிருந்த ஆத்திரமெல்லாம் மாறிவிட்டது. அவனுடைய இருதயத்தில் அன்பும் இரக்கமும் ததும்பின. கடிதத்தை முடிக்கும்போது

கண்களில் கண்ணீர் ததும்பியது. எழுந்து சென்று பூட்டியிருந்த அலமாரியைத் திறந்து அதற்குள்ளிருந்த தாரிணியின் படத்தை எடுத்தான். வெகுநேரம் அதை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தான். தாரிணியின் பேச்சுக்களும் முகபாவங்களும் நடை உடைபாவனைகளும் ஒவ்வொன்றாகவும் சேர்ந்தாற்போலும் அவன் மனக் கண் முன்னால் வந்து கொண்டிருந்தன. ''அடடா! இதுவா உன் கதி?'' என்று எண்ணியபோது ராகவனுடைய கண்ணில் ததும்பிய கண்ணீர் வழிந்து தாரிணியின் படத்தின்பேரில் உதிர்ந்தது. அதே சமயத்தில் அவனுடைய உள்ளத்தில் ஓர் அதிசயமான நிம்மதியும் உண்டாயிற்று.

அப்புறம் ஒரு வாரம், பத்து நாட்கள் வரையில் முஸபர்பூரிலிருந்து வேறு ஏதேனும் கடிதம் — நல்ல செய்திகள் கொண்ட கடிதம் — ஒருவேளை வரக்கூடும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அத்தகைய கடிதம் ஒன்றும் வரவேயில்லை.



31. மதகடிச் சண்டை

ராஜம்பேட்டைத் தபால்சாவடியின் சுவரில் மாட்டியிருந்த காலெண்டர் ஏப்ரல்மீ 1உ என்று காட்டியது.

ஸ்ரீ பங்காரு நாயுடு பி.பி.எம். தமது சிங்காதனத்தில் அமர்ந்து ஸ்டாம்புக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தபால்கார பாலகிருஷ்ணன் தபால்களுக்கு முத்திரை குத்திக் கொண்டிருந்தான்.

'' பாலகிருஷ்ணு ! இது என்ன தொல்லை ? தலையைக் காணோம், அப்பா!'' என்றார் பங்காருநாயுடு.

''அதுதான் இருக்கே, ஸார்'' என்றான் பாலகிருஷ்ணன்.

'' இருக்கா ? எங்கே இருக்கு?''

''கழுத்துக்கு மேலே தொட்டுப் பாருங்க, ஸார்!''

''இந்தத் தலையைச் சொல்லவில்லை, தம்பி! இது போனாலும் பரவாயில்லையே? தபால் தலையை அல்லவா காணவில்லை ?''

''எத்தனை தலை, என்னென்ன தலை காணவில்லை?''

''இரண்டு முக்காலணாத் தலையைக் காணோம் !''

'' இவ்வளவுதானே? மசால்வடைக் கணக்கில் எழுதி விடுங்க !''

'' உன் யோசனையைக் கேட்டால் உருப்பட்டாற்போலத்தான். இருக்கட்டும் ! இன்னுமா நீ தபாலுக்கு முத்திரை போடுகிறாய் !''

''பட்டாமணியம் வீட்டுக் கல்யாணம் வந்தாலும் வந்தது; முத்திரை அடிச்சு அடிச்சு என் கையெல்லாம் வலி கண்டுடுத்து, ஸார் !''

'' ஒரு கல்யாணத்துக்கு இரண்டு கல்யாணமாக நடக்கப் போகிறதல்லவா ? மொத்தம் ஆயிரம் கல்யாணக் கடிதாசு அச்சடிச்சாங்களாம்; அப்படியும் போதவில்லையாம்!''

'' இரண்டு கல்யாணமும் நடக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா ஸார்!''

''பின்னே நடக்காமல்? எல்லாம் நிச்சயம் ஆகிக் கடுதாசிகூட அச்சிட்டு அனுப்பிவிட்டார்களே !''

'' கடுதாசி அச்சிட்டால் சரியாய்ப் போச்சா ? நான் ஒரு ஜோசியனைக் கேட்டேன். இரண்டு கல்யாணத்தில் ஒன்று நடக்கிறது சந்தேகம் என்று சொன்னான்.''

''நீ என்னத்துக்காக இந்த விஷயமாய் ஜோசியம் கேட்டாய் ?''

''சும்மாத்தான் கேட்டு வைச்சேன்!''

'' இதுதான் உனக்கு ஜோலி போலிருக்கிறது. அதனாலேதான் மூன்று நாள் கடிதங்களை டெலிவரி செய்யாமல் வைத்திருக்கிறாய். பட்டாமணியம் வீட்டுக் கடிதங்களை உடனே கொண்டுபோய் அவரிடம் கொடுத்துவிடு, அப்பா ! ஏதாவது முக்கிய விஷயமாக இருக்கும்.''

''பிரமாத முக்கிய விஷயம்! அது கிடக்கட்டும், ஸார்! இரண்டு நாட்கள் முன்னே பின்னே கொண்டு போய்க் கொடுத்தால் தலையா போய்விடும்?''

'' தலை போகிறதற்காகச் சொல்லவில்லை, தம்பி ! கிட்டாவய்யர் நல்ல மனுஷர் ! நமக்குக்கூடக் கல்யாணத்துக்குக் கடுதாசி வைத்திருக்கிறார். ஒரு வேளை கல்யாணச் சாப்பாடு பலமாகக் கிடைக்கும். நீ வரப் போகிறாய், அல்லவா ?''

'' நான் வரமாட்டேன். நம்மைத் தனியாக வைத்தல்லவா சாப்பாடு போடுவார்கள் ? இந்தப் பார்ப்பாரச் சாதியே இப்படித்தான்.''

''பிராமணத் துவேஷம் பேசாதே, தம்பி! சாஸ்திரத்திலே என்ன சொல்லியிருக்கிறதென்றால், ஆதி காலத்தில் கடவுள் பிராமணர்களை முகத்திலிருந்தும், க்ஷத்திரியர்களைத் தோளிலிருந்தும்.....''

''நிறுத்துங்கள், ஸார் ! இந்தப் பழங்கதையெல்லாம் யாருக்கு வேணும்? எல்லாம் பிராமணர்களே எழுதி வைச்ச கட்டுக் கதைதானே! இந்தக் காலத்திலே பிராமணனும் கிடையாது ; சூத்திரனும் கிடையாது. எல்லாரும் மனிதர்கள் !''

''அப்படியானால், சாஸ்திரமெல்லாம் பொய்யா? சாஸ்திரம் பொய்யென்றால் கிரகணத்தைப் பார்! — என்று வசனம் சொல்கிறதே !''

'' வெள்ளைக்காரன்கூடத்தான் கிரகணத்தைக் கண்டுபிடிக்கச் சொல்கிறான். மனிதனுக்கு மனிதன் வித்தியாசப்படுத்தும் சாஸ்திரங்களைத் தீயிலே போட்டுக் கொளுத்த வேண்டும் !''

'' நீ இந்தச் சுயமரியாதைக்காரர்களின் கூட்டங்களுக்குப் போகிறாயோ?''

'' சுயமரியாதைக் கூட்டங்களுக்கும் போகிறேன். காங்கிரஸ் கூட்டங்களுக்கும் போகிறேன்.''

'' அப்படி என்றால் நீ உருப்பட்டாற்போலத்தான். போனால் போகட்டும். பட்டாமணியார் வீட்டுக் கடிதங்களை உடனே கொண்டு போய்க் கொடுத்துவிடு. அந்த பம்பாய் அம்மாவுக்கும் பெண்ணுக்கும்கூடக் கடிதங்கள் இருக்கின்றன.''

'' அந்த பம்பாய்ப் பெண் இருக்கிறதே ! அது சுத்த அரட்டைக்கல்லி!

நான் மூந்தாநாள் அவர்கள் வீட்டுக்குப் போயிருந்தேன். என்னைப் பார்த்து, டா, டீ, போட்டுப் பேசிற்று. 'இந்தா, அம்மா! டா, டீ எல்லாவற்றையும் பம்பாயிலே வைத்துக் கொள். இங்கே வேண்டாம்!' என்று சொல்லி விட்டேன்.''

''கிட்டாவய்யர் குழந்தையின் குணம் வராதுதான். ஆனால், வந்தபோது பம்பாய்ப் பெண்ணும் நல்ல குணமாய்த் தானிருந்தது. எட்டு நூறு ரூபாய் சம்பளக்காரன் கல்யாணம் பண்ணிக் கிறேன் என்றதும் கொஞ்சம் கர்வம் வந்திருக்கலாம்!''

''எட்டு நூறு சம்பளக்காரனாயிருந் தால் என்ன? எட்டாயிரம் சம்பளக் காரனாயிருந்தால் என்ன? யாராயிருந் தாலும் எனக்கு ஒன்றுதான்! டியூட்டி என்றால் டியூட்டி! சிநேகம் என்றால் சிநேகம்! அப்படி அந்த பம்பாய்ப் பெண்ணுக்குக் கல்யாணம் நடக்கிறது என்பதும் நிச்சயமில்லை; நின்று போனா லும் போய்விடும்!''

''அப்படி உன் வாயாலே நீ எதற் காகச் சொல்கிறாய்?''

''பின்னே வாயாலே சொல்லாமல் கையாலேயா சொல்லுவாங்க?''

இவ்விதம் சொல்லிக் கொண்டே பாலகிருஷ்ணன் தபால் பையை எடுத் துக் கொண்டு வெளியே புறப்பட்டான்.

பாலகிருஷ்ணன் வெளியே போய்ச் சிறிது நேரத்துக்கெல்லாம் சூரியநாராய ணன் தபால் சாவடிக்கு வந்தான். போஸ்டு மாஸ்டர் பங்காரு நாயுடுவைப் பார்த்து, ''எங்கள் வீட்டுக்கு ஏதா வது கடிதம் இருக்கிறதா, ஸார்?'' என்று கேட்டான்.

''ஓ! இருக்கிறதே! உனக்கு, அப்பா வுக்கு, பம்பாயிலிருந்து வந்திருக்கிற அம்மாவுக்கு, அந்த அம்மாளின் பெண் ணுக்கு — எல்லாருக்கும் இருக்கிறது. பாலகிருஷ்ணன் எடுத்துக் கொண்டு போயிருக்கிறான். எதிரே அவனைப் பார்க்கவில்லையா?''

''பார்க்கவில்லையே? எதிரே காண வில்லையே?'' என்று சொல்லிக் கொண்டே சூரியா வெளியேறினான்.


அப்போது சூரியா வெகு உற்சாக மான மன நிலையில் இருந்தான். அவன் இஷ்டப்படியே எல்லா ஏற்பாடுகளும் ஆகியிருந்தன. அவனுடைய முயற்சியி னால் லலிதாவுக்கும் பட்டாபிராமனுக் கும் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. இதில் இருதரப்பாருக்கும் வெகு சந் தோஷம். சீதாவின் கல்யாணத்தைத் தனியாக எங்கேயாவது ஒரு கோயி லில் நடத்திவிடலாம் என்று பம்பாய் அத்தை சொன்னாள். மற்றவர்களும் அதற்குச் சம்மதிப்பார்கள் போலிருந் தது. சூரியா அது கூடாது என்று வற் புறுத்தி இரண்டு கல்யாணங்களும் ஒரே பந்தலில் நடத்த வேண்டும் என்று திட்டம் செய்தான்.

இதனாலெல்லாம் உற்சாகம் கொண்ட சூரியா கல்யாண ஏற்பாடுகளில் மிகவும் சிரத்தை கொண்டு அப்பாவுக்கு ஒத் தாசையாகத் தானே பல காரியங்களைச் செய்து வந்தான். நல்ல வேளையாக எஸ். எஸ். எல். சி. பரீட்சையும் முடிந்து விட்டது. முகூர்த்தத் தேதிக்குப் பத்து



நாட்கள் முன்னதாகவே சூரியா கிராமத்துக்கு வருவது சாத்தியமாயிற்று.

மாப்பிள்ளை அழைப்புக்கு 'டிரஸ்' வாங்குவது சம்பந்தமாகச் சூரியா பட்டாபிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான். அதற்குப் பட்டாபியின் பதிலை எதிர்பார்த்து இன்று தபால்சாவடிக்கு வந்தவன் ஏமாற்றமடைந்தான். திரும்பிப் போகும்போது சாலையின் இருபுறமும் பார்த்துக் கொண்டு போனான். பாலகிருஷ்ணன் எங்கேயாவது சாலை ஓரத்தில் மரத்தின் மறைவில் உட்கார்ந்து சுருட்டுக் குடித்துக் கொண்டிருக்கலாம் அல்லவா ?



அவன் எதிர்பார்த்தது சரியாயிற்று. சாலைத் திருப்பம் ஒன்றில் வாய்க்கால் மதகடியில் பாலகிருஷ்ணன் உட்கார்ந்து ஒரு கடிதத்தைக் கவனமாகப் படித்துக் கொண்டிருந்தான்.

எவ்வளவு கவனமாக என்றால், சூரியா அவனுக்குப் பின்னால் வெகு அருகில் வந்து நின்றதுகூட அவனுக்குத் தெரியவில்லை.

சூரியாவுக்கு அப்போது ஒரு விசித்திரமான சந்தேகம் உதித்தது. ஆகையால் 'பாலகிருஷ்ணா' என்று கூப்பிடப் போனவன் அடக்கிக் கொண்டு கீழே பாலகிருஷ்ணன் பக்கத்தில் கிடந்த கடிதத்தின் உறையை உற்றுப் பார்த்தான். அதில் பம்பாய் அத்தையின் விலாசம் எழுதியிருந்தது.

சூரியாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ''அடே இடியட்! என்னடா செய்கிறாய்?'' என்று கர்ஜித்தான். பாலகிருஷ்ணன் திடுக்கிட்டுத் திரும்பி, ''என்னடா, என்னை 'இடியட்' என்கிறாய்? நான் ஒன்றும் இடியட் இல்லை. நீ இடியட்; உங்க அப்பா இடியட் ! உங்க தாத்தா இடியட்!'' என்றான்.

சூரியாவின் கோபம் எல்லை மீறிவிட்டது. ''என்னடா, குற்றமும் செய்துவிட்டுச் சக்கர வட்டமாகப் பேசுகிறாய்?'' என்று கர்ஜித்துக்கொண்டு பாலகிருஷ்ணன் கழுத்தில் கையை வைத்தான். உடனே பாலகிருஷ்ணன் சூரியாவின் பேரில் ஒரு குத்துவிட்டான். இருவரும் குஸ்திச் சண்டை செய்யத் தொடங்கினார்கள்.


மதகடியிலே சண்டை நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் சாலையில் ஒரு பெட்டி வண்டி வந்து கொண்டிருந்தது. அதில் சீதா, லலிதா, ராஜம்மாள் மூவரும் இருந்தார்கள். அவர்களுடைய கண்ணும் கவனமும் சண்டை போட்டவர்களின் மீது ஏககாலத்தில் சென்றன.

''ஐயோ ! இது என்ன? சூரியாவும் தபால்கார பாலகிருஷ்ணனும் சண்டை போடுகிறார்களே!'' என்று லலிதா கூவினாள்.

'' ஆமாண்டி ! இது என்ன வெட்கக் கேடு?'' என்றாள் சீதா.

ராஜம்மாள் மிக்க வருத்தத்துடன், ''சூரியா ! சூரியா ! இது என்ன நடு ரோட்டில் நின்று சண்டை? நிறுத்து!'' என்று கூவினாள்.

"கோகுலம் முதல் இதழே எங்களுக்குக் கிடைக்கவில்லை. இரண்டாவது இதழிலிருந்தாவது 'ரெகுலராக' வாங்கிக் கொடுத்தால்தான் நாங்கள் விளையாடுவோம்; சாப்பிட வருவோம்!"



உங்கள் குழந்தைகளுக்கு இனியும் ஏமாற்றமளிக்காதீர்கள்!

கோகுலம்

அடுத்த இதழ் 1-5-72 அன்று வெளியாகிறது


○○○

தனிப் பிரதி விலை 30 காசுகள்

வருட சந்தா ரூ. 7-00 ஆறு மாதம் ரூ. 3-50

இலங்கை சந்தா ரூ. 9-00 இதர நாடுகள் 18-00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக் கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)



நெதர்லண்ட்ஸ் செய்தி

திருமதி அன்னு ரீட்வெல்ட். பன்னிரண்டு வயதுப் பெண்ணுக இருந்தபோது வேலைக்குப் போனுள். சென்ற ஆண்டு அவள் அறுபத்தைந்து வயதை அடைந்தபோது வேலையிலிருந்து ஓய்வு பெற்ருள். ஓய்வு பெற்றவள் சும்மா இருக்கவில்லை. பன்னிரண்டு வயதில் விட்ட பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து படித்தாள். இப்பொழுது அவள், தனக்கும் பேரப் பிள்ளைகளாக இருக்கக்கூடிய பிள்ளைகளையெல்லாம்விடச் சிறப்பாகச் சரித்திரப் பாடத்தில் விருதுகள் பெற்றிருக்கிருள்.

இதன் ரகசியம் என்ன என்று கேட்டதற்கு: ''இது எனக்குச் சுலபம். ஏனெனில் சரித்திரப் பாடத்தில் வரும் காலகட்டத்தை நான் நேரிலேயே வாழ்ந்து கண்டவள் அல்லவா?'' என்ருள் அன்னு ரீட்வெல்ட்.

ராஜம்மாளின் குரல் கேட்டதும் இருவரும் சண்டையை நிறுத்தி வெட்கிப் போய் நின்ருர்கள்.

''சூரியா! வா! வண்டியில் ஏறிக்கொள்ளு! வீட்டுக்குப் போகலாம்!'' என்ருள் ராஜம்மாள்.

''அத்தை! இது விளையாட்டுச் சண்டை! நீங்கள் போங்கள்; நான் இதோ பின்னேடு வருகிறேன்'' என்ருன்.

''நிச்சயந்தானு? — பாலகிருஷ்ணு! சூரியா சொல்கிறது உண்மையா?'' என்று அத்தை கேட்டாள்.

''ஆமாம், அம்மா! நாங்கள் சும்மாத்தான் சண்டை போட்டோம்!'' என்ருன் பாலகிருஷ்ணன்.

வண்டி மேலே நகர்ந்தது.

சீதா லலிதாவைப் பார்த்து, ''நீ இவ்வளவு சமர்த்தாயிருக்கிருயே, லலிதா! உன் அண்ணு சூரியா மட்டும் ஏன் இத்தனை அசடாயிருக்கிருன்?'' என்ருள்.

''அப்படிச் சொல்லாதே, சீதா! சூரியா ஒன்றும் அசடு இல்லை. ரொம்பச் சமர்த்து; மிக்க நல்ல பிள்ளை. சண்டை போட்டதற்கு ஏதாவது காரணம் இருக்கும்; அப்புறம் தனியாக விசாரித்தால் தெரியும்!'' என்ருள் ராஜம்மாள்.

வண்டிக்காரனும் சேர்ந்து, ''ஆமாம், அம்மா! நம்ம சின்ன ஐயா ரொம்பச் சமர்த்துப் பிள்ளை, இப்போது கொஞ்ச நாட்களாய்த்தான் ஒரு மாதிரியாய் இருக்கிருர்!'' என்ருன்.

வண்டி கொஞ்ச தூரம் போனபிறகு சூரியா, ''பாலகிருஷ்ணு! உன் மேல் நான் கை வைத்தது பிசகுதான்; அதற்காக வருத்தப்படுகிறேன். ஆனுல் நீ செய்த காரியமும் பிசகுதானே? பிறருக்கு வந்த கடிதத்தை நீ பிரித்துப் பார்க்கலாமா? அதுவும் நீ தபால்காரனுயிருந்து கொண்டு இவ்விதம் செய்யலாமா!'' என்ருன்.

''தப்புத்தான்; ஒப்புக் கொள்கிறேன். ஆனுல் நல்ல எண்ணத்துடனேயேதான் செய்தேன். இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தால் உனக்கும் அது தெரியும்!'' என்று சொல்லிப் பாலகிருஷ்ணன் கடிதத்தைச் சூரியாவின் கையில் கொடுத்தான்.

சூரியா அந்தக் கடிதத்தில் முதல் நாலைந்து வரிகள் படித்தவுடனேயே அவனுடைய முகம் சிவந்தது.

''இந்த மாதிரி கடிதம் இது என்பது உனக்கு எப்படித் தெரியும்?'' என்று பாலகிருஷ்ணனைப் பார்த்துச் சூரியா கேட்டான்.

''நேற்று ஒரு கார்டு வந்தது. அதைத் தற்செயலாகப் பார்த்தேன். கன்னு பின்னுவென்று எழுதியிருந்தது. இந்தக் கவரைப் பார்த்ததும் ஒரு மாதிரி சந்தேகம் உதித்தது. பிரித்துப் பார்ப்பது நல்லது என்று எண்ணினேன். நான் சந்தேகப்பட்டபடியே இருக்கிறது. அதற்கென்ன? உனக்கு ஆட்சேபம் இல்லையானுல் இதை ஒட்டி அந்த அம்மாளிடம் டெலிவரி செய்துவிடுகிறேன். இனிமேல் வரும் கடிதங்களையும் அப்படியே கொடுத்து விடுகிறேன். ஆனுல் என் மேலே சுலபமாகக் கையை வைக்கலாம், என்னை மிரட்டிவிடலாம் என்று மட்டும் நினைக்காதே! நான் நல்லவனுக்கு நல்லவன்; கில்லாடிக்குக் கில்லாடி! தெரியுமா?''

''நான் உன் மேல் கை வைத்தது தப்பு என்றுதான் முன்னேயே சொன்னேனே! இப்போதும் சொல்கிறேன். அதை மறந்துவிடு. எனக்கு நீ ஒரு உதவி செய்ய வேண்டும். இந்தக் கல்யாணம் நடந்து முடிகிற வரையில் எங்கள் வீட்டுக்கு வருகிற கடிதங்களையெல்லாம் என்னிடமே கொடு. நான் பார்த்து உசிதப்படி அவரவர்களிடம் சேர்ப்பித்து விடுகிறேன்!'' என்ருன் சூரியா.

''அது ரூலுக்கு விரோதம். கடிதங்களை அந்தந்த விலாசத்தாரிடந்தான் சேர்ப்பிக்க வேண்டும். இருந்தாலும் நீ கேட்கிறதற்காக அப்படியே உன்னிடம் கொடுக்கிறேன். ஆனுல் ஒரு விஷயம் ஞாபகம் வைத்துக் கொள். நான் பெரிய ரவுடி; யாருக்கும் கொஞ்சம் கூடப் பயப்பட மாட்டேன்!'' என்ருன் பாலகிருஷ்ணன். (தொடரும்)

இன்றைய பிரச்னை.3

வேலை நிறுத்தம் நிற்குமா?

சேஷசாயி பேபர் அண்ட் போர்ட் நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டரும் பிரபல வழக்குரைஞருமான திரு. எஸ். விசுவநாதன் இன்று வேலை நிறுத்தம், கதவடைப்பு முதலிய தொல்லைகள் பரவலாக ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களையும் அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளையும் விளக்குகிறார்.



பல தொழிலாளர் சங்கங்களுக்குத் தலைமை வகிப்பவர்கள் அந்த அந்தத் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளிகளுள் ஒருவராக இருப்பின் இன்றுள்ளது போல் இவ்வளவு சிக்கல்கள் இரா; மாறாக, வெளியார் தலைமை வகிப்பதாலே குழப்பங்கள் மிகுதியாகின்றன என்ற கருத்தும் பொதுவாக நிலவுகின்றது. இது சரிதானா?



அனுபவம் மிக்க வழக்கறிஞர்கள் தொழிலாளர் சங்கங்களுக்குத் தலைமை வகிப்பது வரவேற்கத்தக்கது. தொழிலாளிகளின் நலனில் அக்கறையுள்ள தொண்டர்கள் (Public worker) வெளியாராக இருந்தாலும், தொழிலாளர் சங்கங்களுக்குத் தலைமை வகிப்பது வரவேற்கத்தக்கதே. தொழிலாளிகள், முதலாளிகள் இரு சாராருக்குமே இது நன்மை பயக்கக்கூடிய ஏற்பாடு. ஆனால் அரசியல் கட்சிகள் தொழிலாளர் சங்கங்களில் புகுந்து குட்டையைக் குழப்புகிறார்களே — அந்தப் புற்றுநோய்தான் அபாயமானது! இன்று நம் நாட்டில் மூன்று பெரிய தொழிற் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை அரசியல் செல்வாக்கு உள்ளவை. வெளியார் கூறும் நன்மை பயக்கக்கூடிய யோசனைகளைப் புறக்கணிக்கும் அளவுக்கு நமது தொழிலாளர் சங்கங்கள் வளர்ச்சி அடையவில்லை. பிராந்திய அரசியல் கட்சிகளும் தொழிலாளர் சங்கங்களில் ஊடுருவி ஆதாயம் தேடி வருகின்றன. இதைத்தான் நாம் வரவேற்பதற்கில்லை.

தொழிலாளர் சங்கங்களில் அவை ஏன் தலையிடுகின்றன? என்ன லாபம்?

ஆதாயம் இல்லாமலா? ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் சேர்ந்து தங்கள் நலனுக்காக உருவாக்கிய அமைப்பு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வெளி நபர்களுக்கு மிகவும் சாதகமாக அமைகின்றன. கடற்கரையில் மக்கள் குழுமியுள்ளனர். காற்று வாங்க வருகின்றனர். பாட்டுக் கேட்கவும், பொழுது போக்கவும் வருகின்றனர். கடலை விற்பவன் இந்த மக்கள் கூட்டத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறான். வேறு எதற்காகவோ கூடியிருக்கும் மக்களிடையே தன்னுடைய பொருட்களை விற்கிறானல்லவா? அதுபோலத்தான் இதுவும்! அரசியல்வாதிகள் தங்களுடைய கருத்துக்களைத் திணிக்க, விற்பனை செய்ய, தொழிலாளிகள் தங்கள் நலனுக்கென அமைத்துக் கொண்ட சங்கங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

அதாவது வெளி நபர், தொழிலாளர் சங்கங்களில் ஊடுருவுதல் நம் நாட்டில் உள்ளது போலவே தான் பிற நாடுகளிலும் இருக்கிறதா?

பிரிட்டனில் வெளியார் தலையீடு மிகவும் குறைந்து விட்டது. தொழிலாளிகள் விழித்துக்கொண்டு விட்டனர். அமெரிக்காவிலும் இந்த விழிப்புணர்ச்சியின் காரணமாக அரசியல்வாதிகளின் ஊடுருவல் குறைந்துவருகிறது. நம் நாட்டில், ஒரே தொழிலகத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த தொழிற் சங்கங்கள் இயங்குவதுதான் பெரிய தொல்லையாக உள்ளது.

அதனால் ஏற்படும் விளைவுகளைக் கொஞ்சம் விளக்க முடியுமா?

''ஒரு காகிதத் தொழிற்சாலை இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதற்கு ஒரு தொழிலாளர் சங்கம் இருக்கிறது. இது போன்று வேறு சில காகிதத் தொழிற்சாலைகளும் இருந்தால், எல்லாக் காகிதத் தொழிற்சாலைகளுக்கும் பொதுவாக ஒரு தொழிலாளர் சங்கம் அமைந்து செயல்படுவது நல்லதா அல்லது ஒவ்வொரு 'யூனிட்' அல்லது தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் இருப்பது நல்லதா என்பதுதான் பிரச்சினை. தொழிலாளர் சங்கம் அமைத்துக் கொள்வது என்பது அவர்களின் அடிப்படை உரிமை. போட்டிச் சங்கங்கள் அமைவதையும் இந்த ஜீவாதார உரிமை காரணமாகவே, தடுக்க இயலாது. தொழிலாளர்களுக்குச் சங்கம் வேண்டியது அவசியமே. அவை நல்ல முறையில் செயல்பட்டால் இரு சாராருக்குமே நல்லதுதான். பலமுள்ள ஒரே சங்கம் செயல்படுவதை முதலாளிகளே வரவேற்பார்கள். ஆனால் மேற்கூறிய இருவிதமாகவும் இல்லாமல் ஒரே தொழிற்சாலையில் பல்வேறு சங்கங்கள் செயல்படுவது தொழிலாளர் நலனுக்கே உலை வைப்பதாகத்தான் முடியும் !

இதைத் தவிர்க்கவே முடியாதா ?

அரசியல் சாஸனம் தொழிற் சங்க உரிமையை வழங்குகிறபடியால், போட்டிச் சங்கங்களைச் சட்டப்படி தவிர்க்க முடியாது. ஆனால், தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்நிலை ஏற்படாமல் தடுக்கத் தொழிற்சங்கங்களே முன்வர வேண்டும். ஒரு தொழிற்கூடத்தில் ஒரு தொழிலாளர் சங்கத்துக்கு மேல் அமைந்து செயல்படக் கூடாது என்ற நிலையைத் தோற்றுவிக்கும் கட்டுப்பாட்டினைத் தொழிற்சங்கங்களே அமல் செய்ய வேண்டும்.

இரண்டாயிரம் பேர்கள் வேலைசெய்யும் ஒரு தொழிற்கூடத்தில் பத்துப் பேர் அல்லது இருபது பேர் கூடித் தனித்தனிச் சங்கங்கள் அமைத்துக் கொள்ள முடியுமா?

முடியாது. குறைந்தபட்சம் பதினைந்து சதவிகிதம் பேர் சேர்ந்தால் ஒரு தொழிலாளர் சங்கத்தை அமைக்கலாம். அதாவது ஒவ்வொரு தொழிற்சாலையிலும் உயர்ந்தபட்சம் ஆறு சங்கங்கள் செயல்படுவது சட்டப்படி சாத்தியம். நடைமுறையில் இவ்வளவு இராது. ஏனென்றால், குறைந்த உறுப்பினர் எண்ணிக்கையுள்ள சங்கம் பலவீனமாகவே இருக்குமல்லவா ? பதினைந்து சதவிகிதத்தினருக்கும் குறைந்தவர்கள் சங்கம் அமைத்தால் அதன் அங்கீகரிப்பை மறுக்க முடியும்.

தீபாவளி சமயத்தில்தான் வேலை நிறுத்தம், போராட்டங்கள் எல்லாம் தொழிற்கூடங்களில் அதிகமாக நிகழ்கின்றன. காரணம் போனஸ் பிரச்சினை. இதற்கு நல்ல முறையில் தீர்வு காண முடியாதா?

ஏன் முடியாது? குறைந்தபட்சம் இவ்வளவு சதவிகிதம் போனஸ் வழங்க வேண்டும் என்று விதி உள்ளது. விதியை அமல் செய்தாலே போதும் — பிரச்சினை தீர்ந்துவிடும். அரசு தொழில் துறையினர் தொழிலாளர் சட்டத்தின் 12 (3)வது பிரிவை அமல் செய்தாலே போதும். குறிப்பிட்ட காலத்துக்கு இன்ன அளவு போனஸ் வழங்குவது என்று தொழிலாளிகளும் நிர்வாகமும் ஓர் ஒப்பந்தம்செய்து கொண்டால் அதனை அமல் செய்ய வேண்டுமல்லவா? நடைமுறையில் அது புறக்கணிக்கப்பட்டே வருகிறது. ஒப்பந்தத்தை மீறி அதிக அளவு வேண்டுமென்று தொழிலாளிகள் கேட்பதும், அவர்களுக்குச் சிலர் தூபம் போடுவதும், நிலைமை முற்றிப் போன பிறகு மத்தியஸ்தம் செய்ய முன்வருகிறவர்களே விதிகளுக்கு மாறாகச் செயல்படுவதும் சகஜமாகிவிட்டது. அது காரணமாகவே போனஸ் குறித்து வேலை நிறுத்தங்கள் அதிகமாகின்றன.

ஒப்பந்தத்தை மீறினால் அதற்குத் தண்டனை இல்லையா?

25, 26வது பிரிவுகளின்படி தொழில்துறை அதிகாரிகள் தண்டனை வழங்க உரிமை உண்டு. ஆனால் அந்த உரிமை காகித அளவில்தான் இருக்கிறது.

எப்படி?

தொழிலாளருக்கும் நிர்வாகத்தினருக்குமிடையே எழும் தகராறு மத்தியஸ்தத்துக்கு வரும்பொழுது என்ன நடக்கிறது, தெரியுமா? தொழிலாளர்கள் இருபது சதவிகிதம் கேட்கிறார்கள் என்றும், நிர்வாகம் ஒப்பந்தப்படி பன்னிரண்டு சதவீதமே கொடுக்க முன்வருகிறதென்றும் வைத்துக் கொள்வோம். மத்தியஸ்தம் செய்யும் நபர் பதினைந்து சதவிகிதம் கொடுக்கும்படி பரிந்துரைப்பார். ''பன்னிரண்டு சதவீதம் கொடுப்பதாக ஒப்பந்தம் இருக்கிறதே?' என்று நிர்வாகத்தினர் கேட்டால், 'சட்டம், ஒப்பந்தம் எல்லாம் கிடக்கட்டும், சார் ! அங்கே பதினைந்து கொடுக்கிறார்கள், இங்கே பதினெட்டு கொடுக்கிறார்கள். நீங்கள் ஒப்பந்தத்தையே வற்புறுத்திக் கொண்டிருந்தால் எப்படி? போகட்டும், பாவம் ! நீங்கள்தான் கொஞ்சம் விட்டுக் கொடுங்களேன் ! பதினைந்து சதவீதம் கொடுத்து விடுங்கள்; எல்லாம் சுலபமாகத் தீர்ந்துவிடும்!' என்கிற ரீதியில் அந்த அரசியல் தலைவர் பரிந்துரைப்பார். இது பிரத்தியட்ச நிலை — நாடு முழுதுமே. 'ஒப்பந்தத்தை நீங்கள் மீறிவிட்டீர்கள்! 25, 26வது பிரிவுப்படி அதற்கான தண்டனையை நீங்கள் அனுபவித்தே தீர வேண்டும்! நாங்களும் அதனை அமல் செய்தே தீருவோம்' என்று தொழில் துறை அதிகாரி கண்டிப்புடன் நடந்து கொள்ளுவதே இல்லை ! இந்த நிலையில் ஒப்பந்தங்களுக்கு என்ன மதிப்பு இருக்கும் ? ஏட்டளவில் மட்டுமே ஒப்பந்தம் இருப்பதானால், அப்படி ஓர் ஒப்பந்தத்தான் எதற்கு?

இந்த ஏற்பாடு பொதுமக்களையும் பாதிக்கிறதல்லவா?

நிச்சயமாக! பொருட்களை உபயோகிக்கும் மக்கள் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும். உபரி போனஸ் கொடுத்தால் கைநஷ்டம் ஏற்படும் என்று தெரிந்தால் நிருவாகம் விலையை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகும் அல்லவா? இப்படி ஒரு தாற்காலிக உடன்பாட்டை ஏற்படுத்திய தலைவர் அப்புறம் தலைகாட்ட மாட்டார்! இதன் பயனாக, மக்களுக்குச் சட்டம், ஒப்பந்தம் இவற்றுக்குக் கட்டுப்பட வேண்டும் என்ற எண்ணமே மறைந்துவிடுகிறது. சட்டத்துக்கு மதிப்பு வைத்தால்தான் தொழில்துறை முன்னேறும். நாடு வளம் பெறும்.

அப்படி எவ்வளவு சட்டங்கள் உள்ளன - தொழில் துறை குறித்து?

மொத்தம் நாற்பத்திரண்டு சட்டங்கள். அவற்றுள் முப்பத்தொன்பது மத்திய அரசுச் சட்டங்கள், மூன்று ராஜ்ய சட்டங்கள். அதாவது தமிழ் நாட்டுக்கு மட்டும் உரியவை. இவற்றை அமுல் நடத்தினாலே போதும்! இந்தச் சட்டங்களைப் பற்றிய முழு விவரமும் சம்பந்தப்பட்ட யாருக்குமே பொதுவாகத் தெரியவில்லை. இந்தச் சட்டங்களை விளக்கும் வகுப்புக்களைத் தொழிலாளருக்கென நடத்துவது நல்ல பலனளிக்கும். இந்தச் சட்டங்களையெல்லாம் அறியாத காரணத்தினாலேயே கடந்த ஆறு ஆண்டுகளாகத் தொழில் துறையில் குளறுபடிகள் அதிகரித்துள்ளன. தொழில்களின் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டுள்ளது. தாற்காலிக உடன்பாடுகளுக்காக அவ்வப்பொழுது எழும் சிக்கல்களைச் சமாளிக்க வேண்டி, அடிப்படைக் கொள்கைகளையும் ஒப்பந்தங்களையும் காற்றில் பறக்க விடும் நிலைமை மாற வேண்டும்

அயல்நாடுகளில், தொழிலாளியின் சில்லறைத் தவறுகளுக்கான தண்டனையைத் தொழிலாளர் சங்கமே வழங்குவதாகக் கூறப்படுகிறதே. இது உண்மையா? பயனுள்ளதா?

ஏன், இம்முறை நம் நாட்டிலும் சில இடங்களில் கையாளப்படுகிறது. எனக்குத் தெரிந்து, ஒரு தொழிலகத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு தொழிலாளியை வேலைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று தொழிலாளர் சங்கமே ஆட்சேபித்துள்ளது. தொழிலாளி தெரிந்தே தவறு இழைப்பதை சங்கம் ஆதரிப்பதில்லை — பொதுவாக.

நமது தொழிலாளர்களை மேல்நாட்டுத் தொழிலாளிகளுடன் ஒப்பிட முடியுமா?

எந்த நாட்டுத் தொழிலாளியின் ஆற்றலுக்கும் குறைந்ததன்று, நமது தொழிலாளியின் ஆற்றல். சூழ்நிலை மாறினால், நமது தொழிலாளர்களின் முழுத் திறமையும் வெளிப்படும். நாடும் முன்னேறும்.

பேட்டி: '**பாணன்**'

மறக்க முடியாத  நிகழ்ச்சி!

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பு நல்லதொரு கார்த்திகைத் திருநாளில் குடும்பத்துடன் முருகர் தரிசனத்துக்குப் பழனிமலை சென்றோம். அஞ்சல் அலுவலகத்தில் எனக்கு அளிக்கப்பட்ட பதவி உயர்வுக்காக, என் தந்தை அன்றைக்கு எனக்கு ஒரு பவுன் அளவில் முருகர் திரு உருவம் பதித்த மோதிரத்தை அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார். அதை முருகர் காலடியில் வைத்து, அபிஷேக நீர்த்தம் அதன் மேல் விழுந்த பிறகு வாங்கி அணிந்துகொள்ள வேண்டும் என்ற என் ஆசையைப் பட்டரிடம் தெரிவித்தேன். அவரும் அவ்வாறே செய்ய ஒப்புக் கொண்டு மோதிரத்தை வாங்கிச் சென்று முருகர் காலடியில் வைத்தார். அபிஷேகங்கள் அனைத்தும் முடிந்த பிறகு பட்டரைத் தேடினால் பார்க்க முடியவில்லை. சுமார் அரை மணி நேரம் கழித்து வந்த பட்டர் "மோதிரத்தைக் காணவில்லை. எல்லா இடமும் தேடியாகிவிட்டது. அபிஷேக நீர்த்தத்துடன் எங்கேயோ கலந்துவிட்டது. மன்னித்துக் கொள்ளுங்கள். இன்னும் தேடிப் பார்க்கிறேன். கிடைத்தவுடன் கொண்டு வந்து தருகிறேன்" என்று கூறினார். நான் அடைந்த வருத்தம் சொல்லி மாளாது.

இதற்கிடையில் என் தாயார், பட்டரின் உதவியாளர் ஒருவரிடம் கொஞ்சம் அபிஷேக பஞ்சாமிர்தம் கொண்டுவரச் சொல்லிச் சிறு பாத்திரம் ஒன்றைக் கொடுத்தனுப்பி யிருந்தார். உதவியாளர் பாத்திரத்தில் பஞ்சாமிர்தம் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போய்விட்டார். பாத்திரத்திலிருந்த அபிஷேக பஞ்சாமிர்தத்தை என் அன்னை அனைவருக்கும் விநியோகித்துக் கொண்டு வந்தார். இறுதியாக, கவலையுடன் ஓர் ஓரத்தில் உட்கார்ந்திருந்த என்னிடம் மீதிப் பஞ்சாமிர்தத்தை எடுத்துக்கொள்ளச் சொல்லிப் பாத்திரத்தைக் கொடுத்தார். நான் இடது கையில் பாத்திரத்தை வைத்துக்கொண்டு வலது கையில் பஞ்சாமிர்தத்தைக் கொஞ்சம் ஊற்றினேன். அடுத்த விநாடி புல்லரித்துப் போனேன். என் தங்க மோதிரம் பஞ்சாமிர்தத்துடன் சேர்ந்து என் கையில் வந்து விழுந்தது!


அபிஷேக நீர்த்தம் அதன் மேல் படவேண்டும் என்று நான் நினைத்தேன். ஆனால் என் மோதிரம் பஞ்சாமிர்தத்திலேயே குளித்து என்னிடம் திரும்பி வந்துவிட்டது!

-ஆர். பாலவெங்கடசுப்பிரமணியன், மதுரை - 1


லெஃப்டினண்ட் சுலேமான், கிராமத்தைச் சேர்ந்த கிழங்களைச் சுட்டுக் கொல்லவில்லை. அவர்களைப் பயமுறுத்தி இளைஞர்களைப் பற்றிய விவரங்களை அறிவதே அவன் நோக்கம். தங்களுக்குத் தாங்களே சவக் குழிகள் தோண்டிக் கொள்ள வேண்டும் என அவர்களுக்கு அவன் உத்தரவிட்டதும் அச்சுறுத்தவே. அவன் நோக்கம் நன்கு நிறைவேறியிருக்கும், அகிலாவின் குண்டு கிழவன் நெஞ்சில் பாயாதிருந்திருந்தால்.
௩
அன்பே, அகிலா!
கதை: குமரன்
சித்திரம்: விஜயா
சே! இங்குள்ள முக்தி வாஹினி படையினரை மூட்டைப் பூச்சிகளை நசுக்குவது போல் நசுக்கியிருப்பேன். கெட்டது காரியம்!
ஆத்திரம் அதிகரித்தது சுலேமானுக்கு...
இந்தக் கிழங்களை யெல்லாம் கசக்கிப் பிழிந்து வேலை வாங்குங்கள்!
ராணுவத் தளவாடங்களைச் சுமப்பது, கூடாரம் அமைப்பது போன்ற பல வேலைகளையும் கிழவர்களும் கிழவிகளும் அடிமைகளாகச் செய்தனர். பாக் ராணுவம் சோம்பிக் கிடந்தது.
அன்றிரவு பெற்ற மனம் ஒன்று பித்தாகிக் காளி கோயிலுக்குச் சென்றது.
பாவம், நான் முழுதும் அறியாப் பட்டினி! அவளுக்குப் பிடித்தமான பணியாரம் செய்து எடுத்துப் போகிறேன்.
ஊர் எல்லை தாண்டிச் சற்றுத் தூரத்தில் இருந்த காளி கோயிலுக்கு ஒரு நிலவறை. பாக் துருப்புக்கள் முன்னேறி வருகின்றன என அறிந்ததுமே கிராமத்திலிருந்த இளம் பெண்களை அங்கு மறைந்திருக்கச் செய்திருந்தனர் முக்தி வாஹினி படையினர்.
கிழவி திருட்டுத் தனமாகக் கிராமத்திலிருந்து நழுவுவதைப் பார்த்து விட்டுப் பின் தொடர்ந்தான், பாக் சிப்பாய் ஒருவன்.
காளி கோயிலுக்குப் போகிறாளே? பிரார்த்தனை செய்யவா? அந்த ராத்திரியில் என்ன பூஜை?


காவலணியைக் கூடக் கழுகிருமல் கோவிலுக்குள் சென்றான் அந்தச் சிப்பாய். நிலவறையருகே காவலிருந்தாள் அலிமா.
யார் அது?
நான் தான் அலிமா! ஆறுமாதத்துக்கான தின்பண்டம் கொண்டு வந்தேன். உங்கள் எல்லோருக்கும் தாராளமாய் இருக்கிறது. பசியைத் தாங்கும் வயதா உங்களுக்கு?
பட்டினி கிடந்து நாங்கள் செத்தாலும் பாதகமில்லை. நீ வந்திருக்கக் கூடாது. யாராவது உன்னைப் பின் தொடர்ந்திருந்தால்?
ஒரு வருத்தமும் தெரியாது அலிமா! கதவைத் திற. நீயும் வந்து சாப்பிடு.
நிலவறைக்குள் இருவரும் இறங்கிச் சென்றதும்....
கொஞ்சமாகக் கதவைத் திறந்து பார்க்கிறேன்....
எட்டிப் பார்த்தவன் கண்ட காட்சி....
உம்... பணியாரம் பிரமாதம்!
இன்னும் கொஞ்சம் தாயேன்
நல்ல பசி எனக்கு
பாவி சிப்பாயின் கண்கள் காமப் பசி கொண்டு அகல விரிந்தன.
பெண்கள்! அத்தனை பேரும் இளம் பெண்கள்!
லெப்டினண்ட் சுலேமானிடம் தான் கண்ட காட்சியை விவரிக்க ஓட்டமாய் ஓடினான் அந்தக் கயவன்.

தொடரும்....



பஜாஜ் விசிறிகள்
வைபோகம்
பஜாஜ் மயூர் சீலிங் மின் விசிறி
900 1200 மிமி நீளங்கள்
bajaj
பஜாஜ் பஹார்
சீலிங் மற்றும் மேசை மின் விசிறிகள்
வசதியில் ஒரு புதிய அனுபவம்
பஜாஜ் ஸுபர் டீலக்ஸ் சீலிங் மின் விசிறி
900, 1050, 1200 மற்றும் 1400 மிமி நீளங்கள்
பஜாஜ் பிடூடி மின் விசிறி 500 மிமி நீளம்
பஜாஜ் பிடூடி மின் விசிறி 400 மிமி நீளம்
MEMBER
FAIR TRADE PRACTICES ASSOCIATION
பஜாஜ் பிடூடி மின் விசிறி 225 மிமி நீளம் இரட்டை வேகம்
bajaj
பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
45-47, வீர் நரிமான் ரோடு, பம்பாய்-1
இந்தியாவெங்கிலும் கிளைகள்
heros' BE-119 A TM



கவிமணி

கவிமணியின் தமிழ்ப்பணி

★ வெகுமதிகளை வேண்டாம் என்றவர்!

★ ஆசிய ஜோதி பிறந்தது எப்படி?

★ பறவைக்காசா? பறவைக்கரசா?

சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறக் கட்டளையின் கீழ் நடைபெறும் கல்கி நினைவுச் சொற்பொழிவுகளை இவ்வாண்டு புலவர் திரு மு. சண்முகம் பிள்ளை அவர்கள் 'கவிமணியின் தமிழ்ப் பணி' என்ற தலைப்பில் மூன்று நாட்கள் (ஏப்ரல் 3, 4, 5 தேதிகள்) நடத்தினார். சென்னை பல்கலைக் கழக தமிழ்த் துறைத் தலைவர் திரு ந. சஞ்சீவி தலைமை வகித்தார்.


முதல் நாள் புலவர் திரு மு. சண்முகம் பிள்ளை அவர்கள் கவிமணியின் வாழ்க்கையில் முக்கியமான நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டார். கவிமணியவர்கள், நாகர்கோவில் பகுதியான நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவர்கள். அந்த நாளில் நாஞ்சில் நாடு திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த பகுதியாக இருந்தது. கவிமணியவர்கள் தமது வாழ்க்கையைத் திருவனந்தபுரத்தில் ஒரு மகளிர் பள்ளியில் தமிழாசிரியராகத் தொடங்கினார். திரு சிவராஜ பிள்ளை எஸ். வையாபுரிப் பிள்ளை, செய்குதம்பிப் பாவலர், கி. இலக்குமணப் பிள்ளை போன்ற பெரும் தமிழறிஞர்களின் கூட்டுறவும் நட்பும் கிடைக்கலாயின.

பல ஆண்டுகள் திருவனந்தபுரத்து மகளிர் பள்ளியில் சீரும் சிறப்புமாகப் பணியாற்றினார் கவிமணி. அப்பள்ளிக்குப் புதிதாக வந்த ஒரு தலைமை நிர்வாகி, "பெண் ஆசிரியர்களே உள்ள ஒரு பெண்கள் பள்ளிக்குத் தமிழாசிரியர் மட்டும் ஆடவராக இருப்பானேன்?" என்று கவிமணியையே கேட்டு விட்டார். "இருக்க வேண்டிய அவசியமில்லைதான்!" என்று அந்தக் கணமே தமது வேலையை ராஜிநாமா செய்துவிட்டு நாகர்கோவிலுக்கு அண்மையிலுள்ள புத்தேரியில் குடியேறினார்.

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், கவிமணியைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி, விருந்து வைத்து, ஆயிரம் ரூபாய் பரிசும் கொடுத்தார். கவிமணி அவர்கள் அப்பணத்தை வாங்க மறுத்ததும், எப்படியும் அத்தொகையைக் கவிமணியவர்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று வெள்ளிப் பாத்திரங்களாக மாற்றி அனுப்பி வைத்தார். மீண்டும் கவிமணி அப்பாத்திரங்களைப் பணமாக மாற்றி, திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்துக்கு ஓர் அறக் கட்டளை நியமிக்க அளித்துவிட்டார்.

ராஜாஜி, டி. கே. சி., கல்கி மூவரும் கவிமணி இருக்கும் இடம் தேடி 1940ம் ஆண்டில் சென்ற நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார் சண்முகம் பிள்ளை. அப்போது ஆந்திரா உள்ளிட்ட சென்னை மாகாணத்துக்கு ராஜாஜி பிரதம மந்திரி. நாட்டிலுள்ள பெரிய மனிதர்கள் எல்லாரும் ராஜாஜி இருக்கும் இடத்துக்குத் தான் தேடிப் போவார்கள். கவிமணி ஒருவர் விஷயத்தில்தான் ராஜாஜி பழங்களுடன் கவிமணியின் வீட்டுக்குச் சென்று அளவளாவி விட்டு வந்தார். கவிமணியின் கவிதையிடமும் கவிமணியிடமும் தமிழகமே ஈடுபாடும் மதிப்பும் கொண்டுள்ளது என்பதைக் காட்டத் தலைவர் ராஜாஜி இப்படியொரு செயல் புரிந்தார்! இந்நிகழ்ச்சி குறித்து நெஞ்சுருகிக் கவிமணி பிற்காலத்தில் பாடிய பாடல்கள் அனைவருடைய நெஞ்சத்தையும் தொட்டு விடக் கூடியவை.


அடுத்த நாள் கவிமணியின் கவிதை நயங்களையும் கவிபாட எழுந்த சந்தர்ப்பச் சூழ்நிலைகளையும் பற்றி திரு மு. சண்முகம் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார்.



திரு சண்முகம் பிள்ளை

காலஞ்சென்ற சொ. முருகப்பா அவர்களின் வேண்டுகோளின் மீது, "கருணைக் கடல்" பாட நேர்ந்த விவரத்தைக் குறிப்பிட்டார். சொ. முருகப்பா ஜீவகாருண்யப் பணியில் ஈடுபட்டிருந்த காலத்தில், கவிமணிக்கு எட்வின் ஆர்னல்ட் என்ற ஆங்கிலக் கவிஞர் எழுதிய 'லைட் ஆஃப் ஏஷியா' என்ற நூலை அனுப்பி, அதன்

நாடகமே ருஷ்யா!



சிறுவர் சிறுமியருக்கான நாடகக் குழுவை உலகில் முதன் முதலாக ஏற்படுத்தியது சோவியத் யூனியன்தான். இன்று இத்தகைய குழுக்கள் 44 அந்நாட்டில் உள்ளன.

நாடக மேடையை உயர் லட்சிய நோக்கங்களுக்காகச் சோவியத் யூனியன் பயன்படுத்திக் கொண்டது போல் வேறு எந்த தேசமும் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

பெரியவர்களுக்கான தொழில் முறை நாடகக் குழுக்கள் 500 உள்ளன, அமெச்சூர்கள் நூற்றுக் கணக்கில் உள்ளனர்; சென்ற ஆண்டு மட்டும் தொழில் முறை நாடகக் குழுவினரின் நாடகங்களை 110,000,000 மக்கள் பார்த்தார்கள்.

இளம் சிறுர்கள், உடல், மனம், அறிவு ஆகிய எல்லாவிதங்களிலும் ஆரோக்கியமான வளர்ச்சி பெற வேண்டும் என்று லெனின் விரும்பினர். அதற்கு அனுசரணையாக சோவியத் நாடக மன்றங்கள் விளங்குகின்றன. வீரம், தேசப்பற்று, உழைப்பின் உயர்வு, ஒழுக்கம், சத்தியம், சிநேக தர்மம் போன்ற நற்குணங்களை நாடகங்கள் மூலம் வலி புறுத்துகின்றன.

குழந்தைகள் பொம்மலாட்டம் பார்க்கிறார்கள். ஆண்டொன்றுக்கு 70,000 காட்சிகள் நடக்கின்றன. 20 மில்லியன் குழந்தைகள் கண்டு களிக்கிறார்கள்.

இளைஞர்களுக்கான நாடகக் குழுக்கள் ஓராண்டில் 20,000 நிகழ்ச்சிகள் நடத்துகின்றன. வாலிப வயதினரான 12 மில்லியன் நபர்கள் ரசிக்கிறார்கள்.

ஆண்டுதோறும் நாடகக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது.

அடிப்படையில் பிம்பிசாரன் நடத்திய யாகத்தை புத்தர் நிறுத்திய வரலாற்றைத் தமிழில் பாடலாக வடித்துத் தரும்படி கேட்டார். இவ்வாறு தொடங்கிய பணி தொடர்ந்தது. பகவான் புத்தரின் பல்வேறு வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பாடல்களாக எழுதும் பணியாக மலர்ந்தது. அதன் பயனே ''ஆசிய ஜோதி'' என்ற கவிமணியின் கவிதை நூல்.

பிற்காலத்தில் எத்தனையோ பேருக்கு வாழ்த்துப் பாக்களும், இரங்கற் பாடல்களும் எழுதியுள்ளார். யாரைக் குறித்துப் பாடுகிறாரோ அம்மனிதருடைய வாழ்க்கையின் முக்கியமான அம்சத்தைக் குறிப்பிட்டு உணர்ச்சி வசமாக எழுதிவிடுவார். தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர் காலமானபோது அவர் எழுதிய பாடல் ஒன்றைப் பாருங்கள்:

எவ்வேடு தேடிநீ எந்நாட்டில் எப்பதியில்
எவ்விடு நோக்கியின்று ஏகினையோ - அவ்வான்
அமிழ்தம் அமிழ்தமென அள்ளியள்ளிச் சங்கத்
தமிழ்தந்த சாமிநா தா!

எவ்வளவு அருமையான பாடல்!

''வெண்பாவுக்குப் புகழேந்தி'' என்று முன்பெல்லாம் சொல்வார்கள். அது போல ''வெண்பாவுக்குக் கவிமணி'' என்ற சொல்லும் நிலைத்து விட்டது என்று திரு மு. சண்முகம் பிள்ளை கூறினர்.

மூன்றும் நாள் கவிமணியவர்கள் சாஸன ஆராய்ச்சித் துறையில் செய்துள்ள பல அரும் பணிகளைக் குறிப்பிட்டார்.

சாஸனங்களைப் படித்துப் பொருள் காணல் மிக மிகச் சிரம சாத்தியமான காரியம். பல செப்பேட்டுச் சாஸனங்களையும் சிலா சாசனங்களையும் பதிப்பித்து அரும் பணியாற்றிய பெரியார் கோபிநாத் ராவ் அவர்கள். அவர் ஒரு செப்பேட்டுச் சாஸனத்தில் வந்த ''திருவடி சார்த்தல்'' என்ற சொற்றொடருக்கு ''திருமணம் செய்து வைத்தல்'' என்று பொருள் கண்டார்.

இது தவறு என்று கண்டு, சரியான பொருளைத் தந்தவர் கவிமணி. அதாவது மண வாழ்க்கையை விரும்பாது, கன்னியாயிருந்து கடவுள் வழிபாட்டில் ஈடுபட விரும்பும் பெண்கள் தம்மைக் கடவுள் திருவடித் தொண்டுக்கு ஆளாக்கிக் கொள்வது பண்டை நாளில் இருந்து வந்த ஒரு வழக்கமாகும். இதனைத்தான் திருவடி சார்த்தல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றொரு சுவையான ஆராய்ச்சி. ''ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி'' என்பது ஒரு சாஸனத் தொடர். ''மன்மதன் காதல் எழுப்புகின்ற பருவம்'' என்று ஐம்படைப் பருவம் என்ற சொற்றொடருக்குப் பொருள் உரைத்தார் சாஸனப் பதிப்பாசிரியர்.

இதன் உண்மைப் பொருள் என்ன என்பதைக் கவிமணி விளக்கியுள்ளார்.

குழந்தைகளுக்குக் காப்பாகத் திருமாலின் சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு ஆகிய பஞ்சாயுதங்களின் வடிவில் செய்து அணியும் ஆபரணம் ஐம்படை என்பது. இந்த அணியை அணியும் குழந்தைப் பருவத்தையே ஐம்படைப் பருவம் குறிக்கிறது என்று விளக்கினர் தேசிக விநாயகம் பிள்ளை.


மற்றொரு சாஸத்தைப் ''பறவைக் காக'' என்று தவருகப் படித்துச் சரியான பொருள் விளங்காமல் அவதிப்பட்டார்கள். பண்டை நாளில் 'ர' என்ற எழுத்தையும் 'ா' எழுத்தையும் ஒரே மாதிரி எழுதி வந்தார்கள். ஆகவே, 'பறவைக் காக' அல்ல; 'பறவைக் கரசு' என்று படிக்க வேண்டும் என்றார் கவிமணி. 'பறவைக் கரசு' என்பது பக்ஷிராஜனைக் குறிப்பிடுவதாகும் என்று விளக்கினர். சிலாசாஸனம் உயிர் பெற்றது.

இப்படிப் பல சாஸனங்களுக்கு விளக்கம் தந்து, பல குழப்பங்களை நீக்கியவர் கவிமணி.

இப்படித் தமிழுக்குப் பல வகையிலும் அருந்தொண்டாற்றியதோடு, லட்சிய வாழ்வு நடத்தி மறைந்த பெரியார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள். அன்னார் வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் கோடி காட்டி மூன்று நாட்களும் அரிய உரைகள் நிகழ்த்தி, குழுமியிருந்த தமிழன்பர்கள் அனைவர் நெஞ்சையும் உருக்கி விட்டார் திரு சண்முகம் பிள்ளை அவர்கள்.

— எஸ். வி. எஸ்.

10. தற்கொலை முனை



"ஸைக்கோ ஸாரநாதன்"

கி. ராஜேந்திரன்

கல்யாணமாகி ஒரு வருஷத்துக்குள்ளாகவே வனஜாவுக்கும் தனக்கும் ஒத்து வராது என்பது தினகரனுக்குப் புரிந்து போய்விட்டது. தனக்கு மட்டுமென்ன, தன்மானமுள்ள ஆண் பிள்ளை எவனுயிருந்தாலும் சரி, அவளைக் கணவனுக அடைந்திருந்தானேயானுல் அவனுக்கும் அவளுக்கும் ஒத்து வராதுதான். அவள் எப்படிப்பட்டவள் என்பதை ஒரே வார்த்தையில் சொல்லி அவளை விட்டுப் பிரிந்துவிட அவனுல் முடியும். ஆனுல் அந்த வார்த்தையைச் சொல்ல அவன் நாக் கூசியது. அவளை விட்டுப் பிரிய சுய கௌரவம் இடம் தரவில்லை.


இத்தகைய ஒரு நெருக்கடியில் அவன் அவளோடு தொடர்ந்து வாழ்ந்தான், வேறு வழியில்லாமல். இப்படிப்பட்ட நிலையில் அவனைச் சிக்க வைக்கத்தான் ஆரம்ப முதல் அவளும் திட்டம் போட்டாள் என்பதையும் அவன் புரிந்து கொண்டான்.

காதல் என்ற மூன்றெழுத்து ஒருவனைச் சர்வ வல்லமை பொருந்தியவனுகவும் செய்ய முடியும். முட்டாளாக்கிவிடவும் முடியும். இதை இப்போது உணர்ந்திருந்தான் தினகரன்.

உறவிலேயே அவனுக்கு மாலையிட ஒருத்தி காத்திருந்தாள். ஆனுல் திண்டுக்கல்லிலிருந்து மதுரைக்கு உத்தியோக நிமித்தம் வந்த தினகரன், பக்கத்துக் கட்டடத்தில் மின்சார அலுவலகத்தில் வேலை பார்த்து வந்த வனஜாவின் வட்டக் கருவிழிகளில் தன்னை இழந்தான். இத்தனைக்கும் தொடக்கத்தில் அவள் இவனை லட்சியம் செய்யக்கூட இல்லை.

அதனுல் என்ன? தேனீக்கள் ரோஜாவில் வந்து மொய்க்கத் தோதாக அதற்கு நிறம் இருக்கிறது, மணம் இருக்கிறது, தேனும் இருக்கிறது. இவை போதாவா? 'தேன் எடுக்க இங்கே வரவும்' என்று அறிவிப்புப் பலகையா எழுதி வைக்க வேண்டும்? வனஜாவின் வசீகரமான கண்கள், வாளிப்பான தோற்றம், வனப்பான அலங்காரம் — இவை தினகரனைக் கிறங்க வைத்தன. இப்படிப் பலரை இவை கிறங்க வைத்திருக்கின்றன; பல தேனீக்களுள் தானும் ஒரு தேனீ என்ற விவரம் மட்டும் அப்போது அவனுக்குத் தெரியவில்லை.







பெற்றோர்களுடன் சண்டை போட்டுக் கொண்டு, முறைப் பெண்ணின் மனத்தைச் சுக்குநூறாக்கிப் பிடிவாதமாக வனஜாவை மணந்து கொண்டான். தனிக் குடித்தனமும் வைத்தான். பின்னே இத்தனை நடந்தபிறகு திண்டுக்கல்லுக்குப் போனால் தன் முதுகு திண்டு திண்டாகிவிடும் என்பதுகூடவா அவனுக்குத் தெரியாது?

வனஜா ஓரிரண்டு மாதங்கள் அவனிடம் பிரியமாக இருந்தாள். தன் தாயாரைச் சமைத்துப் போடச் சொல்லிவிட்டு வழக்கம் போல் ஆபீஸுக்குப் போய் வந்தாள். இரண்டு பேர்களுடைய வருமானமும் இருந்தால் நல்லது தானே; எதிர்காலத்தில் இரண்டு குழந்தைகள் பிறக்கும்போது இப்போது சேமித்து வைக்கக்கூடிய பணம் பயன்படுமல்லவா என்று நினைத்தான் தினகரன்.


சில மாதங்கள் கழித்து வனஜா, ஆபீஸ் வேலை அதிகம் என்று சொல்லித் தாமதமாக வீட்டுக்கு வர ஆரம்பித்தாள். போகப் போகச் சந்தேகம் தட்டியது தினகரனுக்கு. இனி சந்தேகத்துக்கு இடமில்லை என்று உறுதியானதும் அவன் மனம் விட்டுப் பேசினான் வனஜாவிடம். தனக்கு விஷயம் தெரிந்து போய் விட்டது என்பது புரிந்ததும் அவள் பயந்து நடுங்குவாள் என்று எதிர்பார்த்தான். அப்போது, நடந்ததை மறந்து அவளை மன்னித்துவிடத் தயாராய் இருப்பதாகச் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். புதிய வாழ்க்கை தொடங்கலாம் என்று பெருந்தன்மையுடன் கூறிச் சமாதானப்படுத்தவும் தயாராய் இருந்தான்.

ஆனால் அவனுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. வனஜா பயப்படவோ மன்னிப்புக் கோரவோ இல்லை என்பதோடு, ''இத்தனை நாட்கள் ஆயிற்று உங்களுக்கு இதைப் புரிந்து கொள்ள?'' என்று ஏளனச் சிரிப்போடு கேட்டாள்.

இதயத்தில் விழுந்த இவ்வளவு பலமான அடியை எப்படித்தான் அவன் தாங்கிக் கொண்டு நின்றானோ? அந்த அதிர்ச்சியைவிட, அவளை முழுமையாகப் புரிந்து கொண்டதால் ஏற்பட்ட திகைப்பு அதிகமாயிருந்தது அவன் நிலை குலையாதிருக்கக் காரணமாய் இருந்திருக்கலாம்.

விவாகம் என்பது அவளுக்கு ஒரு பாதுகாப்பு. அதைப் பெற உள்ளூர்வாசிகள் பலரிடம் முயன்று தோல்வியுற்றாள். கடைசியில் தினகரன்தான் வெளியூர்க்காரனானதால் ஏமாந்து போய் அவள் வலையில் விழுந்தான். அப்படி அவன் சிக்கும் வரை அவளும் அவனிடம் இன்முகம் காட்டி வந்தாள். மாங்கல்யச் சரடைப் பெற்றபின் பாரா முகம்தான். அவள் ஒரு சக்கரம். ஓரிடத்தில் நிலையாக இராமல் சுற்றிக் கொண்டேயிருக்கத்தான் ஆசைப்பட்டாள். ஆனால் என்றாவது ஒரு நாள் இயக்கம் நிற்கத்தான் வேண்டும். அப்போது படுத்துவிடாமல் நிமிர்ந்தே இருக்க வேண்டுமானால் சக்கரம் தனித்து இருக்காமல் தன்னை ஓர் அச்சாணியுடன் பொருத்திக் கொள்ள வேண்டும். அந்த அச்சாணிதான் அவன். இவ்வாறு திட்டமிட்டுத்தான் தன்னை அவள் கணவனாக ஏற்றுக் கொண்டிருக்கிறாள்.

மதுரையின் ஜனத்தொகையில் அத்தனை பேருக்குமில்லாவிட்டாலும் காலே அரைக்கால்வாசிப் பேருக்காவது வனஜா எப்படிப்பட்டவள் என்பது நிச்சயம் தெரிந்திருக்கும். ஆனால் தன் பெற்றோருக்கு இந்த விவரம் எட்டக் கூடாதே என்று அவன் கவலைப்பட்டான். அதைவிட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம்! எப்போதாவது விருந்தினர், உறவினர் என்று திண்டுக்கல்லிலிருந்து வருவார்கள். அப்போது அவளிடம் கெஞ்சிக் கூத்தாடித் தனது இல்லத்தரசியாக, படிதாண்டாப் பத்தினியாக நடிக்க வைத்தான். தானும் அவளிடம் சிரித்துப் பேசி நடித்தான். ஊருக்குத் திரும்பித் தன் பெற்றோரிடம் அவர்கள் தான் சௌக்கியமாக, சந்தோஷமாக இருப்பதைச் சொல்லுவார்கள். அப்பாவும் அம்மாவும் மகிழ்வார்கள். கல்யாண விஷயத்தில் மகனிடம் ஏற்பட்ட விரோதம், தாங்களே நேரில் வந்து அவன் குடும்பம் நடத்துவதைப் பார்க்கத் தடையாக நின்றது. ஆனால் மனம் கிடந்து அடித்துக் கொண்டது. அதனால் உறவினர்கள், நண்பர்கள் மதுரைக்கு ஏதாவது



காரியமாக வந்தால், ''அந்தக் காலாடிப் பயல் ஒருத்தன் இருக்கிறானே, முடிஞ்சால் அவனை எட்டிப் பார்த்துட்டுவாங்க'' என்று சொல்லி அனுப்புவார் தந்தை.

காதல் காதல் என்று வாதாடி யாரை எதிர்த்து நின்றானோ அவர்களுக்கு, இன்று தான் காதலில் படுதோல்வி அடைந்ததோடு புழுதியில் புரட்டப்பட்டும் இருப்பது புரிந்துவிடக் கூடாது



என்பதில் அவன் சர்வ ஜாக்கிரதையாக இருந்தான். வேஷம் போட்ட நேரம் போக மிருதி நாட்களில் கர்மமே என்று காலத்தை ஓட்டினான். நண்பர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் கிண்டல் செய்வதைத் தாங்கிக் கொள்ளப் பழகி விட்டான்.

ஒரு நாள் வனஜா வீடு திரும்பிய போது அவள் காரியாலயத்தில் பெரிய பதவியில் இருக்கும் ஒருவரை உடன் அழைத்து வந்தாள். ''ஸாருடைய ஒய்ஃப் குழந்தைகளோடு பிறந்த வீட்டுக்குப் போயிருக்காங்க. ஹோட்டலில் சாப்பிடலாம்; ஆனால் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது. பியூனிடம் ரொட்டி வாங்கிக்கிட்டு வரச் சொல்லிக் காசு கொடுப்பதைப் பார்த்தேன். மனசு கேட்கலை. நம்ம வீட்டிலேயே சாப்பிடலாம்னு சொல்லி அழைச்சுக்கிட்டு வந்துட்டேன்'' என்றாள் வனஜா. ''அம்மாவுடைய சமையல் ரொம்ப ருசியா யிருக்கும்; இவரை வேணுமானால் கேட்டுப் பாருங்க. கடந்த மூணு வருஷங்களா நாளைக்கு மூணு வேளை தவறாமல் சாப்பிட்டிருக்கார்.... ஏங்க ஒரு நாளைக்காவது தரம் குறைஞ்சிருக்குமா ?''

''சமையல் தரம் குறைந்தால் பாதகமில்லை, நடத்தையில் தரம் குறைந்தால் என்ன செய்ய?'' என்றான் தினகரன்.

அந்த உயர் உத்தியோகஸ்தர் சுருக்கென்று ஏதோ தைத்ததுபோல் நிமிர்ந்தார். ''உங்களுக்குப் பிடிக்கலைன்னா நான் போயிடறேன். நான் வரமாட்டேன்னுதான் சொன்னேன்'' என்றார் நாக்குழற.

''வேண்டாம், ஸார்! நீங்க இருங்க. இதுவரைக்கும் வனஜா எனக்குப் பிடிக்கும் பிடிக்காது என்று கேட்டுக் காரியம் செய்து என்னை அவமானப்படுத்தியதில்லை. இன்றைக்குப் புதுசாக அந்த வேதனை வேறு எனக்குச் சேர வேண்டாம்!''

இவன் கூடமாகப் பேசியது அவருக்குப் புரியவில்லை. யோசித்துப் புரிந்து கொள்ள வனஜா விடவும் இல்லை. ''இவர் எப்பவும் இப்படித்தான் ஸார், ஒருத்தருக்கும் புரியாமல் ஏதாவது தமாஷா பேசிக்கிட்டே யிருப்பார். நீங்க சிரம பரிகாரம் பண்ணிக்கிடுங்க. அடுப்பங்கரையில் எட்டிப் பார்த்துட்டு வந்துடறேன்'' என்றாள். தினகரனையும் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு சென்றாள்.

''எவ்வளவு பெரிய அதிகாரி நம்ம வீடு தேடி வந்திருக்கார்; அழகா நாலு வார்த்தை பேசப்படாதா ? உங்க மாமாவும் சித்தப்பாவும் வரும்போது நான் எப்படி அநுசரணையா நடந்துக்கறேன்?'' என்று கேட்டாள். படபடவென்று பேசியதுடன் நில்லாமல் ஒரு பையை எடுத்துக் கொடுத்து, ''மார்க்கெட்டுக்குச் சீக்கிரம் போய் ஒரு கிலோ தக்காளியும் அரைக் கிலோ கோசும் வாங்கிக்கிட்டு வாங்க. அவருக்குத் தக்காளி சூப் ரொம்பப் பிடிக்கும்'' என்றாள்.

பையை எடுத்துக் கொண்டு போன தினகரன், ராஜா தியேட்டர் வாசலில் 'கியூ' நிற்பதைக் கண்டவுடன் அந்த வரிசையில் தானும் நின்றுவிட்டான், வேதனை படிந்த உள்ளத்துக்குத் தாற்காலிக விடுதலையேனும் கிடைக்கட்டும் என்ற நினைப்பில்.

இரவு இரண்டேகால் மணிக்குத் திரும்பிய அவன், கதவைத் தட்டிய போது அலங்கோலமான நிலையில் வந்து வாசல் கதவைத் திறந்தாள் வனஜா. ''எதுக்கு இப்படி ஆர்ப்பாட்டம் பண்ணறீங்க? மெல்லத் தட்டக்கூடாதா? அவர் அசந்து தூங்கிக்கிட்டிருக்கார். கலாட்டா பண்ணினால் தொந்தரவா இருக்காதா ?'' என்றாள்.

''தண்டச் சோற்றுக்கு வந்த அந்தத் தடியன் இங்கேயே கட்டையையும் கிடத்திப்பிட்டானா?'' என்று கேட்டான் தினகரன்.

''பிறகு என்ன பண்ணச் சொல்றீங்க? எல்லாம் நீங்க செய்த காரியம் தானே ? கறிகாய் வாங்கி வரப் போனவர் ஆளையே காணோம். காத்திருந்து காத்திருந்து பார்த்துக் கடைசியில் பக்கத்து வீட்டுப் பையனை அனுப்பி வாங்கி வரச் சொன்னேன். சமையல் முடிஞ்சு சாப்பிட்டுத் தாம்பூலம் தரிச்சுக்க மணி ஒன்பதே முக்கால், பத்தாயிடுத்து. அவர் சொக்கிக் குளம் போகணும். பத்து மணிக்கு மேலே எப்படிப் போவார், அவ்வளவு தூரம்? அதனால் தான் நான் இங்கேயே படுத்திருந்துவிட்டு நாளைக்குப் போகலாமே என்று சொன்னேன். பேசிக்கிட்டிருந்தோம், நேரம் போனதே தெரியலை. சற்று முன்னால்தான் அவர் பால் சாப்பிட்டுவிட்டுப் படுத்தார்.''

மூன்று வருஷங்களாகக் குமுறிக் கொண்டிருந்த ஆத்திரத்தையெல்லாம் சேர்த்து வைத்துப் 'பளார்' என்று ஓர் அறை விட்டான் தினகரன். எதிர்பாராத தாக்குதலில் அவள் வீரிட்டு அலறக்கூடச் சக்தியற்றவளாய் அறையின் ஒரு மூலையில் சுருண்டு விழுந்தாள். விழுந்தவள் எழுந்தாளா என்று கூட அவன் பார்க்கவில்லை. வாசல் கதவைப் படீரென்று சாத்திவிட்டுப் போய்விட்டான்.

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்திசஞ்சீவி

குழந்தைகளின்

ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்தியரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விபரம் I

ஊர்	தேதி	நேரம்	தங்கும் இடம்
தாராபுரம்	1	காலை 8-30 -- 9-30	முருகன் மெடிகல் ஸ்டோர்ஸ், சர்ச் ரோடு.
பழனி	1	காலை 10-30 -- 11-30	ஜெயா பார்மஸி
உடுமலைப்பேட்டை	1	மாலை 3-00 -- 4-00	ராஜேந்திரா அண்டு கோ., கடை வீதி
பொள்ளாச்சி	1	மாலை 5-00 -- 6-00	நி எம்பயர் பார்மஸி.
பாலக்காடு	2 2	காலை 9-11 மாலை 3 - 5	K. H. பசுகாரம், கல்தான்பேட்டை. Rainbow Quarters, Opp. Govt. Hospital.
கோயமுத்தூர்	3 3	காலை 9-11 மாலை 2 - 4	காசிநாத் அண்டு கோ., (முனிசிபல் ஆபீஸ் எதிர்புறம்)
மேட்டுப்பாளையம்	3	மாலை 5-00 -- 6-00	நி மேட்டுப் பாளையம் மெடிகல் ஸ்டோர்ஸ்.
சத்தியமங்கலம்	4	காலை 8-00 -- 9-00	C. R. K. மெடிகல்ஸ், கடைவீதி
கோபி	4	காலை 10-00 -- 11-00	வாஸன் அண்டு கோ., கச்சேரி வீதி.
பவானி	4	மாலை 2-00 -- 3-00	M. L. செட்டியார் அண்டு சன்ஸ், கடை வீதி.
மேட்டூர் அணை	4	மாலை 4-30 -- 5-30	ஸ்ரீ ராமன் வாட்ச்.
ஈரோடு	5	காலை 9-00 -- 11-00	ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸ்.
திருப்பூர்	5	மாலை 4-00 -- 5-30	P. R. மணியம் ஸ்டோர்ஸ், பல்லடம் ரோடு.
திருச்சி	6	காலை 11-00 to மாலை 6-00	திருச்சி ஆயுர்வேதிக் யூனியன், சின்னக் கடைத் தெரு.
தஞ்சாவூர்	7	காலை 7-00 -- 9-00	Dr. S. வெங்கடராஜன் வைத்தியசாலை, சகாநாயக்கன் தெரு.
கும்பகோணம்	7, 17,27	காலை 10-00 to மாலை 5-00	ஸ்ரீ சக்தி விலாஸ் வைத்தியசாலை பிராஞ்சு, 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு.
சீர்காழி	8	காலை 7-00 -- 8-00	பிரம்ம வித்யா ஆயுர்வேத வைத்தியசாலை, ரயில்வே ஸ்டேஷன் ரோடு.
மாயூரம்	8	காலை 9-00 -- 11-00	ஸ்ரீ வெங்கடேசா மெடிகல் ஹால், பட்டமங்கலம் தெரு.
நாகப்பட்டணம்	8	மாலை 5-00 -- 6-00	நாகை மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
திருவாரூர்	9	காலை 7-30 -- 9-00	தன்வந்தரி மெடிகல் ஹால், 21, மடப்புரம் பாட்டை.
விஜயபுரம்	9	காலை 10-00 -- 11-00	சகுந்தலா பார்மஸி, நாகை ரோடு.
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2-00 -- 3-30	ஸ்ரீ T. V. சந்திரசேகரம் பிள்ளை, கடை வீதி.
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30 -- 6-30	கோபால் விலாஸ், பெரிய தெரு.
புதுக்கோட்டை	10	காலை 8-00 -- 10-00	நியூ லக்ஷ்மி டிஸ்பென்ஸரி, கீழ ராஜவீதி.
தேவகோட்டை	10	மாலை 2-30 -- 3-30	ஸ்ரீ சோமசுந்தரம் மெடிகல் ஸ்டோர்ஸ், ஆர்ச் ரோடு.
காரைக்குடி	10	மாலை 4-30 -- 6-00	நியூ கௌரி வாட்ச், மகர் நோம்பு அக்ரஹாரம்.
சிவகெங்கை	11	காலை 8-30 -- 10-00	கௌரி அண்டு கோ., கடை வீதி.
மதுரை ,,	11 11	காலை 11-00-12-30 மாலை 3-00- 6-00	T. N. சொக்கலிங்கம்பிள்ளை சன்ஸ், வடக்கு சித்திரை வீதி.

குறிப்பு: பிரதி இங்கிலீஷ் மாதம் 10, 25 தேதிகளில் மாலை 3 முதல் 6 மணி வரை எமது வைத்தியர் மயூர வைத்தியசாலை, B-II, 1வது கிராஸ், தில்லைநகர், திருச்சி என்ற விலாசத்தில் முகாம் செய்கிறார்.

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை, கரூர் (போன்: 87)
திருச்சி ஜில்லா

எமது வைத்தியரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விபரம் II 14-5-72 கல்கியில் பிரசுரமாகும்


மனதிற்குகந்த
தூய வெண்மையைப் பெற
ஓ ஓ பி
நீலம்
ஓ ஓ பி நீலம் உடனடியாக முற்றிலும்
கரைந்துவிடும் வெள்ளைத் துணிகள் ஒரே
சீராக பால்போல் பளிச்சிடுகின்றன.
உங்கள் சட்டைகள், புடவைகள், பெட்ஷீட்டு
கள் மற்ற துணிகள் எதையும் வெள்ளை
வெளேர் என்று ஆக்க மிகவும் சிக்கனமான
வழி இது. நீலப்புள்ளி விழாது, மஞ்சள்
திட்டு தெரியாது.
ஓ ஓ பி நீலம் மேற்கு ஜெர்மன் கூட்டுறவுத்
தயாரிப்பு. இந்தியாவின் மிக நவீன அல்ட்ராமரைன்
தொழிற்சாலையில் உருவானது.
தயாரிப்பாளர்:
அல்ட்ராமரைன் & பிக்மெண்ட்ஸ்
லிமிடெட், அம்பத்தூர், சென்னை 53
OOB
BLUE
BEST ULTRAMARINE
ULTRAMARINE & PIGMENTS LTD.
UPL/6546

ஒரு கடையில் சப்பாத்தியும் இன்னொரு கடையில் பாலும் சாப்பிட்டு விட்டு இரவு முழுதும் கால் போன போக்கில் அலைந்தான். அலைபாயும் மனத்துக்கு அமைதியில்லை. 'அவள் எல்லை மீறிவிட்டாள். ஆண்மை என்பது அடக்கப்பட்டிருந்தாலும் அழிந்தா போய்விட்டது? மறுபடியும் அந்த வீட்டில் அடியெடுத்து வைக்க முடியுமா, தன்னால்? அவளுடன் இனியும் சேர்ந்து வாழ்வதா?'

பொழுது விடிகிற சமயத்தில் அவன் பஸ் நிலையத்தின் அருகே இருந்தான். கொடைக்கானலுக்கு ஒரு பஸ் கிளம்பிக் கொண்டிருந்தது. பாக்கெட்டில் மளிகைக் கடைக்காரனுக்கும் வண்ணானுக்கும் கொடுத்தது போகச் சம்பளப் பணத்தில் பாதிக்கு மேல் பாக்கியிருந்தது. யோசித்துக் கொண்டிராமல் ஏறி விட்டான்.

'கொடைக்கானலின் அமைதியான சூழ்நிலை தனக்கு நிம்மதி தருமா? அதன் அழகு விகாரமான ஓர் உள்ளத்தை மறக்கத் தனக்கு உதவுமா? தண்ணென்ற அந்தக் காற்று தன் இதயத்தின் எரிச்சலைத் தணிக்குமா?'

கொடைக்கானலில் தினகரன் இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருந்தான். ஏரியையும் அருவியையும் பார்த்தான். கோக்கர்ஸ் வாக்கில் நடந்தான். குறிஞ்சி ஆண்டவர் கோயிலில் கும்பிட்டான். எதிலேயும் சாந்தி கிடைக்கவில்லை. பில்லர் ராக்ஸுக்கு அவன் வந்து சேர்ந்தபோது நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்தாற்போல் ஒரு டூரிஸ்ட் பஸ் பயணிகளை வெளியே கொட்டியிருந்தது.

பில்லர் ராக்ஸ் என்பவை தொலைவில் இரண்டு தூண்களாகத் தெரிந்தன. ஒரு மலை உச்சிதான் அது. ஆனால் சிகரமாய் இல்லாமல் அசாதாரண பலமுள்ள ஓர் அரக்கனால் முனை சீவி விடப்பட்டது போல் மேற்புறம் தட்டையாகத் தோற்றம் அளித்தது. அதே அரக்கன் தன் வாளால் மேலிருந்து கீழாகவும் ஒரு போடு போட்டிருக்க வேண்டும். பாறை பிளவுண்டு இடையில் ஓர் அதள பாதாளத்தைத் தேக்கிக்கொண்டு நின்றது. இந்த வெடிப்பு காரணமாகத் தான் அம்மலை இரு தூண்கள்போல் தோற்றமளித்து, பில்லர் ராக்ஸ் என்ற பெயரும் பெற்றிருக்கிறது.

''என்னங்க, கைடு ஸார்! இங்கேயிருந்துதான் பார்க்கணுமா பில்லர் ராக்ஸை? அதுங்கிட்டே போக முடியாதுங்களா?''

தூக்கத்தில் பேசுவதைப் பற்றி அவன் கவலைப்படுவது கிடையாது! காரணம்- அவன் மனைவி பெயர் கமலா. காதலி பெயரும் கமலா!

—ஜவர் லக்ஷ்மணன்-கே.ஆர்.



''போகலாமே!'' என்றார் கைட். ''உங்கள் உயிரைப் பற்றிக் கவலை இல்லை என்றால் சுற்றி வளைச்சுக்கிட்டு ஓர் ஒற்றையடிப் பாதை வழியே போகலாம்.''

''பாதை இருக்கில்லே? பிறவு என்ன? அதோடு நடந்தாப் போவுது. பயம் எதுக்கு?''

''ஓநாய், மலைப் பாம்பு, சிறுத்தை இதுகள் ஏதாவது நடமாடும் என்கிற பயம்தான். அவை விருந்து சாப்பிட்டு முடிஞ்சதும் எலும்புகளைத் துடைச்சுப் போட்டது மாதிரி கொத்தி எடுக்கக் கழுகுகளும் ராஜாளிகளும் காத்துக்கிட்டு இருக்கும். ஆனால் நீங்கதான் டார்ஜானுக்குத் தம்பி மாதிரி சவால் விட்டுப் பேசறீங்களே? ஒருவேளை தேவர்கிட்டே டிரெய்னிங்கில் இருந்துட்டு வந்தீங்களோ?''

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். இது போன்ற சுற்றுலாப் பயணங்களில் கைட் நகைச்சுவை என்று கருதிச் சொல்வதற்கெல்லாம் சிரிக்க வேண்டும் என்பது எழுதி வைக்கப் படாத சட்டம்.

''ஏங்க, வேட்டைக்காரங்க போகலையா? அது மாதிரி கையிலே துப்பாக்கியோடு போறது. பல பேர் போயிருக்கிறதால்தானே ஒற்றையடிப் பாதையே ஏற்பட்டிருக்கு?''

''வாஸ்தவம். நான் மறுக்கலை. இன்னைக்கும் ஏதாவது ஜோலியா காட்டுக்குள்ளே போறவங்க இருக்கத்தான் செய்யறாங்க. அவங்களுக்குப் பழக்கம். நமக்கு எதுக்கு அதெல்லாம் என்று சொல்ல வந்தேன். நாலு வருஷங்களுக்கு முந்தி ஒருத்தன் இப்படித்தான் பில்லர்ராக்ஸுக்குப் பக்கத்திலே போய்ப் பார்க்கிறேன்னு கிளம்பிப் போனான். திரும்பி வரவேயில்லை!''

''சிறுத்தையா, ஓநாயா, எதுக்கு அடிச்சுது அதிர்ஷ்டம்?''

''இரண்டுக்கும் கொடுத்து வைக்கவில்லை. அந்த முனைக்கே போயிட்டான். அதோ அந்தப் பிளவு இருக்கே—கிடுகிடு பள்ளம் — அதன் உச்சியில் நின்னுக்கிட்டு எவ்வளவு ஆழம்னு எட்டிப் பார்த்தான். அப்புறம் கண்ணை மூடிக்கிட்டு ஒரு தாவு தாவினான்.....''

''உள்ளே விழுந்துட்டானா?''

''நல்லா கேட்டீங்க, விழுந்துட்டானுன்னு. கொம்பு நுனியிலே அரிவாள் கட்டி மாங்காய், புளியம் பழம் எல்லாம் பறிப்பாங்களே தெரியுமில்லே?''

''ஆமாம்!''

''அது மாதிரி ஒரு கொம்பு முனையில் அரிவாளைக் கட்டி உள்ளே இறக்கித்தான் அவன் உடலை மேலே தூக்கினுங்க. அதுவும் முழுசா வந்ததுங்களா? கிடையாது ! கை ஒரு தடவை, கால் ஒரு தடவை......''

''கன்னளுவி! போதும், போதும்! இதையெல்லாம் ஏன் சொல்றீங்க?''

''நீங்க கேட்டதால்தான் சொல்லும்படியாச்சு.''

எல்லாருக்கும் இடம் விட்டு ஓர் ஓரமாய் ஒதுக்குப்புறமாய் நின்றுகொண்டிருந்த தினகரன் பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே அடர்த்தியான பஞ்சுப் பொதி போன்ற ஒரு மேக மண்டலம் வந்து அப்படியே பில்லர்ராக்ஸைக் கவ்வி விழுங்கிவிட்டது ! அது ஒரு மலை, உறுதியான பாறை. அதையும் அடியோடு மேக மண்டலம் மறைத்து விட்டது. திரை போட்டு விட்டது ! 'என் வாழ்க்கைக்கும் இப்படியே திரை போட்டு விடலாம். ஜன கன மண....! பில்லர்ராக்ஸின் உச்சிக்குப் போகும் பாதையைக் கேட்டறிந்து கொண்டு சென்று அந்தப் பாறைப் பிளவையே என்னை அடக்கம் செய்யும் சமாதியாக்கி விடலாம். வழியில் புலி சிறுத்தைக்கு இரையாக நேர்ந்தால் ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. அவ்வளவு தூரம் நடக்கும் வேலை மிச்சம்!'

மேகம், கவ்விய வேகத்திலேயே மலையைக் கக்கிவிட்டும் போய்விட்டது. ''அதோ, அதோ !'' என்று சிலர் இப்போது தெற்றெனத் தெரிந்த தூண்களைச் சுட்டிக் காட்டினார்கள்.

''சரி சரி, தற்கொலைக்கு ஏற்ற இடத்தைப் பார்த்தது போதும், வேறே எங்கேயாவது போகலாம்'' என்றார் ஒருவர்.

''தற்கொலைக்கு ஏற்ற இடம்னு அதை நான் சொல்ல மாட்டேன், ஐயா !'' என்றார் கைட். ''இன்று வரைக்கும் எனக்குப் புரியலே, அந்த ஆசாமி தற்கொலை செய்து கொள்ள எதுக்கு அவ்வளவு தூரம் போனுன்னு. கொடைக்கானலில் திரும்பிய பக்கமெல்லாம் அதள பாதாளமும் கிடுகிடு பள்ளத்தாக்கும் இருக்குதே. போதாக்குறைக்கு கால்ஃப் கிளப் பக்கத்தில் போர்டு வேறு எழுதி வைச்சிருக்காங்க, 'ஸூயிஸைட் பாயிண்ட்' என்று. தற்கொலைக்கு வசதியான இடம் என்பதால் தானே அப்படி ஒரு பெயர் வைச்சிருக்காங்க, அந்த இடத்துக்கு? அதன் பக்கத்திலேயே காரிலோ, பஸ்ஸிலோ சிரமப்படாமல் போய் இறங்கலாமே?

''அந்த இடத்தையும் நாம் பார்க்கலாம், பிக்னிக் முடிஞ்ச பிறகு. எல்லாரும் டிஃபன் பொட்டலத்தைப் பிரிச்சுக்கிட்டு மரத்தடியிலோ பாறை மேலோ அல்லது இங்கே சர்க்கார் உங்கள் பணத்தில் உங்களுக்காகப் போட்டு வைச்சிருக்கிற வசதியில்லாத காங்க்கிரீட் பெஞ்சுகளிலோ உட்கார்ந்து சாப்பிடுங்க. ஆனால் தயவுசெய்து டிஃபன் பொட்டலக் காகிதங்களைக் கண்ட இடத்தில் வீசி எறியாதீங்க. கேட்பார் யாரும் கிடையாது என்றாலும் நாம் கடமை உணர்ச்சியோடு நடந்துக்குவோமே !''

கைட் குட்டிப் பிரசங்கத்தை முடித்ததும் உல்லாசப் பயணிகள் டிஃபன் பொட்டலங்களைப் பிரிக்க ஆரம்பித்தார்கள்.

அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனுமில்லாத போது அவர்கள் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டு அங்கே நிற்கத் தினகரன் விரும்பவில்லை. புறப்பட்டான்.

பில்லர்ராக்ஸுக்கு அவன் ஒரு பஸ்ஸில் வந்து இறங்கிக் கொண்டிருந்தான். அந்த வழியாக ஏதோ ஒரு கிராமத்துக்குப் போகிற பஸ். வருகிற வழியில் கால்ஃப் கிளப் கட்டடத்தைக் கவனித்திருந்தான். சாலையின் இரு புறங்களிலும் கால்ஃப் ஆட வசதியாக விசாலமான புல் தரைகள் இருப்பதையும் பார்த்திருந்தான். ஆங்காங்கே வட்ட வடிவமாகப் புல் செதுக்கப்பட்டு வழுவழுப்பான சம தரை தெரியும். நெம்பர் பலகை தாங்கிய கழியும் நடப்பட்டிருக்கும்.

'கால்ஃப் கிளப் கட்டடம் இங்கிருந்து சுமார் அரை மைல் அல்லது முக்கால் மைல் தூரம்தான் இருக்கும். இறக்கம்; விடுவிடுவென்று நடந்து போய்விடலாம். அதன் பக்கத்தில்தானே ஸூயிஸைட் பாயிண்ட் — தற்கொலை முனை—இருப்பதாகச் சொன்னார் கைட் !'

பில்லர்ராக்ஸைப் பார்வையிட வசதியாக அரசினர் சற்றுத் தாழ்வாக அமைத்திருந்த அழகிய சிறிய பூங்காவிலிருந்து கிளம்பிப் படிகளில் ஏறிச் சாலையில் அடியெடுத்து வைத்தான் தினகரன். அந்தக் கணத்தில் அவன் கண்களில் ஏற்கனவே அறிமுகமான ஒரு முகம் தட்டுப்பட்டது. 'ஆ ! வனஜாவுடன் அதே காரியாலயத்தில் வேலை செய்



பம்பாய், ஸ்ரீ K. S. மகாதேவன் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி ஸ்ரீ சேகருக்கும் டாக்டர் ராமச்சந்திரன் அவர்கள் குமாரத்தி சௌ. கிரிஜாவுக்கும் சென்னையில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!


புரட்சிநடிகர் எம்ஜிஆர் வழங்கும்
ஜெயந்தியின்
ராமன் தேடிய சீதை
கலர் ஜெமினி
தயாரிப்பு
N.கனகசபை
டைரக்ஷன்
ப.நீலகண்டன்
சென்னை
மிட்லண்ட். ஸ்ரீகிருஷ்ணா. சரவணா மற்றும் தென்னகமெங்கும்

கிறவன் அல்லவா இவன்? நல்லவேளை! அவன் தன்னைப் பார்க்கவில்லை! அதோ இன்னொருவன்! அவனும் அதே ஆபீசில் பணியாற்றுகிறவன்தான். அடேடே! இந்தப் பஸ்ஸில் சுற்றுலாக் கிளம்பியவர்களில் ஒரு பகுதியினர் வனஜா வேலை பார்க்கும் அதே காரியாலயத்தைச் சேர்ந்தவர்கள் போலும்! அவர்களில் பலருக்கு என்னைத் தெரியுமே? அவர்கள் கண்களில் தட்டுப்படாமல் போய் விடுவதுதான் நல்லது. பார்க்க மாட்டார்கள். இந்தக் கூட்டத்தினிடையில் அவர்கள் கவனத்திலிருந்து தப்பி ஒதுக்குப்புறமாய்ச் சென்று விடுவது சிரமமல்ல. வெள்ளிக்கிழமை ஏதோ ஒரு பண்டிகை; பிறகு செகண்ட் ஸாட்டர்டேயும் ஞாயிற்றுக்கிழமையும். சேர்ந்தாற் போல் கிடைத்த மூன்று நாட்கள் விடுமுறையைப் பயன்படுத்திக் கொண்டு உல்லாசப் பயணம் கிளம்பி இருக்கிறார்கள். ஒருவேளை வனஜாவும்...'

மின்னலென அவன் உள்ளத்தில் இந்த எண்ணம் பாய்ந்த அதே விநாடியில் அவன் கண்களும் அவளைக் கண்டுவிட்டன! அதுவும் எப்படி? அவள் பக்கத்திலேயே அந்த உயர் உத்தியோகஸ்தன் - மருதாசலம் நின்று கொண்டு அவள் இடுப்பில் தன் கையை உரிமையோடு சுற்றி வளைத்துத் தொலைவில் இருந்த எதையோ சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தான். அவர்கள் முதுகுதான் அவனுக்குத் தெரிந்தது. ஆனால் சந்தேகமில்லை, அவர்களேதான் 'சீ! அதே காரியாலயத்தில் வேலை பார்க்கும் சக ஊழியர்கள் எதிரிலேயே இப்படி வெட்கமின்றி இழைவதா? அடிப் பாவி! மூன்று நாட்களாய்க் கணவனைக் காணோமே என்று கொஞ்சங்கூடக் கவலைப்படாமல் இவனோடு சேர்ந்து உல்லாசப் பயணம் கிளம்பிவிட்டாயா? வனஜா! உன்னுடைய இந்தக் கண்ணராவி நாடகத்தை இனியும் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க என்னால் முடியாது. இதோ நான் 'அவுட்பாஸ்' வாங்கிக் கொண்டு போகிறேன்!'

இவ்வாறு எண்ணமிட்டவாறே 'ஸூயிஸைட் பாய்ண்ட்' என்ற பெயர்ப் பலகையை நாடி விடுவிடுவென்று நடந்தான் தினகரன். (தொடரும்)

தெரிந்த விளையாட்டு: தெரியாத விவரம்

3. ஹாக்கி

☐ ஹாக்கி விளையாட்டு பாரசீகத்தில் பிறந்து பரவியிருக்க வேண்டும் என்கிறார்கள். பாரசீகர்கள் போலோ விளையாட்டு விளையாடினர். குதிரையின் மீது அமர்ந்துகொண்டு ஆடும் போலோ விளையாட்டே குச்சியில் பந்தை அடித்து விளையாடும் ஹாக்கி விளையாட்டுக்கு அடிகோலியது என்கிறார்கள் சிலர். குதிரைகளின் மீது அமர்ந்து போலோ விளையாட்டு ஆட முடியாத ஏழைகள் கையில் குச்சி ஏந்தி ஹாக்கி ஆட்டத்தை ஆடத் தொடங்கினார்களாம், பல நூறு வருஷங்களுக்கு முன்பாகவே.

☐ 1365ம் ஆண்டில் மூன்றாம் எட்வர்ட் மன்னன் கால்பந்தாட்டத்துக்குத் தடை விதித்து வில் பயிற்சியைப் பிரபல்யப்படுத்த விரும்பினான். கால் பந்தாட்டத்தைச் சட்ட விரோதமாக்கியதும் சட்டத்துக்கு டிமிக்கிக் கொடுக்கக் குச்சி, (ஹாக்கி) பந்தாட்டம் கிளம்பியது.

☐ ஹாக்கியில் ஒரு வகையான ஐஸ் ஹாக்கி, கனடாவிலும், அமெரிக்காவிலும் பிரசித்தமானது. 1870ல் மாண்ட்ரீல் நகரில் மெக்கில் சர்வகலாசாலை மைதானத்தில் ஆடியிருக்கிறார்கள். ஒன்டோரியோவிலுள்ள கிங்ஸ்டனும் ஐஸ் ஹாக்கிக்குத் தாயகமாக உரிமை கொண்டாடுகிறது.

☐ ஐஸ் ஹாக்கியில் ஒவ்வொரு கோஷ்டியில் ஆறு பேர்களே ஆடுவார்கள், ஹாக்கியில் பதினொரு பேர்! ஐஸ் ஹாக்கி வாயு வேக மனோ வேகம் கொண்டது. ஐஸில் மணிக்கு 90 மைல் வேகத்தில் சறுக்கிச் செல்வார்களாம். ஒரு நல்ல ஐஸ் ஹாக்கி விளையாட்டுக்காரர், பனிச் சறுக்கிலும் கெட்டிக்காரராக இருக்க வேண்டும்.

☐ இந்தியாவில் பஞ்சாப் ஹாக்கியில் தலைசிறந்து விளங்குகிறது. தேசிய ஹாக்கிப் போட்டியில் சாம்பியன் பதவியை நான்காவது வருஷம் தொடர்ச்சியாகப் பெற்றுப் புகழ் சூடியிருக்கிறது.

☐ அந்தக் காலத்தில் ஹாக்கி ஆட்டத்தில் பந்தை உடல், காலினால் தடுத்து நிறுத்திக் கொள்ளலாம் என்றிருந்தது. தலையை மட்டும் உபயோகிக்கக் கூடாது. எந்த இடத்திலிருந்து கோல் அடித்தாலும் அது செல்லுபடியாகும்!

- குண்டுமணி



தடுமாறாமல் நொடியில் கிளம்புங்கள்

மற்றவர்களைவிட முன்னால் இருங்கள் — எப்பொழுதும்



கூடுதலான சக்தியைதரும் **ஆம்கோ** பாட்டரியுடன்



மிடுக்கு தேவை. காரியத்தைச் சாதிக்க கிளம்புகையில் தடுமாறி சங்கடப்படாதீர்கள். ஒரு பாட்டரி வாங்க எண்ணம் பெறும்போது, 'கூடுதலான சக்தியை தரும்' ஆம்கோ பாட்டரியைத் தவிர வேறு எதையும் சட்டை செய்யாதீர்கள். பாட்டரி கோளாறு என்ற பிரச்னையை நீங்கள் மறந்து விடலாம். கார் ஓட்டுவதை இன்பகரமானதாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு ஆம்கோ பாட்டரியும் — உங்களுடைய பாட்டரிக்கு மிகவும் தேவையான அந்த வலுவையும், நீண்ட ஆயுளையும் அளிக்க — நவீன ஆராய்ச்சி அபிவிருத்தி, சிறப்பான என்ஜினீரிங் திறன், கடுமையான தரக்கட்டுப்பாடு, கிட்டத்தட்ட 40 வருட கால அனுபவம் ஆகியவற்றால் ஆனது.

ஆம்கோ பாட்டரீஸ் லிமிடெட்,
யூனிடி பில்டிங்ஸ், பெங்களூர்-2.

MAC (B) AM-97 TAM

நான் உன்னை அழைக்கவில்லை...

எஸ்.வி. இஷர்



"என்ன, யோசனை பலமாக இருக்கிறது? பெரிய கேஸ் ஏதாவது வந்து மாட்டி யிருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார் வக்கீல் ராமாமிர்தத்தின் நெருங்கிய நண்பரான தியாகராஜன்.

"ஆமாம்... ஒரு கேஸ் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் இது கோர்ட்டுக் கேஸ் அல்ல.... வீட்டுக் கேஸ்....!" என்றார் ராமாமிர்தம் சிரித்துக் கொண்டே.

"ஓகோ! வீட்டுக் கேஸா? என்ன சொல்கிறாள் உங்க மிஸஸ்? வைர நெக்லஸா? அல்லது வெப்புக் கல் வளையலா? எது வேண்டுமாம்?"



"அதெல்லாம் ஒன்றும் வேண்டாமாம்....திடுமென்று நினைத்துக் கொண்டு, 'நாமும் எத்தனை நாளைக்கு இப்படி வாடகை வீட்டிலேயே இருப்பது? நமக்கென்று சொந்தத்தில் ஒரு வீடு வேண்டாமா?' என்றாள்... அந்தக் கேஸ்தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது!..... கொஞ்ச நேரம் முன்பு வந்திருந்தால் அவள் என்னைக் 'கிராஸ் எக்ஸாமின்' பண்ணியதை நீ பார்த்திருக்கலாம்!"

"அவர்கள் சொல்வதிலே என்ன தப்பு இருக்கிறது?... நீ சொந்தத்தில் ஒரு வீடு கட்டிக் கொள்ள வேண்டியதுதானே!... அதுதான் கைகள் சிவக்கச் சிவக்கப் பீஸ் வாங்குகிறாயே?...."



"சரிதான்! நீயும் அவளுடன் சேர்ந்து கொண்டு விட்டாயா! இனி என் 'ஆர்க்யுமெண்ட்' எடுபட்டாற் போலத்தான்!" என்ற ராமாமிர்தம் தொடர்ந்தார்: "இதோ பார் தியாகு, எனக்கும் சொந்தத்திலே வீடு கட்டிக் கொள்ள வேண்டும் என்று ஆசை தான்.... ஆனால் வீடு கட்டுவதென்றால் இலேசான காரியமா? நம்முடைய நேரடி மேற்பார்வை இருந்து கொண்டிருக்க வேண்டாமா?..... நான் கோர்ட்டிலே கட்சிக்காரர்களோடு மாரடிப்பேனா, இல்லை, வீடு கட்டுகிற இடத்திலே போய் நிற்பேனா?... எனக்கு அதற்கெல்லாம் நேரம் ஏது? நீயே சொல்லு!"

" உனக்கு நேரமில்லாவிட்டால் என்ன? என்னிடம் ஒரு வார்த்தை சொன்னால் நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா?"

"நீயா? உனக்கு லீவு கிடைக்க வேண்டாமா?...."



"அதைப் பற்றி உனக்கென்ன கவலை?....நான் ஆறு மாசம் லீவு போட்டுவிட்டு, உன் வீட்டைக் கட்டித் தருகிறேன்...... போதுமா?"

சொன்னபடியே செய்தார் தியாகராஜன். அவரே நல்லதொரு மனையைத் தேர்ந்தெடுத்தார். வீட்டுக்கான 'பிளான்'களைப் பக்கத்திலேயே இருந்து வரையச் செய்தார். அருமையான என்ஜினியராகப் பார்த்து அவரிடம் வீடு கட்டும் பொறுப்பையும் ஒப்படைத்தார்.

ராமாமிர்தம் முதன் முதலாக மனையில் பூஜை போட்ட அன்று வந்ததோடு சரி; அதற்கப்புறம் 'பிளாட்டு'ப் பக்கம் மறந்து கூடத் தலைகாட்டவே இல்லை. எல்லாப் பொறுப்புக்களையும்தான் தியாகராஜன் ஏற்றுக்கொண்டு விட்டாரே!

செங்கல்லுக்கு 'ஆர்டர்' கொடுப்பதிலிருந்து 'மொஸெய்க்' ஓடுகள் வாங்குவதுவரை தியாகராஜன்தான் ஓடியாடி வேலை செய்தார். வெய்யிலில் காய்ந்தார்; மழையில் நனைந்தார். கொத்தனார்களோடு யுத்தம் புரிந்தார்; தச்ச மேஸ்திரியைத் தரையில் கால் பாவ விடாமல் ஓட ஓட விரட்டினார்; குழாய்க்காரர் 'தண்ணீர்' காட்டாதபடி பார்த்துக் கொண்டார்; எலெக்ட்ரீஷியனுக்கு ஒத்தாசையாக ஏணியைக்கூடத் தூக்கிக் கொண்டு போனார்.




மளமளவென்று உயர்ந்தது வீடு. வேலை ஆரம்பித்த ஏழாவது மாதம் உள்ளும் புறமும் 'டிஸ்டெம்பரை'ப் பூசிக் கொண்டு பருவப்பெண் போல் மெருகேறி எல்லோரது கவனத்தையும் ஈர்த்தபடி நிமிர்ந்து நின்றது வீடு.

''ஆமாம், புதுமனை புகுவிழாவை என்றைக்கு வைத்துக் கொள்ளலாம்?'' என்று தியாகராஜனையே யோசனை கேட்டார் ராமாமிர்தம்.

''அடுத்த மாதம் பதினெட்டாம் தேதி நாள் நன்றாக இருக்கிறது. உன் ஜாதகப்படி அதுதான் புதுமனை புகச் சிறந்த நாள்!'' என்றார் தியாகராஜன் தயங்காமல்.

'' சரி, அன்றைக்கே புது வீட்டுக்குக் குடியேறி விடுகிறேன்!'' என்றார் ராமாமிர்தம் உற்சாகமாக.

அந்தப் புதுமனை புகு விழாவை வெகு தடபுடலாகக் கொண்டாடினார் ராமாமிர்தம். உற்றார், உறவினர், நண்பர்கள், சக வக்கீல்கள், நீதிபதிகள், பெரிய புள்ளிகளான கட்சிக்காரர்கள் — என்று அத்தனை பேரையும் அழைத்தார் விழாவுக்கு. ஆனால்-



தியாகராஜனை மட்டும் அழைக்கவே யில்லை. தியாகராஜனும் — இத்தனை நாட்கள் வரை அந்த மனையிலேயே பழியாகக் கிடந்தவர் — நண்பரின் புதுமனை புகுவிழா நாளன்று அந்தப் பக்கம் தலைகாட்டவே இல்லை! ராமாமிர்தத்தின் அந்தப் புது வீடு அருமையாக உருவாகத் தியாகராஜன் பட்ட சிரமங்கள் வந்திருந்த எல்லோருக்குமே தெரியும். இருந்தாலும் 'அவரை நீங்கள் ஏன் அழைக்கவில்லை?' என்று ராமாமிர்தத்தைக் கேட்கும் துணிவு யாருக்கும் இல்லை. 'அவர்களுக்குள் ஆயிரம் இருக்கும்; நாம் கேட்பானேன்?' என்று ஒதுங்கிவிட்டார்கள்.

அன்றிரவு.

கணவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டே இருந்த ராமாமிர்தத்தின் மனைவி லட்சுமி, ''ஆமாம், நான் உங்களை ஒன்று கேட்டால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?'' என்று பேச்சைத் தொடங்கினாள்.

''கேளேன்.... நீ என்ன கேட்கப் போகிறாய் என்று எனக்குத் தெரியும். 'தியாகராஜனை இன்றைக்கு ஏன் கூப்பிடவில்லை?' என்றுதானே கேட்கப் போகிறாய்.....?''

''ஆமாம்.....''

''அவனைக் கூப்பிட எனக்கு விருப்பமில்லை, லட்சுமி !''

'' என்னது! நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்! அவர் நமக்காக — இந்த வீட்டைக் கட்ட — எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறார்!...''

''நான் அதை மறுக்கவில்லையே! ஆனால் இந்த நல்ல நாளும் அதுவுமாக அவன் இந்த வீட்டுக்கு வருவது எனக்குப் பிடிக்கவில்லை ; அதனால்தான் நான் கூப்பிடவில்லை... அப்படியே நான் அழைத்திருந்தாலும் அவன் நிச்சயமாக வந்திருக்க மாட்டான்!''


''ஏன்?'' ஒன்றும் புரியாதவளாக லட்சுமி அவரது முகத்தையே பார்த்தாள்.

'' அசடே ! தியாகராஜனுக்கு என்ன வேலை என்று உனக்குத் தெரியுமோ ?''

''தெரியாதே !''

'' அவனுக்குக் கோர்ட்டிலே அமீனா வேலை, லட்சுமி... மங்களகரமான நாளிலே—புது வீடு கட்டி நாம் நுழைகிற அன்றைக்கு—அவன் இந்த வீட்டுக்குள் அடியெடுத்து வைக்கலாமோ ?..... அதனால்தான் நான் அவனைக் கூப்பிடவில்லையாக்கும் ! தெரிந்துகொள்!''

எழில் வருகிறது எகானமி வடிவுடன்





பிளாக்ரோஸ்—முழு
மலர்ச்சியுற்ற
பாரசீக ரோஜா
மலர்களின் மணம்
கமழ்வது.

பிக்வண்ட் —புது
வசந்தத்தில் பூத்த
மலர்களின் மென்
மணம் கொஞ்சுவது.

இரண்டுமே எழில் கொழிப்பவை. தனி சிறப்புடன் திகழ்பவை.


தோயா பிளாக்ரோஸ், பிக்வண்ட் இரண்டும்
உங்களுக்கு அதிகம் அளிக்க வடிவளவில் கூடியுள்ளன

AGC-12TAM

மாமா, மாமா, ஒரு கதை

ம. இராஜாராம்

எனக்குப் பொய் சொல்லிப் பழக்கமில்லை. கதை எழுதித்தான் பழக்கம். என் மாமா கதையைப் பொய் மாதிரியும், பொய்யைக் கதை மாதிரியும் சொல்வார். இது அவர் சொன்ன கதைதான். நிஜமாய் நடந்தது என்றார். எப்போது என்று நான் கேட்கவில்லை. அவர் சொன்ன கொச்சையை மாற்றிக் கொஞ்சம் இலக்கண சுத்தமாக எழுதியிருக்கிறேன். அவர் சொன்னதை அப்படியே எழுத எனக்கும் கஷ்டம். எழுதினால், படிக்க உங்களுக்கும் கஷ்டம். ஜீரணிக்க முடிந்ததை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றவற்றை மறந்து விடுங்கள். அவர் ஜூரியாகப் போன கதை இது:



பெரிய பண்ணை பிச்சாண்டி கெட்டிக்காரன். என்ன செய்தான், யாரைப் பிடித்தான் என்றெல்லாம் தெரியவில்லை. சாமர்த்தியமாய் இதிலிருந்து தப்பிவிட்டான்.

எனக்கு அந்த ரெஜிஸ்தர் கடிதம் வந்த அன்று தான் அவனுக்கும் வந்ததாம். ஆனால் பயல் சொல்லவில்லை. இப்போது, வேறு வழியில்லாமல் நான் கொல்லத்துக்குக் கிளம்பி விட்ட பிற்பாடு சொல்கிறான். எகத்தாளமாய்ச் சிரிக்கிறான். 'பார்த்தீரா நான் தப்பிச்சுண்டுட்டேன்' என்று கேட்கிற மாதிரி கன்னத்தை உள்ளுக்குள் உறிஞ்சிக் கொண்டு உதட்டைச் சுளிக்கிறான்.

ஆனால் எனக்கு ஒரு பக்கம் பெருமையாகவும் இருந்தது. ஊரில் பெரிய மனிதர்கள் மதிப்புக்குரியவர்கள், கௌரவமானவர்கள்— இப்படிப்பட்டவர்களைத்தான் கூப்பிடுவார்களாம். எனக்கும் இந்த வாய்ப்பு வந்திருக்கிறது. ஹெட் கான்ஸ்டபிள் சாக்கோச்சன் தான் சிபாரிசு செய்து எழுதியிருப்பார். என்னிடம் ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டு அவர் எழுதி யிருக்கலாம். எதற்கு இந்தத் தொல்லையெல்லாம்!

சாக்கோச்சனுக்கு என்னிடத்தில் மிகுந்த மதிப்பு. ஊரில் மலையாளம் தெரிந்த மனிதன் நான் ஒருத்தன்தான். அதோடு பள்ளித் தலைமை ஆசிரியர் வேறே. சாக்கோச்சன் அந்த ஊருக்கு மாற்றலாகி வந்தப்புறம்தான் நானும் கோழிக்கோட்டிலிருந்து இங்கு வந்து வேலை ஏற்றுக் கொண்டேன். இரவில் ரோந்து வருகையில் என்னிடம்தான் சாட்சிக் கையெழுத்து வாங்க வேண்டும். முதலில் ஒரு மாதம் ஒவ்வொரு இரவும் என்னை எழுப்பிக் கையெழுத்து வாங்கிக் கொண்டிருந்தார். அப்புறம், "ஸாரை ராத்திரி உறக்கத்துல எழுப்பறது பாவம்" என்று காலையில் வந்து கையெழுத்து வாங்கிக் கொள்ள ஆரம்பித்தார் சாக்கோச்சன்.

அவர்தான் என் பெயரை எழுதியிருப்பார். என்னை இப்படிப் பெரிய மனிதனுக்கிக் கொள்வதில் எனக்குச் சந்தோஷமாகத்தான் இருந்தது. வேறு என்ன பெருமை எனக்கு? தனியார் பள்ளியானாலும் அட்மிஷன் காலத்திலாவது மதிப்பு இருக்கும். நான் தலைமை ஆசிரியராக இருந்தது அரசாங்கப் பள்ளி. அதுவும் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை மாற்றலாகும்.

ஆனால், பிச்சாண்டி கூறியதைக் கேட்டதும் எனக்குத் 'திக்'கென்றது. உண்மைதான். அவன் சொல்கிறது போல் சரியான தொல்லையில்தான் மாட்டிக் கொண்டோம் என்று தோன்றியது.

"கௌரவ ஜூரின்னு நீர் என்னவோ பெரிய 'இது'ன்னு நெனச்சுண்டிருக்கிறோளா?" என்று என்னைக் கிளறினான் பிச்சாண்டி.

"என்ன?"

"இல்லே, கேக்கறேன்!"

"என்ன?"

"என்ன ஆரும் தெரியுமோல்லியோ?"



"என்ன?"

"கொலைக் கேஸு, கிலைக்கேஸு வந்துதுன்னா என்ன ஆகும் தெரியுமோல்லியோ?"

"என்ன?"

''வாதிக்குச் சாதகமாச் சொன்னு பிரதிவாதிக்கிட்ட மாட்டிக்கணும்; பிரதிவாதிக்குச் சாதகமாச் சொன்னு வாதிகிட்ட மாட்டிக்கணும்!''

''அதெல்லாம் ஒண்ணும் கெட...''

''ஒமக்குத் தெரியாது!''

''என்ன?''

''பத்தமடை சீமாச்சு கதை தெரியுமோ ஒமக்கு?''

''யாரு?''

''பத்தமடை சீமாச்சு!''

''சொல்லு!''

''இப்படித்தான் கௌரவ ஜுரின்னு போட்டான். கூண்டுலே நிக்கறவன்தான் கொலையைச் செஞ்சான்னு நன்னாத் தெரியறது. குத்தின எடத்திலேயே திரும்பத் திரும்பக் குத்தறவன்னு பார்க்கற போதே தெரியறது. ஜுரி அஞ்சுபேர். அதுலே ஒண்ணு தான் சீமாச்சு. இத்தனைக்கும் அவன் வாயைத் தொறக்கலே. மத்த நாலு பேரும் சொன்னதுக்குத் தலையாட்டினான். என்ன ஆச்சு தெரியுமோ?''

''என்ன?''

''சீமாச்சு ஊருக்கு வந்து சேர்றதுக்கு முன்னாடி அவன் களத்திலே அடைஞ்சிருந்த வைக்கோல் போரெல்லாம் கருகிக் கெடக்கிறது. தோட்டத்துலே வாழை யெல்லாம் சாஞ்சு கெடக்கிறது.''

''எனக்கெங்கே இருக்கு வாழையும் வைக்கோலும்?''


''அதுதான் இன்னும் ஆபத்துன்னேன்!''

''என்ன?''

''அழியக்கூடிய பொருள் ஏதேனும் இருந்தாப் பழிவாங்கிப்பன். இல்லேன்னா...''

''இல்லேன்னா?''





''.... நான் ஏதுக்குச் சொல்லணும் என் வாயாலே? பேசாம, பயப்படாம போயிட்டு வாரும்!''

''என்ன சொல்றே நீ?''

''ஒண்ணுமில்லே.''

இவன் என்ன சொல்கிறான்? திடீரென்று எனக்கு முதுகுத் தண்டோடு சில்லிட்டு நடுங்கியது. குரலில் நடுக்கத்தைக் காட்டாமல், ''உயிருக்கு ஆபத்துங்கறயா?'' என்று கேட்டேன்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லேன்னு! தைரியமாப் போயிட்டு வாரும்!''

''போலீஸ் பாதுகாப்புக் கொடுக்க மாட்டாளோ?''

''கிழிச்சா!''

''என்ன?''

''கோர்ட்டுக்கு வெளியிலே உம்மை அடையாளம்கூடத் தெரியாது அவாளுக்கு!''

நான் யோசித்தேன். இந்தப் பயல் வேண்டுமென்றே என்னைப் பயமுறுத்துகிறானோ? அவனை எதிர்த்துத் தைரியமாகப் பேச வேண்டும். 'அயோக்கிய ராஸ்கல்!' என்று மனத்துக்குள் அவனைத் திட்டிக் கொண்டேன். பிறகு, ''ஒனக்கு என்ன தெரியும் இதைப் பத்தி? இது எவ்வளவு பெரிய விஷயம்! நீதியைக் காப்பாத்தற காரியம் இல்லையோ? அதுக்குத் தகுதியான ஆளுன்னு தீர்மானிச்சு அவா கூப்பிட்டிருக்கா. இதுக்குப் பயந்து முடியுமோ? அப்படிப் பார்த்தால் ஜட்ஜுகூடத்தான் பயந்து சாகணும்!'' என்றேன்.

பிச்சாண்டி சிரித்துக் கொண்டே ''எனக்கும் வந்தது!'' என்றான்.

''என்ன?''

''நான் தப்பிச்சுண்டுட்டேன்!''

''எப்படி?''

அவன் அலட்சியமாகச் சுள் கொட்டிய வாறே, '' என்னவோ பண்ணினேன், போமேன்!'' என்றான்.

நான் சற்றுத் தயங்கினேன். இவன் எப்படித் தப்பித்துக் கொண்டிருப்பான்? ஊரில்

பெரிய பணக்காரன். பணம் வேலை செய் திருக்குமோ?

''என்ன பண்ணினே? கொஞ்சம் சொல லேன். நானும் எப்படியாவது...''

''நீர் ஒண்ணும் பண்ண முடியாது!''

''என்ன?''

''போய்த்தான் ஆகணும்!''

''......''

''இனிமே ஒண்ணும் செய்ய முடியாது!''

''ஒண்ணும் செய்ய முடியாதா?''

''கடிதாசு வந்த உடனேயே ஏதாவது பண்ணி யிருக்கணும். நீர் என்னடான்னு யார் கிட்டேயும் சொல்லாம, இது ரொம்பப் பெருமைன்னு பொத்திப் பொத்தி வச் சுண்டீர்!''

அயோக்ய ராஸ்கல்! அயோக்ய ராஸ்கல்! பல்லைக்கூடக் கடிக்க விடாமல் என்னைப் பயம் நடுக்கியது. வேறு வழியில்லை. அடுத்த நாள் காலை கொல்லம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும்.

ரயில்வே ஸ்டேஷனில் நான் காத்து நின்ற போது, ''ஸார், நமஸ்காரம்!'' என்ற குரல் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். வந்து நின்றவனை எங்கேயோ பார்த்தாற்போலும் இருந்தது. அடையாளமும் தெரியவில்லை. யோசித்தேன்.

''ஸாருக்கு நினைவு இல்லையோ? சங்கனுச் சேரியிலே ஸார்கிட்டப் படிச்சேன்!'' சங்கனுச் சேரியில் நானூற்றைம்பது பையன்கள் படித்தார்கள். அவர்களில் இவன் யார்?

''இன்னும் தெரியலையா?... வரதராஜன்னு பேர்!''

''ஓ! வக்கீல் குமாஸ்தா கிருஷ்ணசாமி யோட...?''

''ஆமாம்!''

''நன்னு வளர்ந்துட்டியே!''

''...ஸார் ஆசீர்வாதம்!''

''பம்புளியில இரும்புக் கடை வைச்சிருக் கிறதா ஒங்கப்பா சொன்னுரே போன வரு ஷம் எங்கேயோ பார்த்தபோது?''

''ஆமாம்!''

''போன வருஷமே இரண்டு கொழந்தை இருக்குன்னு ஒங்கப்பா சொன்னுர். இப்ப இன்னெண்ணு இருக்கா?''

அவன் வெறுமெனச் சிரித்தான்.

''எங்கே இந்தப் பக்கம்?''

அவன் சற்றுத் தயங்கி விட்டு இருந்தாற் போல் சொன்னுன்: ''ஒண்ணுமில்லை. பிஸினஸ் விஷயமா கொல்லம் வரையிலும் போறேன். ஸார் எவ்வளவு தூரமோ?''

''நானும் கொல்லம்தான்!''

''என்ன விசேஷமோ?''

''ச்ச, ஒண்ணுமில்லே, சும்மாத்தான்!''

''சரிதான்!''

இருபதடி தள்ளி ஒருவர் எங்களையே பார்த் துக்கொண்டு நின்றிருந்தார். படிய வாரிய குடுமியுடனும், புஸு புஸுவென்ற மீசை யுடனும், கடிகாரச் சங்கிலி மாட்டிய நீல நிறக் கோட்டுடனும், மல் வேஷ்டியுடனும், விரல்களில் டாலடிக்கும் மோதிரங்களுடனு மாக. வரதராஜன் அந்தப்புறமாகத் திரும் பியதும், மீசைக்குக் கீழே தங்கப்பல் ஒளிர எங்கள் பக்கம் வந்து வரதராஜனைக் கும்பிட்டு,

''தம்பி நீங்கதானு? நான் அதான் அங்ஙனே நின்று பாக்யேன்!'' என்றுர்.

வரதராஜன் அவரைக் கும்பிட்டு, ''அடே, செட்டியார்வாளா? நீங்க எங்கே கௌம்பி னீங்க? யாராவது வராங்களா ரயிலிலே?'' என்றுன்.

''நீங்க ஒண்ணு! யாரு வாராக? நாந்தா கொல்லம் வரைக்கும் போறேன்!''

''கொல்லத்துக்கா? என்ன விசேஷம் செட்டியாரே?''

''அதையேன் கேக்கிக! கோர்ட்டுலே ஏதோ 'ஜூரி'யாமே, அதான் வரச்சொல்லிக் காயிதம் வந்திருக்கு!''

வரதராஜன் கண்கள் மின்ன, ''அடடே, அப்பிடியா? நானும் அதுக்குத்தான் போறேன்!'' என்றுன். சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டான். என் பக்கம் திரும்பிப் பார்த்தான். நான் புன்னகையுடன் ''நானும் அதுக்காகத்தான் போறேன்!'' என்றேன்.

''அப்படிங்களா? ரொம்பத் தோதாப் போச்சுங்களே!'' என்று கூறிய செட்டியார் ''ஸ்வாமி யாரு?'' என்று வரதராஜனிடம் கேட்டார். வரதராஜன் எங்களை ஒருவருக் கொருவர் அறிமுகம் செய்து வைத்தான். எட்டு மைல் சுற்று வட்டாரத்துக்குள் மூன்று வெவ்வேறு ஊர்களிலிருந்து ஒரே வேலையின் நிமித்தமாகப் புறப்பட்டிருந்த நாங்கள் அங்கே சந்தித்தது குறித்து ஆச்சரியப்பட்டுக் கொண்டோம்.

செட்டியார் இரும்பு வியாபாரத்தில் பெரும் புள்ளியாம். அவருக்கு இரும்பைப் பற்றி மட்டுந்தான் தெரிந்திருந்தது. ''நமக்கு இதெல்லாம் ஒண்ணும் பளக்கம் இல்லீங்கோ, ஸ்வாமி! என்ன கேப்பாக ? என்ன சொல்ல ணும் ?'' என்று என்னிடம் கவலையுடன் கேட்டார் அவர்.


எனக்கு என்னுடைய பழைய மாணவன் ஒருவனும் உடன் இருப்பது கொஞ்சம் உறுத் தியது. தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டு, ''அதெல்லாம் ஒண்ணும் கவலைப் படாதேங்கோ ! அவாபாட்டுலே பேசிண் டிருப்பா. நாமபாட்டுலே கேட்டிண்டிருக்க ணும். கடோசில, ஒங்களுக்கு என்ன தோன்ற தும்பா. நாம எல்லாரும் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வரணும்'' என்றேன்.

வரதராஜன் அந்தப்புறம் திரும்பிக் கொண்டு இலேசாகச் சிரித்த மாதிரி இருந் தது. 'டேய், பயலே! சிரிக்கவா செய்கிறே?' என்று மனத்துக்குள் பொருமினேன். வரத ராஜன் செட்டியாரிடம், ''செட்டியாரே ! உங்க மோதிரம், செயின் எல்லாத்தையும் கழற்றி உள்ளே வச்சுடுங்கோ !'' என்றுன்.

''ஏன் அப்படிச் சொல்லுறிய தம்பி? திருட் டுப் பயக சாஸ்தியோ கொல்லத்துலே?''

''எதுக்கு வம்பு?''

செட்டியார் பேசாமல் இருந்தார். எனக்குப் பிச்சாண்டி சொன்னது நினைவுக்கு வந்தது. இந்த வரதராஜனும் அதைத்தான் சொல் கிறுனே என்று தோன்றியது. வரதராஜன் ஒரு காலத்தில் என்னுடைய மாணவன். அவ னுக்கெதிரில் நான் ஒன்றையும் காட்டிக் கொள்ளக் கூடாது.



உங்களுடைய கண் பார்வை சரியாக இருக்கிறதா என்று சோதிக்க இந்த மூன்று படங்களையும் உற்றுப் பாருங்கள்...ஏதாவது விசேஷம் தெரிகிறதா? ஒன்றுமில்லையா? அப்படியானால் உடனே ஓடுங்கள் கண் டாக்டரிடம். ஏனெனில் சிறிது நேரம் பார்த்தால் மேடு பள்ளமாகத் தெரிய வேண்டும். பின்னர் மீண்டும் பள்ளம் மேடாகத் தெரிய வேண்டும்! -- கிட்டு

முகத்தில் புன்முறுவலை வருவித்துக் கொண்டு செட்டியாரிடம், ''அதெல்லாம் ஒன்னும் பயப்படாதேங்கோ செட்டியாரே! நாம ஒரு பவித்திரமான காரியத்துக்காகப் போறோம். தர்மத்துக்குச் சேவை செய்யப் போறோம். நம்பளை எந்த அதர்மமும் அணுகாது!'' என்றேன்.

செட்டியார், ''என்னவோ ஸ்வாமி! வெசயம் தெரிஞ்சவக நீங்க இருக்கிக. எனக்கு இப்ப எல்லாப் பயமும் பறந்து போச்சு. எனக்கு ஒண்ணும் தெரியாது. மூணுக்கு அஞ்சல ரெண்டு இஞ்சு கனம் நாலு பாளம் அப்படின்னு 'டக்'குனு பிடிச்சுக்குவேன்!'' என்று கூறிவிட்டு அசடு வழியச் சிரித்தார்.

பிரயாணத்தின் நடுவில் வரதராஜன் ஒரு விஷயம் சொன்னான். நாங்கள் தங்குகிற இடம் இரகசியமாகவே இருக்க வேண்டுமென்றான். அதனால் ஒவ்வொரு நாள் ஒவ்வோரிடத்தில்தான் தங்க வேண்டும். அவனுக்கு உறவினர்கள் கொல்லத்தில் இருந்தார்கள். ஆனால் அவர்கள் வீட்டில் தங்கக் கூடாது. தங்கினால் அவர்களுக்கும் ஆபத்து.

இதையெல்லாம் கேட்கக் கேட்க எனக்குப் பல்லைக் கிட்டியது. முட்டாள்தனமாக வந்து மாட்டிக் கொண்டாயிற்று. பொய்க் காரணம் சொல்லிப் போகாமல் இருந்தாலும், நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சாட்டுவார்களாம். இந்தச் சின்னப் பயல்களெல்லாம் சேர்ந்து என்னைப் பயமுறுத்திவிடுகிறார்கள். அவர்கள் எதிரில் பயத்தையும் வெளிக் காட்ட முடியவில்லை. இந்தச் செட்டியார் ஒருவர், 'ஸ்வாமிக்கு எல்லாம் தெரியும், ஸ்வாமிக்கு எல்லாம் தெரியும்' என்று பல்லவி பாடினார். தெரியாததைக்கூட ஒத்துக் கொள்ள முடியவில்லை. ஹூக்கும்! தெரியாதது என்ன இதில்? இரண்டு வக்கீல்கள் பேசப் போகிறார்கள். கேட்டுக் கொண்டிருந்து விட்டு, கடைசியில் மனத்துக்குப் படுவதைச் சொன்னால் போகிறது. தினசரித் தாள்களில் எத்தனை வழக்குகளைப் பற்றிய விவரங்கள் வருகின்றன! 'ஜஸ்டிஸ் ஜகந்நாதன்' தொடர் கதையைக்கூடப் படித்திருக்கிறேன் நான். பயமென்ன பயம்! யாருக்குப் பயம்? எனக்கு ஒன்றும் பயமில்லை.

வரதராஜனிடம் சொன்னேன்: ''வீட்டுலே அவளுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை. இந்தச் சமயத்துலே இப்படி ஊரை விட்டு வர வேண்டியிருக்கேன்னு யோசிச்சேன். அவ்வளவுதான். மத்தப்படி ஒண்ணும் பயம் கெடையாது. நமக்கென்ன பயம்? என்ன நான் சொல்றது?'' பின்னர் அவர்கள் இருவருக்கும் தைரியம் சொன்னேன்: ''அதெல்லாம் நம்பள யாரும் ஒண்ணும் செய்ய முடியாது. நீங்க எதுக்கும் பயப்படாதேங்கோ.''

செட்டியாரின் உடலில் இலேசாக நடுக்கம் கண்டாற்போல் எனக்குத் தோன்றியது. சற்றுநேர மௌனத்துக்குப்பின் வரதராஜன், ''எதுக்கும் நாம இந்த விஷயத்தைப் பத்தி ஓரக்கப் பேச வேண்டாம். நாம யாரு, எதுக்காக வந்திருக்கோங்கறதே வெளியே தெரிய வேண்டாம்!'' என்றான்.

வரதராஜனுக்குக் கொல்லத்தில் நல்ல பரிச்சயம் இருந்தது. அதனால் இரவு ஒன்பது மணிக்கு நாங்கள் போய்ச் சேர்ந்ததும், யாரிடமும் எதுவும் விசாரிக்காமல் ஒரு லாட்ஜில் அறை எடுத்துக் கொண்டோம். நாங்கள் வியாபார விஷயமாக வந்திருப்பதாக லாட்ஜில் சொல்லியிருப்பதாக வரதராஜன் பிறகு சொன்னான். எனக்குச் சாப்பாடு பிடிக்கவில்லை. 'இந்த ஊர்ச் சாப்பாடு வாயில் வைக்க வழங்கலையே!' என்றேன். உறக்கம் வரவில்லை. 'புது இடம் இல்லியா, அது தான்!' என்று சமாதானப்படுத்திக் கொண்டேன்.

அடுத்த நாள் மூவரும் நீதிமன்றத்தில் ஆஜரானோம். ஜூரர்களாக இன்னும் இருவரும் வந்திருந்தனர். ஒருவர் ஒலவக்கோட்டைச் சேர்ந்த ஊமன். இன்னொருவர் பந்தளத்திலிருந்து வந்திருந்த மத்தாயி. நாங்கள் ஒருவரை யொருவர் அறிமுகப்படுத்திக் கொண்டோம். செட்டியாருக்குத்தான் மலையாளம் பேசுவது கஷ்டமாக இருந்தது. ஆனால் நன்றாகப் புரிந்து கொண்டார். வக்கீல்களும் நீதிபதியும் நிமிடத்துக்கு ஒரு முறை, 'கனவான்களே, கனவான்களே!' என்று எங்களை அழைப்பதைக் கேட்டு எனக்குப் பெருமையும் சந்தோஷமும் ஒன்றையொன்று மிஞ்சின.

சென்ற வருடம் ஜூலை மாதம் இருபத்து மூன்றாம் தேதி காலை ஏழு மணிக்கு — ஏன்தான் காலம், நாளெல்லாம் திருப்பித் திருப்பிச் சொல்லிக் குழப்புகிறார்களோ என்று எரிச்சலாகக்கூட வந்தது - சாயந்நாள் குட்டப்பன், புழையில் தோணி ஓட்டிச் செல்லுகையில் துடுப்பில் ஏதோ தட்டுப்பட்டதாம். அவன் அதைக் கிளறிப்பார்த்து அது ஒரு பிணமென்று கண்டவுடன் பதறிப் போனான். பின்னர் போலீசுக்குத் தகவல் கொடுத்தான். பிணத்தை வைத்துக் கொண்டு புலன் விசாரித்து மிகவும் பாடுபட்டுப் போலீசார் வழக்கை ஜோடித்திருந்தார்கள்.



''மீட்டர்படிதான் துட்டு தருவேன் என்று பிடிவாதமாய்ச் சொன்னீங்களே! எழும்பூரிலிருந்து சென்ட்ரல் வந்ததற்கு மீட்டர் ரூ. 54-75 காட்டுது! தரீங்களா?''

நீதிபதி கூறியபடி, நாங்கள் வழக்கின் விவரங்களைக் குறித்துக் கொண்டோம். வயதில் பெரியவனென்று என்னையே தலைமை ஜூரராக மற்ற நால்வரும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தார்கள். செட்டியார் மலையாள வார்த்தைகளை அப்படியே தமிழில் எழுதிக் கொண்டார்.

அடுத்தடுத்த வீட்டிலிருந்த மரியம்மைக்கும் கொலையுண்ட கொச்சப்பனுக்கும் தொடர்பு உண்டாயிருந்ததாம். ஆனால் கொச்சப்பன் ஈழவ ஜாதியென்பதால் மரியம்மையின் வீட்டினர் இதைக் கண்டித்தனராம். நிலைமை கட்டுக்கு மீறிப் போய், இரண்டு மூன்று முறைகள் கொச்சப்பனை எச்சரித்தும் அவன் ஒதுங்கிப் போகாததால், மரியம்மையின் அண்ணன் ஜேக்கப், இரண்டு நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு இரவோடு இரவாகக் கொச்சப்பனை அடித்துக் கொன்று, புழையில் தூக்கி எறிந்து விட்டானாம். இது தான் போலீஸ் தரப்பு வாதம்.

செட்டியார் என் காதுக்கு மட்டும் கேட்கும்படியாக ஜேக்கப்பைத் திட்ட ஆரம்பித்தார். எனக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. பாவி அடித்தே கொன்றிருக்கிறானே! இவன் விஷயத்தில் வந்து நாம் மாட்டிக் கொண்டோமே! நீதிமன்றத்தில் இருந்தவர்கள் நிறைய பேர் கொடுவாள் மீசை வைத்திருந்தார்கள். ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்கூட வைத்திருந்தார். இவர்களில் யார் ஜேக்கப் என்று தெரியவில்லை.

இப்படி ஒரு வழக்கின் விவரங்களையெல்லாம் தினசரியில் படிக்கச் சுவாரசியமாகத் தானிருக்கிறது: ஆனால் நேரில் கவனிக்கையில் பயங்கரமாகவும் அலுப்பாகவும் இருந்தது, எனக்கு. செட்டியார் அடிக்கடி என்னை அரித்துக் கொண்டிருந்தார். புரியாத மலையாள, ஆங்கில வார்த்தைகளுக்கு விளக்கம் கேட்டுத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தார். எங்கள் பக்கமிருந்து சிறு சத்தம் எழுந்தால் கூட நீதிபதி எங்களைத் திரும்பிப் பார்த்தார். வக்கீல்களும் தாம் பேசுவதை நிறுத்திவிட்டு எங்களிடம், ''இன்னொரு முறை விளக்கட்டுமா, கனவான்களே?'' என்று கேட்டார்கள். எனக்கு, 'ஏதடா இது தொல்லை!' என்றிருந்தது. செட்டியாரின் வாயில் துணியை வைத்து அடைக்கலாம் போலிருந்தது.

குற்றவாளிக் கூண்டில் வந்து நின்ற ஜேக்கப்பைக் கண்டவுடன் எல்லாருமே ஆச்சரியம் அடைந்தார்கள் என்பது அங்கு உண்டான பரபரப்பிலிருந்து தெரிந்தது. நான் எதிர்பார்த்ததுபோல் அவனுக்குக் கொடுவாள் மீசை இல்லை. அரும்பு மீசைகூட இல்லை. கொலைகாரனுக்கு மீசை அப்படியொன்றும் அவசியமில்லை போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன். உடனே நாக்கைக் கடித்துக் கொண்டேன். குற்றவாளியின் தரப்பு வாதத்தைக் கேட்பதற்கு முன்பே இப்படி முடிவு செய்வது சரியல்ல என்று தோன்றியது எனக்கு. செட்டியார் வேறு, ''பாருங்கோ, ஸ்வாமி! சாது மாதிரி நிக்யான் தடிப்பய!'' என்றார். 'அவர் அருகே உட்கார்ந்ததே தவறு' என்று தோன்ற ஆரம்பித்துவிட்டது எனக்கு. ஆனால் வழக்கு நடந்த ஐந்து நாட்களும் செட்டியார் என் அருகேதான் உட்கார்ந்தார். ''நான் ஸ்வாமி அருகில்தான் இருக்கும்'' என்று ஒவ்வொரு நாளும் கூறிவிட்டு மீசைக்கடியில் இருந்த தங்கப்பல் ஒளிர ஒரு சிரிப்பு வேறு. வர வர, தம் தமிழ்ப் பேச்சில் நிறைய மலையாள வார்த்தைகளையும் கலந்து பேச ஆரம்பித்திருந்தார் அவர்.

கொச்சப்பனுக்குச் சாதகமாக ஒரே ஒரு சாட்சிதான். அவன் நண்பன் விஜயன். கொச்சப்பனுக்கும் மரியம்மைக்கும் தொடர்பு உண்டென்பதும் மரியம்மை வீட்டாருக்கு இது சம்மதமில்லை யென்பதும் தனக்குத் தெரியும் என்றான் அவன். ஜூலை மாதம் இருபத்திரண்டாம் தேதியிலிருந்து அவனைக் காணவில்லையென்றும் சொன்னான் அவன். கொச்சப்பன் ரொம்ப நல்லவனென்றும், எந்த வம்புக்கும் போகாதவன் என்றும் கூறினான். இவற்றைத் தவிர அவனுக்கு வேறெதுவும் தெரியவில்லை.

ஜேக்கப் தரப்பில் அரசாங்க டாக்டர் சொன்னார். கொச்சப்பனின் உடலிலிருந்த காயங்கள் எங்கிருந்தோ கீழே விழுந்ததில்தான் பட்டிருக்க வேண்டும் என்றும் யாராவது அடித்த காயங்கள் இப்படி இருக்காது என்றும் அவர் கூறினார். மருத்துவ வார்த்தைகளை வைத்துக் கொண்டு அரசாங்க வக்கீல் அவரை வாட்டி வாட்டி மடக்க அவர் முன்னுக்குப்பின் முரணாக உளறத் தொடங்கினார். இதைக் கண்டதும் என்னை அறியாமல் ஏனென்று தெரியாமல் என்னுள் சந்தோஷம் பொங்கியது.

மரியம்மையும் ஒரு சாட்சியாக வந்து நின்றாள். அவள் நிறை மாதக் கர்ப்பிணியாக இருந்ததால் அவளுக்கு உட்கார்ந்து கொள்ள நீதிபதி அனுமதி அளித்தார். அவள் கொச்சப்பனைத் தனக்குச் சரியாகவே தெரியாதென்றும், தன் பெரியப்பா வீட்டிலேயே தான் வளர்ந்ததாகவும், இந்தச் சம்பவத்துக்கு இரண்டு மாதங்கள் முன்புதான் தன் தமையனோடு வசிக்க வந்ததாகவும் கூறினாள். கொச்சப்பனை ஓரிரு முறைகள் தெருவில் பார்த்திருப்பதைத் தவிர அவனோடு வேறு எந்தத் தொடர்பும் கிடையாது என்றாள்.

அரசாங்க வக்கீல் வளைத்து வளைத்துக் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்ததும் பதில் கூறா மல் சிறு குரல் பாய்ச்சி அழ ஆரம்பித்தாள். எல்லாரும் அவள் மேல் இரக்கப்பட்டார்கள்.

மரியம்மைக்குப் பிறக்கவிருந்த குழந்தை யின் தகப்பனென்று கூறப்பட்ட தோமாச்சன் அடுத்த சாட்சி. இரு வீட்டாருடைய சம்ம தத்தின் பேரில் தாங்கள் இருவரும் திருமணத் துக்கு முன்பே நெருங்கிப் பழகியதாகத் தெரி வித்தான் அவன். ஜெக்கப் இந்த நிலையில் இருப்பதால் திருமணத்தை நடத்த முடிய வில்லையென்றும், அவன் நிரபராதியென நிரூபிக்கப்பட்டு வெளிவந்த அடுத்த நாளே மரியம்மையைத் திருமணம் செய்துகொள்ளத் துடித்துக் கொண்டிருப்பதாகவும் கூறினான் அவன். 'கொச்சப்பனைத் தெரியுமா?' என்று கேட்கப்பட்டபோது. 'அந்தத் தெற்றிப்பல் சழுவனை நான் பார்த்ததே இல்லை!' என்றான். அரசாங்க வக்கீல் இதை வைத்துக் கொண்டு அவனை மடக்கிய போது விழித்தான். பின்னர் அவனைப் பற்றி யாரோ தன்னிடம் சொல்லி யிருக்கிறார்கள் என்றான்.

எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. 'உனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு யார் தகப்பன் ?' என்று மரியம்மையைக் கேட்ட போது அவள் அழ ஆரம்பித்துவிட் டாள். அந்தக் கேள்விக்குப் பதிலை அவளிட மிருந்து வருவிக்கவே முடியவில்லை. இங்கே ஒருவன் 'நான்தான் அக்குழந்தைக்குத் தகப் பன்' என்று வந்து நிற்கிறான். செட்டியார் நொந்து கொண்டிருந்தார். ''ஸ்வாமி, இந்த ஆபாசத்தையெல்லாம் காதால் கேட்க வேண்டியிருக்கே, சீ, சீ!'' என்றார். அவ ருடைய மீசையையும் மீறிக் கொண்டு வெளியே எச்சில் தெறித்தது.

'நிச்சயமின்மையின் பலனைக் குற்றவாளிக் குக் கொடுங்கள்!' என்று குற்றம் சாட்டப் பட்டவனின் வக்கீல் அடிக்கடி எங்களிடம் கூறிக் கொண்டிருந்தார். இந்தத் தொடரின் அர்த்தத்தையும் அவ்வப்போது விளக்கிக் கொண்டிருந்தார். எனக்கு அந்தத் தொடர் வேடிக்கையாக இருந்தது. ஒவ்வொரு முறை வக்கீல் இவ்விதம் கூறுகையிலும் செட்டியார் என்னிடம், ''ஸ்வாமி, என்ன சொல்லுறிய? அதான் நல்லாத் தெரியுதே, எல்லாப் பயலு வளுஞ் சேர்ந்து அந்தப் பொம்புளையப் பயங் காட்டியிருக்காங்கன்னு...!'' என்றார்.

ஐந்து நாட்கள் வழக்கு நடந்தது. இருட் டின பிறகு வெளியே இறங்குவதைத் தவிர்த் தேன். வரதராஜனின் யோசனைப்படி ஐந்து நாட்களுக்குள் இருப்பிடத்தை மூன்று முறை மாற்றியாயிற்று. மற்ற இரு ஜூரர்களில் ஒருவரான மத்தாயி என்னிடம் எங்கே தங்கி யிருக்கிறீர்கள் என்று கேட்டபோதுகூட மழுப்பிவிட்டேன். மத்தாயியும், ஜனமனும் எங்கே தங்கி யிருந்தார்கள் என்பது தெரிய வில்லை.

ஒரு நாள் மாலை நான் வரதராஜனுடனும் செட்டியாருடனும் கொஞ்சம் தைரியம் வரப் பெற்றுச்சற்று உலாவிவிட்டு அறைக்குத் திரும் பிக் கொண்டிருக்கையில் வரதராஜன் என் னிடம் பரபரப்புடன் ஒரு காட்சியைச் சுட்டிக் காண்பித்தான். ரோட்டின் எதிர்ப்புறத்தில்

கோடையானாலும் சோடை போகாத சிரிப்பு!




''உன் அப்பா நேற்று நான் என் 'காதல் டய லாக்'கை எடுத்து விடும் போது அப்படியே உருகிப் போய் விட்டார் தெரி யுமா ?''

''அப்படியா? அவ்வ ளவு பாவத்துடன் சொன் னீர்களா?''

''பாவமுமில்லை மண் ணாங்கட்டியுமில்லை. அவர் அறையில் 'ஏர்-கண்டிஷன்' வேலை செய்ய வில்லை, அவ்வளவு தான்!''

''அநியாயம்! எங்கள் வீட்டு 'ரெஃப்ரிஜிரேட்டர்' குளிர் காலத்தில் வேலை செய்து, வெயில் காலத் தில் வேலை செய்ய மாட்டே னென்கிறது, சார்.''



''நலனை முறையில் வாங்கினது தானே, தவனை முறையில்தான் வேலை செய்யும் !''



''கோடைக்கு நாம ரெண்டு பேரும் ஜாலியாக ஊட்டி போய் வரலாமா?''

''இரண்டில் ஒன்று தான் செய்ய முடியும்.''

''என்ன?''

''நாமிருவருமாகப் போகலாம், அல்லது ஜாலி யாகப் போகலாம் !''

''கடைக்காரரே! என் அப்பா கோடைக்காக விசிறி வாங்கச் சொல்லி என்னை அனுப்பி யிருக் கிறார். காம்பு இல்லாத விசிறி நாலு கொடுங்கள். நாளைக்கு என் பரீட்சை ரிசல்ட் வருகிறது!''





கோடையில் நான்கு வாரங்கள் உண்டு. ஒரு மாதத்தில் முதல் வாரம்: ஏர்கண்டிஷன் தியேட்டர் சினிமா வாரம்.

இரண்டாம் வாரம்: ஐஸ்கிரீம் வாரம்!

மூன்றாம் வாரம்: 'கூல் டிரிங்க்' வாரம்.

நாலாம் வாரம்: மெரினா பீச் வாரம் !

- கே.வி.எம்.

> புள்ளிவிவரங்கள் பொய் சொல்லாது; ஆனால் பொய் சொல்பவர்கள் பெரும் புள்ளிகளாக விளங்குவார்கள்.
>
> - ஜெனரல் க்ராஸ்வினர் - 'ரமணன்'

ஊமனும், மத்தாயியும் தோமாச்சனுடனும் இன்னும் இருவருடனும் சந்தோஷமாய்ச் சிரித்துப் பேசியவாறு போய்க் கொண்டிருந்தார்கள். போய்ச் சுமார் இருபதடி தூரத்தில் இருந்த ஒரு மிலிட்டரி ஹோட்டலினுள் நுழைந்தனர். எல்லாவற்றையும்விட வரதராஜன் குசுகுசுவென்று தணிந்த குரலில் பேசியதுதான் எனக்குப் பயத்தைக் கொடுத்தது.

அந்தப் பெயர் தெரியாத இருவரும் ஓரிரு முறை என்னைக்கோர்ட்டில் விசாரணை முடிந்து வெளியே வருகையில் நெருங்க முயன்றதும் நான் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு அவர்களுக்கு டிமிக்கிக் கொடுத்ததும் எனக்கு நினைவு வந்தது. ஒரு முறை கூடவே வந்து கொண்டிருந்த செட்டியாரைத் திடீரென்று காணுமல் நான் பதறிப் போய்விட்டேன். வரதராஜன் வேறு ஏதேதோ கூறி என்னுடைய பயத்தை அதிகரித்துவிட்டான். அப்புறம் சற்று நேரம் கழித்துச் செட்டியார் தாமாக வந்து சேர்ந்தார். வழியில் யாரோ ஒருவனுடன் மலையாளத்தில் பேசிக் கொண்டிருந்ததாகக் கூறினார். 'அவன் மீசை வைத்துக் கொண்டிருந்தானு?' என்று நான் கேட்டதும், 'ஆமாம்' என்றார். 'அவன் என்ன கேட்டான்' என்று நான் வினவியபோது என் குரல் நடுக்கத்தை வெளியே காட்டாமல் மறைத்துக் கொள்ள முயன்றேன். செட்டியார் சிரித்துக் கொண்டே, "ஸ்வாமி, ஒங்களைப் போல எனக்கு மலையாளம் தெரியுமா, என்ன?..." என்றார்.

"அவன் எங்கேயாவது ஹோட்டலுக்குக் கிட்டலுக்குக் கூப்பிட்டானே ?"

"அதெல்லாமில்லே, ஸ்வாமி ! கூப்பிட்டாப் போயி நல்லா சாப்பிட்டுப் போட்டு வரலான்னு நெனச்சேன் ! பய மவனுக்கு மரியாதையே தெரியலே!" என்றார்.

அரசாங்க வக்கீல் மகா கெட்டிக்காரராயிருந்தார். ஜேக்கப் தரப்புச் சாட்சிகளை அழ அழ அடித்தார். அவர்களும் முன்னுக்குப்பின் முரணாக உளறினர். பெரிய தமாஷா யிருந்தது. ஆனாலும் எனக்கு அலுப்பாகவே இருந்தது. எத்தனை முறை கேட்டதையே திருப்பித் திருப்பிக் கேட்பது?

விசாரணை முடிந்ததும் நீதிபதி வழக்கை நடு நிலைமையில் நின்று, பட்டுக் கொள்ளாமல் விவரித்துவிட்டு, கனவான்களாகிய ஜூரர்கள் தான் ஓர் ஒத்த முடிவுக்கு வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அவரும் சொன்னார்: "நிச்சயமின்மையின் பலனைக் குற்றவாளிக்குக் கொடுங்கள்!"

தனியறையில் நாங்கள் கூடினோம். ஊமனும், மத்தாயியும், ஜேக்கப் ஒரு பாவமும் அறியாதவன் என்றார்கள். நான், ஜேக்கப் தரப்பில் எத்தனை பொய்கள் அடங்கியுள்ளன என்பதை எடுத்துக்காட்டினேன். வரதராஜனும் எனக்குப் பக்கபலமாக இருந்தான். செட்டியார், "ஸ்வாமி பரயறதுதான் நமக்கும் !" என்றார், முழுவதும் மலையாளத்தைப் பேசிவிட்டதாக நினைத்துக் கொண்டு.

இறுதியில் ஊமனும், மத்தாயியும் பதில் சொல்ல முடியாமல் திணறினர்கள். ஜேக்கப் தான் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டது. இது எழுத வேண்டிய முறையில் எழுதப்பட்டு நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. நீதிபதி, நீதிமன்றத்தின் சார்பிலும் மற்ற எல்லாருடைய சார்பிலும் எங்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசிவிட்டு, தீர்ப்பு இரண்டு நாட்களுக்குப்பின் முடிவாகும் என்றும் ஜூரர்கள் தத்தம் ஊருக்குப் போகலாம் என்றும், மறுபடியும் எங்கள் உதவி தேவையிருக்குமானல் எங்களுக்கு அழைப்பு அனுப்பப்படும் என்றும் கூறினர். அரசாங்க குமாஸ்தா எங்களை விசாரித்துவிட்டு அவரவர்க்கு ஆன பயணச் செலவைக் கொடுத்து, கையெழுத்து வாங்கிக் கொண்டபின் மறுபடியும் கையை நீட்டினன். அப்போதுதான் அவன் முகத்தில் சிரிப்பு மலர்ந்தது.

நான் அங்கிருந்து நேராக ஆலப்புழைக்குப் போய் என் பிள்ளை தியாகராஜனைப் பார்த்து வரத் தீர்மானித்திருந்தேன். செட்டியாரும், வரதராஜனும் என்னைப் பஸ்ஸில் ஏற்றிவிட உடன் வந்தார்கள். தெருவில் நடக்கும் போதே வரதராஜன் பரபரப்புடன் அங்குமிங்கும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தான். திடீரென்று, "பாருங்க ஸார், பாருங்க ஸார் ! அதோ அந்தக் கடைக்குள்ளிருந்து நம்மையே ஒருத்தன் பார்க்கறான்! சீக்கிரம் நடங்கோ!" என்றான். "ஸார், அந்தப் பக்கமாப் போக வேண்டாம். இந்த ஓரத்தோடேயே போவோம்!" என்றான். "நீங்க வேற பஸ்ஸிலே உக்காந்துண்டிருந்துட்டு, ஆலப்புழை பஸ் கிளம்பறபோது சடார்னு போயி அதிலே ஏறிண்டுடுங்கோ!" என்று யோசனை தெரிவித்தான்.

நானும் அப்படியெல்லாம் செய்து அவர்களிடமிருந்து விடைபெற்றேன். பஸ் பத்து மைல் தாண்டிய பிறகே பெருமூச்சு விட்டேன்.


அந்த வழக்கைப் பற்றி நினைத்துக் கொண்டே வந்தேன். நிச்சயமாய் அந்தப் பயல்தான் கொலை செய்தான் என்று தெரிகிறது. எல்லா ஓட்டைகளும் வெளி வந்த பிற்பாடும், என்ன நம்பிக்கையோடும் தைரியத்தோடும் அவர்கள் வழக்காடிக் கொண்டிருந்தார்கள் ! அநேகமாய் நீதிபதி அவனுக்குத் தூக்குத் தண்டனை விதிப்பார். எனக்குத் 'திக்'கென்றது. 'இவன் செத்தால் கொச்சப்பன் பிழைத்துவிடப் போகிறானு?' என்ற கேள்வி மனத்துள் எழுந்தது. அவன்தான் குற்றவாளி என்று நிரூபணமாகவில்லை என்று கூறி, சந்தேகத்தின் பலனை அவனுக்கு நாங்கள் அளித்திருக்க முடியும். எனக்கு இருப்புக் கொள்ளாமல் நெஞ்சை அரித்தது.

ஆலப்புழைக்குப் போய் என் பேரக் குழந்தை மணியை வாரியெடுத்து உச்சி மோந்ததும் வழக்கு என் நினைவினின்றும் சற்று நேரம் மறைந்தாற்போல் இருந்தது.


இந்திய உதவி காப்டன் வெங்கட்ராகவன் பிலிப்ஸ் சைக்கிள் உதவியினால் உடல் வளத்தை தெம்புடன் வைத்திருக்கிறார்

இந்தியாவின் சிறந்த விளையாட்டு வீரர் வெங்கட் தினமும் சைக்கிள் சவாரி செய்வதன் அவசியத்தை உணர்ந்திருக்கிறார் — அதுவும் குறிப்பாக விளையாட்டுப் போட்டிகள் இல்லாத காலங்களில் இதன்மூலம் அவரால் எப்பொழுதும் தெம்புடன் செயலாற்ற முடிகிறது. உலகப் புகழ்வாய்ந்த பிலிப்ஸ் ஊக்க மிகு வாலிபர்களுக்கு உகந்தது. கவர்ச்சியானது. அனாயாசமாக சவாரிசெய்ய வல்லது.

அதில்தான் எத்தனை வகை! ஒவ்வொரு இளைஞரின் விருப்பத்துக்கும் ஏற்றவாறு ஒவ்வொருவகை பிலிப்ஸ்!



பிலிப்ஸ் ஒலிம்பியா (சுபர்ப் மாடல்)
பிலிப்ஸ் நியுயார்க்கர் (ஸ்போர்ட்ஸ் மாடல்)
பிலிப்ஸ் லேகஸ் மாடல்
பிலிப்ஸ் கான்கரர் (ஜூனியர் மாடல்)



ஊக்கமிகு
வாலிபர்கள்
உவந்து
வாங்குவது
பிலிப்ஸ்

இந்தியாவில் தயாரிப்போர்:
டிஐ சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா
அம்பத்தூர், சென்னை-53
உரிமையாளர்கள்:
டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
ஆஃப் இந்தியா லிமிடெட் சென்னை-1
பதிவுபெற்று உபயோகிப்போர்.

TIC/PH/6796



30. பதி உத்தரவா? பதி விரதமா?

வரம் வழங்கும் தேவி! உன் பராக்கிரமத்துக்கு உவமை ஏது? உன்னைப்போல் வடிவழகோடு இருந்தும் சத்துருக்களை அஞ்சச் செய்வோர் எங்குண்டு? சித்தத்தில் கிருபையும், போரில் கண்டிப்பும் உன்னிடமே இம்மூவுலகிலும் ஒன்றாகக் காணப்பட்டது!

(துர்கா ஸப்தசதீ - 4.22)

முன்பே பிருந்தாவனத்துக்கு வந்திருந்த, யோகின்—மா அம்மாவை இந்தக் கோலத்தில் கண்டு திடுக்கிட்டு விட்டாள். இருவரும் கட்டிக் கொண்டு பிழியப் பிழிய அழுதனர். டாகூரைப் பற்றியே ஓயாமல் பேசிப் புலம்பினர்.

கருணாமூர்த்தியான பகவான் ஓர் இரவில் அவர்கள் இருவருக்கும் காட்சி தந்தார். "அன்புக் குழந்தைகளே! ஏன் இன்னமும் இப்படி அழுதபடி இருக்கணும்? நான் இதோ இருக்கேனே! நான் வேறே எங்கேதான் போக முடியும்? ஒரு ரூமிலே இருந்து இன்னொரு ரூமு'க்குப் போற மாதிரி..." என்று சொல்லிக்கொண்டே அந்த 'இன்னொரு ரூமு'க்குப் போய் விட்டார்!

ராஸ லீலையின் மத்தியில் மறைந்த மாதவனை ராதை தேடியது போலவே பிருந்தாவனத்தில் அம்மா ராமகிருஷ்ணரைத் தேடிக் கொண்டிருந்தாள். தனது வழக்கத்துக்குப் புறம்பான ஆவேசப் பித்து நிலையிலேயே இருந்தாள் அம்மா. மற்றவர் அறியாமல் தன்னந் தனியாக, யமுனையின் அகன்ற மணற் கரையைத் தாண்டிச் சென்று ஆற்றோரத்தில் கிடக்கலானாள்.

அவளை அழைத்து வரப் போனவர்களுடன் "நான் சாரதையில்லை; ராதையாக்கும்" என்றாள்.

ஒரு நாள் நீண்ட நேரம் சென்ற பின்னும் அம்மாவுக்கு வெளி உலக உணர்வு ஏற்படுகிற வழியாகக் காணோம். யோகின்மா பல திவ்விய நாமங்களை அவள் செவியில் கூவியும் பயனில்லாமல் சளைத்துப் போனாள். பிரம்மசாரி யோகின் இந்தக் காரியத்தைத் தொடர்ந்தார்.

அரும்பு மலருகிற மாதிரி, அம்மாவின் இமைகள் மெல்லத் திறக்கலாயின.

"சாப்பிடணும்" என்று அவளது உதடு முணுமுணுத்தது.


அனைவருக்கும் தூக்கி வாரிப் போட்டது. ராமகிருஷ்ணர் பாவ சமாதியைக் கலைத்து அவ்வுலகிலிருந்து விடுபட்டு இவ்வுலகுடன் தம்மைக் கட்டிப் போட்டுக்கொள்ள எண்ணும்போதெல்லாம் இப்படியேதான் "சாப்பிடணும்" என்பார்! மண்ணில் விளைந்த தானியமோ, பழமோ, வெற்றிலையோ வயிற்றில் போனதும் அவரை மண்ணுலகுடன் கட்டிப் போட்டுவிடும்!

யாரோ உணவு கொண்டு வந்து சாரதை முன் நீட்டினார்கள். இன்னொருவர் வெற்றிலை கொண்டு வந்தார். (வங்கத்தில் விதவைகளும் தாம்பூலம் போடுவது உண்டு.) மற்றொருவர் தீர்த்தம் எடுத்து வந்தார். சிப்பியிலிருந்து சிறிதே வெளிவந்த முத்துப் போல், இமையைச் சிறிதே நீக்கி வெளிப்பட்ட விழியால் இதை எல்லாம் பார்த்த தேவி, ஒரு பீடாவை எடுத்தாள். அதிசயத்திலும் அதிசயமாக ஆசாரசீலையான தேவி அந்தப் பீடாவின் முனையை ராமகிருஷ்ணர் செய்வது போலவே பல்லால் கடித்தாள்.

சந்தர்ப்பத்தை நழுவ விடக் கூடாதென்று பிரம்மசாரி யோகின் அவளிடம் அப்போது பல வினாக்கள் விடுத்தார். அவள் ராமகிருஷ்ணரைப் போலவே — 'போல' என்ன, சாட்சாத் ராமகிருஷ்ணராகவே — அவற்றுக்கு உத்தரம் தந்தாள். அப்போது அவளது சைகை, பேசும் பாங்கு எல்லாம் குரு மகாராஜரையே உரித்து வைத்திருந்தன!

வெளி உணர்வு முற்றிலும் பெற்ற பின் அவள் "டாகூர் என் உள்ளும் புறமும் வியாபிச்சிருந்தார்" என்றாள்.

பிறகு ராமகிருஷ்ணரே அவளுக்குத் தரிசனம் தந்து, "நான் உனக்குள்ளேயே சூக்ஷ்மமா இருப்பேன்" என்றார்.



சிறிது சிறிதாக அந்த சூட்சுமத்தை அவள் கிரகித்துக் கொள்ளலானாள். ராமகிருஷ்ண பாவம் இப்போது அவளுள் பெருகியது. அவர் சில சமயங்களில் உலகத்துக்குப் புரியாத ரீதியில் பேசுவாரே, அதேபோல் இவளும் பேசலானாள். ஒரு நாள் பிரேத ஊர்வலம் ஒன்றைப் பார்த்தாள். 'புண்ணியசாலி. எவனோ இங்கே வந்து உயிரை விட்டு (நிரந்தர) பிருந்தாவனத்துக்கே போயிட்டான். நானும் தான் வந்திருக்கேன் — எனக்கு ஒரு சின்ன ஜுரமாவது வந்துதோ? ஊஹூம்? அப்பாடா, எத்தனை வயசாயிடுத்து? அப்பாவைப் பார்த்தாச்சு, ஆத்துக்காரரோட அண்ணாவைப் பார்த்தாச்சு...'' என்று குமறினாள்.

''என்னம்மா சொல்றேள், அப்பாவையும் மச்சினரையும் பார்க்கறதுலே என்ன அதிசயம்? அதுக்கு வயசாவானேன்?'' என்று கேட்டாள் யோகின்.

தேவி மௌனமானாள்.

உண்மையில் அப்போது அவளுக்கு வயோதிகம் வந்துவிடவில்லை. ராமகிருஷ்ணர் தேக வியோகமானபோது நம் மாதாவுக்கு வயது முப்பத்துமூன்றே தான். அதன் பின் முப்பத்து மூன்றாண்டு இந்த மண்ணில் வாழ்ந்தாள்.

தேவியும் உடன் வந்தவர்களும் ஒரு பட்ச காலம் தினந்தோறும் பிருந்தாவன எல்லையைப் பிரதட்சிணம் செய்து வந்தனர். அப்போது வனத்தையும் வயலையும் கரடுகளையும் அம்மா அலாதி உன்னிப்புடன் பார்ப்பாள். பார்த்துக் கொண்டே மலைத்து நின்றும் விடுவாள். இச்சந்தர்ப்பங்களில் நிகழ்காலத்தை

மறந்து அவள் பாகவத காலத்துக்குப் போய்விட்டாள் என்று உடன் வந்தவர் உணர்ந்தனர். ஆயினும் அவர்கள் அவளைக் குடைந்தாலும் அவள் விஷயத்தைச் சொல்ல மாட்டாள். ''ஒண்ணுமில்லே... மேலே நடையைக் கட்டலாம்'' என்றுதான் சொல்லுவாள்.

பிற்காலத்தில் நம் அம்மா செய்த முக்கியமான ஆத்மிகப் பணி, எண்ணற்ற பக்தர்களுக்கு மந்திரோபதேசம் செய்ததேயாகும். இந்தப் பணியை ராமகிருஷ்ணர் அவள் பிருந்தாவனத்திலிருந்தபோதே தொடங்கி வைத்தார். ஒரு நாள் அவர் அவள் முன் தோன்றி, ஒரு குறிப்பிட்ட மந்திரத்தைச் சொல்லி, ''இதை யோகின் பயலுக்கு உபதேசம் பண்ணு'' என்றார்.

எளிமையின் உருவான சாரதை இந்த உபதேசப் பணியை ஏற்க அஞ்சினாள். 'நான் ஒரு சாமானிய ஸ்திரீ, மந்திரோபதேசம் செய்வதாவது' என்று நடுங்கினாள். எனவே பதிதேவர் சொல்லியும் அந்த உத்தரவை அவள் நிறைவேற்றவில்லை.

ராமகிருஷ்ணரா அவளை விடுவார்? மறுபடி தோன்றி உத்தரவிட்டார்.

'என்ன இப்படிச் சொல்கிறாரே! எனக்கு குரு ஸ்தானம் வகிக்க அச்சமா இருக்கு! அதுவும் தவிர, ஊரார் சிரிப்பா. 'அவர் போய் ஒரு வருஷம் ஆகல்லே. அந்த அம்மாள் உபதேசம் கிபதேசம்னு சிஷ்யாள் சேர்த்துக்க ஆரம்பிச்சுட்டா'ன்னு பரிகாசம் பண்ணுவாளே' — அம்மா ஆசாரிய ஸ்தானத்துக்குத் துளிக்கூட ஆசைப்படவில்லை. டாகூரிடம் எத்தனையோ மகா மந்திரங்களை உபதேசம் பெற்று, லக்ஷோப லக்ஷம் ஆவிருத்தி ஜபம் செய்து ஸித்தி பெற்றிருந்தும், பிறருக்கு உபதேசம் தரக் கூசினாள்! அப்படியோர் அடக்கம்!

மூன்றாவது முறையும் வந்தார் பதி. ''நீ என்ன, அந்தப் பயலுக்கு உபதேசிக்கப் போறியா இல்லையா?'' என்றார்.

உடலை உகுத்த பின்னரும் அவர் தருகிற அற்புத தரிசனத்துக்காக ஏங்கிய அம்மா இப்போது அவரிடம் வாக்கு வாதமே செய்யத் தொடங்கினாள். ''என்னன்னு இந்தக் காரியம் எல்லாம் எனக்குத் தரேள்? நரேன், லாடு, பாபுராம் இவாகிட்டப் பழகுகிற மாதிரி இந்தப் பையன்கிட்ட நான் பழகினதில்லே. அவனுக்கு எப்படி மந்திரோபதேசம்பண்ணுவேன்?'' என்றாள்.

''யோகேன் குட்டிகிட்டச் சொல். அவ அவனை அழைச்சுண்டு வருவா. உபதேசத்தின்போதும்கூட இருப்பா'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு அந்தர்தானமானார் ராமகிருஷ்ணர்.

இனித் தப்ப முடியாது என்ற நிலை ஏற்பட்டது. யோகின்மாவை அழைத்து, 'யோகினுக்கு ஏதாவது மந்திரோபதேசம் ஆகியிருக்கான்னு விசாரியுங்கோ' என்றாள்.

யோகின்-மா யோகினை வினவினாள்.

''இல்லையம்மா. டாகூர் ஏனோ எனக்கு மட்டும் மந்திரோபதேசம் தரல்லே. நானா ஏதோ ஒரு திவ்விய நாமாவை ஜபிச்சுண்டு இருக்கேன்'' என்று கூறிய யோகின் தட்டுத் தடுமாறியபடி, ''இங்கே வந்த பிறகு... ஒருநாள் டாகூர்...'' என்று திணறினார்.

''சொல்லப்பா, சொல்லு'' என்று ஆர்வமாக ஊக்கினாள் யோகின்மா.

''டாகூர் தரிசனம் தந்து, அம்மாகிட்ட... மந்திரோபதேசம் பெற்றுக்கச் சொன்னார். அதுதான் என் இஷ்ட தெய்வம். ஆனா அம்மாகிட்ட சொல்றதுக்கு எனக்கு ரொம்பக் கூச்சமா யிருந்தது. இப்ப அம்மாவே கேக்கறதினாலே சொல்லிட்டேன்'' என்றார் யோகின். சாரதையின் குழந்தைகளும் அம்மாவையே உரித்து வைத்திருந்தனர்!

யோகின் குறிப்பிட்டதும், சாரதையிடம் டாகூர் கூறியிருந்ததும் ஓரே மந்திரம்தான். எனவே சந்தேகத்துக்கு இடமின்றி இவள் உபதேச குருவாக வேண்டும் என்று ஆகிவிட்டது.

ஒரு நல்ல நாளில் ராமகிருஷ்ணரின் உருவப்படம், அஸ்தி இவற்றின் முன் அம்மா தியானத்தில் அமர்ந்தாள். எப்போதும் உள்ளே பம்மிக் கொண்டிருந்த ஆத்மிகப் பெருக்கு இன்று வெளிப்படவும் செய்தது. பரவச நிலையில் பூஜை செய்தாள். அதே பாவத்தில் யோகினை அழைத்து வரச் செய்து மந்திரோபதேசம் வழங்கினாள். யோகினுடைய பாக்கியமே பாக்கியம்!

யோகின்-மாவை உடன் வைத்துக் கொள்ளும்படி டாகூர் கூறியிருந்தாலும் அந்த அம்மை மந்திரோபதேசத்தின் போது மிகவும் அண்மையில் இருக்கக் கூடாது என்பதால் பக்கத்து அறையில் இருந்தாள். ஆனால் அம்மா தனது பரவச நிலையில் அந்த மந்திரத்தைப் பெண் சிம்மமெனக் கர்ஜித்துக் கூறியதால், அது யோகின்-மாவின் செவியிலும் பளீரென்று விழுந்ததாம்!


'மந்திர மாவது நீறு' என்றார் பாலருவாயர். நீற்றுப்போய் அஸ்தியாக அமர்ந்திருந்த ராமகிருஷ்ணர், சாரதையைத் தம் சந்நிதானத்திலே மந்திரோபதேச குருவாக்கி விட்டார்!

ராக்:.போர்ட்
பொருளாதார அமைப்பை வலுப்படுத்துகிறது



நமது கிராமங்களில் பொருளாதாரப் புரட்சி நிகழ்ந்துவருகிறது. நீர்ப்பாசன அமைப்புக்களின் பயனாக மேலும் செழுமையான பயிர்கள் நாட்டுப்புறங்கள் முழுவதிலும் புதுச் செல்வத்தைப் பரப்பிவருகின்றன. மண் குடிசைகள் இருந்த இடங்களில் செங்கல் கட்டடங்கள் தோன்றிவருகின்றன. நமது விவசாயச் செல்வத்தைப் பத்திரமாகப் போற்றிக்காக்க அங்கங்கே கிடங்குகள் தோன்றிவருகின்றன.

இந்த முன்னேற்றப் பாதையின் ஒவ்வொரு அடியிலும், பொருளாதாரத்திற்குத் திண்மையையும், வலுவையும் தந்து, புரட்சிக்குப் புத்தூக்கம் அளிக்கிறது ராக்:.போர்ட்.





ராக்:.போர்ட்
டால்மியா சிமெண்ட்





டால்மியா சிமெண்ட் (பாரத்) லிட்.,
பதிவுபெற்ற அலுவலகம் மற்றும் ஆலைகள்:
டால்மியாபுரம், தமிழ் நாடு.
தலைமை அலுவலகம்: சிந்தியா ஹவுஸ், புது டெல்லி-1.
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிட்.,
டால்மியாபுரம், தமிழ் நாடு.

சதைக்குள் எலும்பும், எலும்புக்குள் ரத்த சத்தும் இருப்பதைச் சொல்கிறார்கள். இவை எல்லாவற்றுக்கும் உள்ளே பிரேமை என்பது இருக்கிறது. நம் சரீரத்தை வெறும் ஊனுடலாக வைத்திருக்கும் வரையில் பகவானைப் பார்க்கவோ, அவன் குரலைக் கேட்கவோ முடியாது. இடைவிடாமல் சாதனைகளைச் செய்து நமது அன்பு சரீரத்தை உணரப் பெற வேண்டும். அந்த அன்பு சரீரத்துக்கு இருக்கிற அன்புக் கண்களே ஆண்டவனைக் காண முடியும்; அதன் அன்புச் செவிகளே ஆண்டவன் குரலைக் கேட்க முடியும்.

— பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்

ராமகிருஷ்ணர் ஜீவியவந்தராயிருந்தபோதே அவர் சாரதாப் பிரசன்னனிடம் ''அம்மா உனக்கு உபதேசிப்பாள், அவளிடம் போ'' என்று சொன்னது நினைவிருக்கலாம். ஆனால் அம்மா பிரஸன்னனுக்கு மந்திரம் வழங்கினாளா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. மந்திரோபதேச குருவாக அம்மாவுக்கு துவஜாரோகணம் ஆனது பிருந்தாவனத்துப் புண்ணிய மண்ணில்தான் எனலாம்!

ஸ்ரீ அம்மா ஆசாரிய ஸ்தானம் வகிப்பதன் அழகே அழகு. ஆதிபராசக்தி ஆசாரிய வடிவில் வந்தே தன் எழுச்சியின் செழிப்பைக் காட்டுகிறாள் என்கிறான் காளிதாஸன்:

'' தேசிக ரூபேண தர்சித அப்யுதயாம்!''

சாரதைக்கு நிறையக் காரியம் இருக்கிறது என்று சொல்லித்தானே டாகுர் அவளை விட்டுச் சென்றார்? அந்தக் காரியங்கள் மெல்ல அங்குரார்ப்பணமாகத் தொடங்கின. அவளும் அவர் தன்னுள் கனிந்துவிட்டதை உணர்ந்து, மெல்ல மனம் தெளிந்தாள். தன் குழந்தைகளுக்காக அமைதியுடன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தாள்.

அம்மாவின் உள்ளப் புண் ஆறத் தொடங்கியது. பிருந்தாவனத்தில் விரகராதையாக இருந்தவள், இப்போது கண்ணனின் கருணையில் அடிக்கடி மூழ்கி அமைதி கொண்டாள். இவளுடைய கண்ணனின் உத்தரவுப்படி காமார்புகுருக்குச் சென்று காலம் கழிக்க எண்ணம் கொண்டாள்.

தமது மறைவுக்குப் பின் அவள் காமார்புகுருக்குப் போய் வசிக்க வேண்டும் என்று அவர் ராமலாலை வைத்துக் கொண்டு கூறியது நினைவிருக்கலாம். இதே விஷயமாக இன்னொரு முறை அவளிடம், குழந்தைக்கு எடுத்துச் சொல்வதுபோல், விளக்கிப் பேசினார்:''என் காலத்துக்கு அப்புறம் நீ போய்க் காமார்புகுரிலே ஜீவனம் நடத்திண்டு இரு. உன் ஒருத்திக்குத் தேவையான நாலு மணி நெல் கிடைச்சுடும். தோட்டத்திலே ஏதாவது இரண்டு இனுக கீரை விதைச்சுக்கோ. அதை வேக வைச்சுச் சாப்பிடு. 'ஹரி ஹரி'ன்னு சொல்லிண்டு காலத்தைக் கடத்து. வேறே என்ன காரியம் உனக்கு இருக்கு? யார்கிட்டேயும் சல்லிக் காசுக்குக் கூடக் கைநீட்டி விடாதே. மானத்தைக் காப்பாத்திக்க ஒரு முரட்டுத் துணியும், உன் ஒரு வயிற்றுக்கான சோறும் என்னிக்கும் கிடைக்கும். இதைக் காட்டிலும் அதிக வசதி வேணும்னு யார்கிட்டேயாவது கைநீட்டினையோ, அப்புறம் அவாளுக்கு உன் தலையையே விலை கொடுத்துட்ட மாதிரி ஆயிடும். உறவுக்காரா, அவா, இவான்னு யார் ஆத்திலேயும் போய் இருந்துடாதே. அதைவிடப் பிச்சை எடுத்துச் சாப்பிடறது கௌரவம். நம்ம பக்தாள் யாராவது பூரண அன்பும் மரியாதையும் காட்டி, உன்னைத் தங்கள் கிருகத்திலே வைச்சு உபசரிக்கிறதாச் சொன்னாக்கூட, மசிஞ்சுடாதே.''

அவளுக்கெனப் பெரிய அவதாரப் பணி காத்துக் கிடக்கிறதென்று சொன்ன ராமகிருஷ்ணரே அவளைக் காமார்புகுர் கிராமத்திலே ஹரி ஸ்மரணம் தவிர வேறு காரியமின்றி அடங்கிக் கிடக்கச் சொன்னது முரணாகத் தோன்றலாம். ஆனால் இதில் முரண் ஏதும் இல்லை. அவள் குறிப்பாக அடக்கத்துக்குத்தான் உதாரணம் காட்ட அவதரித்தாள். அடக்கத்தை அடக்கமாகத்தானே வாழ முடியும்? சூரிய பகவான் இருள் தேவியைத் தேடித்தேடிப் போனானாம். ஆனால் அவன் எங்கு போனாலும் அங்கு ஒளி வந்துவிட்டதால் இருளன்னையை அவனால் காணவே முடியவில்லையாம். 'அடக்கத்தை வெளிக் காட்டுவது' என்பது இருளை ஒளி பார்க்கப் போவது போல்தான்! பூரணமாக அடைந்து கிடக்கும் கைம்மை வாழ்வை அவளுக்கு அவர் விதித்தாலும் அவருக்கே தெரியும், அத்துணை கடுமையாக அவள் அதைப் பின்பற்றினால் உலகுக்கு அவளது உதாரணம் எட்டவே எட்டாது என்று. ஆயினும் அவளது அவதாரப் பணியை அவர் அடிக்கடி வற்புறுத்தியதால் எங்கே அவள் அவசரப்பட்டுக் கொண்டு தனது முதுமைக்கு முன்பே வெளிச்சத்துக்கு வந்துவிடுவாளோ என்று கருதியே அவளுக்கு மிகக் கடுமையான யோசனை கூறினார். ஆதியில் அவளது 'அம்மா ஆசை'யைக் கட்டுப்படுத்திவிட்டு, உரிய காலத்தில் அது வெளிப்பட அனுமதித்தார் அல்லவா? அதே போல் இப்போது தமது நிர்யாணத்தை அடுத்து

அவளுக்கு மிகுந்த கட்டுப்பாட்டை விதித்தாலே, பிற்பாடு உரிய காலத்தில் அவளை தன் பணியைப் பெண்மைக்குப் பங்கமின்றி ஆற்ற முடியும் எனக் கருதினர். தம்மிடம் உபதேசம் பெறுமல் ஏங்கிக் கொண்டிருந்த யோகினியின் தாபம் தீர்க்க அவளை மந்திர குருவாக ஆக்கிப் பார்த்தாரெனினும், அவள் இன்னமும் அடங்கிக் கிடக்க வேண்டியவளே என்று கருதினர் போலும். இதை அம்மா உணர்ந்தாள். நாற்றுப் படுகையிலிருந்து இன்னும் வயலுக்கு வருகிற வளமை தனக்கு வரவில்லை என்று கண்டு கொண்டாள். வேறு சில க்ஷேத்திரங்களையும் தரிசித்துவிட்டுக் காமார்புகுர் திரும்ப முடிவு செய்தாள் தேவி.

ஸ்ரீ ராதாகிருஷ்ணனின்முன் வணங்கி எழுந்தாள். "அப்பனே, உனக்கு பங்கே விஹாரின்னு பேர். ரூபத்தை மூணு வளைவா வளைச்சுண்டு நிற்கிறதாலே உனக்கு இப்படிப் பேர். ஆளுல் ரூபத்திலேதான் கோணல். உன் மனசு ரொம்ப நேர்மையானது. என் மனக் கோணலை எல்லாம் மாற்றுடா அப்பனே. பிறத்தியார் கோணலும் என் கண்ணுக்குத் தெரியாதபடி அருள் பண்ணு ஐயா" என்று வேண்டினுள்.


காமார்புகுரில் இந்தப் 'பிறத்தியார் கோணல்' தொடங்கப் போவதை முன் கூட்டியே அறிந்தாளோ?

பிருந்தாவனத்திலிருந்து ஹரித்வாரம் சென்றுள். பிரம்ம குண்டத்தில் ராமகிருஷ்ணரின் கேசம், நகங்கள் ஆகியவற்றை விசர்ஜனம் செய்தாள். கங்கையைக் கடந்து சென்று கீல்வாதக் காலோடு மலை ஏறி சண்டிதேவியைத் தரிசித்து வந்தாள். திரும்பும் வழியில் அலகாபாத் எனப்படும் திரிவேணியில், கங்கையும் யமுனையும் சரஸ்வதியும் கலக்கும் புனிதப் பெருக்கில் ராமகிருஷ்ணரின் கேசத்தையும் சமர்ப்பித்தாள். "டாகூரின் கேசம் சாமான்யப்பட்டதா என்ன? ஓட்டம் தெளிஞ்சிருந்த சங்கமத்திலே, கேசத்தைப் போடறதுக்காக நான் கையிலே எடுத்தேனோ இல்லையோ திடீர்னு ஓர் அலை குதிச்சு எழுந்து என் கையிலே இருந்த கேசத்தை எடுத்துண்டுது. உடனே இருந்த சுவடு தெரியாமல், அது அமுங்கியும் போச்சு. புண்ணிய தீர்த்தம் தன்னை இன்னும் புண்ணியமாக்கிக்கணும்னு தான் அப்படிப் பண்ணித்து" என்பாள்.

கைம்பெண்ணுகிய லக்ஷ்மி திரிவேணியில் சம்பிரதாயப்படி தன் சிகையை மழித்துக் கொண்டாள். அம்மாவின் எதிரே பகவானின் சிரித்த உருவம் தெரிந்தது. தன் கங்கணத்தைப் பார்த்துக் கொண்டாள். அவள் சிகை களையவில்லை. உள்ளத்திலே ஏதோ ஓர் உவகை ஊற்றிட்டது. கல்கத்தாவுக்கு மகிழ்ச்சியுடனே திரும்பினுள்.

இன்னம்பர் பணி இனிதே நடக்கட்டும்

கும்பகோணத்திலிருந்து திருவையாறு போகிற சாலையிலுள்ள மகாக்ஷேத்திரம் இன்னம்பர். (இன்னம்பூர் என்று தற்போது கூறப்படுகிறது) ஞானசம்பந்தர், அப்பர் பெருமான் இருவராலும் தேவாரம் சூட்டப் பெற்றவர் இன்னம்பரீசன். இனன் என்கிற சூரியபகவான் நம்பி வழிபட்ட இடம் இன்னம்பர். இங்குள்ள ஈசன்தான் அகத்தியருக்குத் தமிழ் இலக்கணம் உபதேசித்தாராம். எனவே, 'எழுத்தறி நாதர்' (அட்சர புரீசர்) எனப்படுகிறார். ஆதியில் ஆலயத்தைப் பராமரித்து வந்த சுதன் மாலுக்காக இவரே மன்னரிடம் கணக்குக் காட்டியதால், "எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே" என்று அப்பர் பெருமானுல் போற்றப்படுகிறார். பண்டைப் புகழ் கொண்ட இவ்வாலயத்துக்குத் திருப்பணி செய்யப்படுகிறது. ஒரு லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. "எழுதும் கீழ்க் கணக்கு இன்னம்பர் ஈசன்" இப்பணிக்குப் பணம் கொடுப்பவர்களின் பெயர்களைத் தங்கப் பேரேட்டில் பதிவு செய்துகொள்ளக் கூடும்! பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: நிர்வாக அதிகாரி, பொருளாளர், ஸ்ரீ அட்சரபுரீசுவரர் கோவில், இன்னம்பூர், கும்பகோணம் தாலுகா.



ஒரு வாரம் பலராம் பாபுவின் வீட்டிலிருந்த பின் காமார்புகுருக்குப் புறப்பட்டாள்.

நம் அம்மாவின் துயரம் செறிந்த கதையில் இன்னொரு துயரமான கட்டம் தொடங்கிற்று!

காமார்புகுரில் ஒன்றாக அமைந்த மூன்று குடிசைகள் தான் இவர்களது பிதுரார்ஜித சொத்து. அங்கு மைத்துனர் மக்களான ராம்லால், லக்ஷ்மி, சிவராம் சிறிது காலமே இருந்தனர். பிறகு அவர்கள் தக்ஷிணேசுவரத்துக்கே திரும்பி விட்டனர். லக்ஷ்மியும் அம்மாவைப் போல் காமார்புகுரில்தான் இருக்க வேண்டும் என்று ராமகிருஷ்ணர் கூறியிருந்தார். அவளை அம்மா கவனித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருந்தார். ஆனால் லக்ஷ்மி நற்குணம் நிறைந்தவள் எனினும், அம்மாவிடம் பற்றுதல் கொண்டவள் எனினும், தன்னிச்சையாகவே இருப்பாள். அவளை அம்மாவால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவளிடம் ஆண்மைக் குணம் அதிகம். வைஷ்ணவ சம்பிரதாயக் கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிய லக்ஷ்மி காமார்புகுரில் அம்மாவுடன் இருந்தபோது பாகவதர்கள் போல் அவற்றைப் பெரிதாக் விந்நியாசப்படுத்திப் பாடுவாள். இது சாரதைக்கு ஏற்கவில்லை. ஆனால் சுயேச்சைப்படி இருக்கும் இப் பெண்ணை அவள் கண்டிக்கவும் முயலவில்லை. ராமலாலைப் பற்றிக் கேட்க வேண்டாம். ஏனோ அவருக்குச் சித்தியிடம் என்றுமே அநுதாபம் இருந்ததில்லை. சிறியவன் சிவராம்தான் அவளிடம் ஒட்டிக்கொண்டிருப்பான். ''சித்தி, நீதான் எனக்கு உபநயனத்தின்போது முதல்லே பிட்சை போட்டே! அதனாலே நீ எனக்கு அம்மா மாதிரி'' என்பான், அவளுடைய அருமை 'ஷிபு'. ஆனால் அந்தப் பிள்ளையின் வாஞ்சை மட்டும் அந்த வீட்டில் அவளது அமைதியான வாழ்க்கைக்குப் போதவில்லை. ஈசுவர ஸ்மரணத்தோடு எஞ்சிய காலத்தைக் கடத்த வேண்டும் என்று நினைத்த சாரதையை லக்ஷ்மியும், ராமலாலும் வேண்டாத அக்கப்போரிலெல்லாம் ஈடுபடுத்தப் பார்த்தனர். அம்மா ஒரு கடுஞ்சொல் கூறவில்லை. தன் மனநிலையை எவ்விதத்திலும் வெளியிடவில்லை. கர்மமே என்று காலத்தை ஓட்டினாள்.

ஜயராம்பாடியில் ஜகத்தாத்ரி வழிபாடு நடந்தது. சியாமசுந்தரி பிரதி வருடமும் செய்து வந்த விழா அல்லவா அது? பாலிய விதவையாக வைபவத்துக்கு வந்த பெண்ணைப் பார்த்துக் கதறித் தீர்த்தாள் சியாமை. ''சாரு, இனிமே இங்கேயே இருடியம்மா. உன் குழந்தைகளா உன்னைப் பார்த்துக்கப் போறா? மச்சினன் பசங்கள் கிட்ட மொத்துப்படாமெ இங்கேயே கிட'' என்று வயிறெரிந்து சொன்னாள்.

''அவர் அப்படித்தான் சொல்லியிருக்கிறார். அவர் விட்ட வழியாகட்டும்'' என்று நிர்த்தாட்சிண்யமாகச் சொல்லிவிட்டு தேவி காமார்புகுருக்குத் திரும்பினாள்....

இங்கே மைத்துனர் மக்கள் எவரையுமே காணவில்லை. அவர்கள் தக்ஷிணேசுவரத்துக்குப் போய்விட்டார்கள். போகிற போக்கில் பாகப் பிரிவினை வேறு செய்து விட்டார் புண்ணியவான் ராமலால். தயாள மனத்துடன் மூன்று குடிசைகளில் சிறியதான குடிசையை நம் அம்மாவுக்குப் பாகம் பண்ணியிருந்தார்.

தன்னந் தனியளாக சாரதை பட்ட அவஸ்தை சொல்லத் தரமன்று. அந்த ஊரிலே காலிகளின் நடமாட்டம் அதிகமாயிருந்தது. பயந்து நடுங்கினாள் தேவி. ஊருக்கே பெரிய மனுஷியும், பண்புச் செல்வியுமான பிரசன்னமயியின் வேலைக்காரியை இரவுகளில் துணை வைத்துக் கொண்டு அடைத்துக் கிடந்தாள்.

கிராமப் பெண்டிர் சாரதையின் பெருமையைச் சிறிதும் புரிந்து கொள்ளவில்லை. ''அமங்கலி வளை போட்டுண்டிருக்காளே, ஊருக்கே அடுக்குமோ?'' என்று அவள் காதுபட விமரிசித்தனர். ''புடவையிலேயும் மெல்லிசாக் கரை இருக்காக்கும். தலையையும் பண்ணிக் கல்லை! இவ என்ன கொம்பு?'' என்று தூஷித்தனர்.

தேவி அவர்களிடம் தன் நித்திய கல்யாண மகிமையைச் சொல்லிப் புரிய வைக்க முடியுமா? காது கொப்புளிக்க அந்தக் கொடு மொழிகளைக் கேட்டுக் கொண்டாள் — பங்கேவிஹாரியை தியானித்தவாறு.

பிரஸன்னமயிதான் ஊராருக்கு எடுத்துச் சொன்னாள். ''நம்ம ஊர் கதாயியும் அவனோட அகமுடையாளும்தானே என்று நினைக்காதீர்கள். அவர்கள் தெய்வப்பிறவிகள்'' என்று அடித்துச் சொன்னாள். அதை அவர்கள் நம்பினார்களோ இல்லையோ அந்த அம்மை இப்படிச் சொன்ன பின் அவதூறு பேசுவதைச் சிறிது குறைத்துக் கொண்டனர்.

வார்த்தை கேட்டது ஒருபுறம். வயிறு வாடிற்று ஒருபுறம். ஆம், அன்னபூர்ணேசுவரியான நம் அம்மா தன் ஒரு வயிற்றுக்கு அன்னம் கிடைக்காமல் வறுமையில் வாடவும் நேர்ந்தது. எண்ணவே நம் மனம் வாடுகிறது.

(தொடரும்)

நாம் தமிழர்

'ஜடாமுனி'

நான் எம். ஏ. பாஸ் பண்ணிவிட்டு ஒரு வருஷம் வேலை இல்லாமல் இருந்தேன். நிமிஷங்களை நாட்க ளாகவும், நாட்களை மாதங்களாவும் பிடித்துத் தள்ளிக் கொண்டிருந்தேன்.

எனக்கு ஒரு வேலை கிடைத்தது. மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம்; இருக்க இடம்; சாப்பாடு இலவசம். வேலை எப்படிக் கிடைத்தது என்று நான் உங்களுக்கு விளக்கிக் கொண்டிருக்கப் போவதில்லை. எனக்கு ஒரு மாமா இருந்தார். (இன்னும் இருக்கிறார்) அவருக்கு ஒரு சித்தி. அந்தச் சித்திக்கு ஒரு மார்வாடித் தோழி, அந்தத் தோழிக்கு ஓர் உறவுக்காரர் (என்ன உறவு என்று பிடிபடவில்லை) அந்த உறவுக்காரரின் மைத்துனர் வீட்டில்தான் நான் வேலை பார்க்கப் போனேன். இந்த மைத்துனர் — அவர் பெயர் மதன் சந்த் — பெரிய பணக்காரர். அவருக்கு ஒரு பிள்ளை. கல்லூரியில் படிக்கிற பையன்.

அவனுக்கு இங்கிலீஷ், பொருளாதாரம், கணிதம் (ஏன், சிலபஸில் இருக்கிற எல்லாப் பாடங்களுமே) சொல்லிக் கொடுக்க நான் வாத்தியார். உன்னை எப்படித் தேர்ந்தெடுத்தார்கள்? அந்தப் பையன் படிக்கிற காலேஜிலேயே வேண்டிய புரொபஸர்கள், லெக்சரர்கள் இருப்பார்களே என்று நீங்கள் கேட்கலாம். அந்தப் புரொபஸர்கள், லெக்சரர்கள் எல்லாருக்கும் அந்தப் பையன் காலேஜில் படித்துக் கொண்டிருப்பதே அதிசயமாக இருந்தது. அவனுக்கு ஏதாவது பாடம் சொல்லிக் கொடுப்பதென்றால் அடிப்படையிலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருந்தது: அப்படித் தினம் தினம் அடிப்படையிலிருந்து ஆரம்பித்து ஏதோ தாங்கள் சொற்பமாய்ச் சேர்த்து வைத்திருக்கிற அறிவையும் இழக்கத் தயாராயில்லை அவர்கள்.

போதாதற்கு அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் வாத்தியார் அவர்கள் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும்; பையன் காலேஜ் (காலேஜ்தானா?) போய்விட்டு வருகிற நேரம் போகப் பாக்கி நேரங்களில் எப் பொழுது அவனுக்குப் படிப்பதற்கு உசிதமான நேரமாய்ப்படுகிறதோ, அப்பொழுது புத்தகங்களை எடுத்துக்கொண்டு வருவான். வாத்தியார்மட்டும் உடனே 'மூட்' வரவழைத்துக் கொண்டு பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும்; வாத்தியார் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். (ஒரு நிமிஷம் இருங்கள், காலரைத் தூக்கிவிட்டுக் கொள்கிறேன்) சம்பளம் அதிகமாய்க் கேட்கக் கூடாது. இத்தனை பொருத்தமும் என்னைத் தவிர வேறு யாருக்கு உண்டு?

இத்தனை தகுதியும்தான் எனக்கு இருக்கிறதே என்று நான் வீட்டிலேயே சும்மா இருந்துவிடவில்லை; முதலில் என் மாமாவைப் போய்ப் பார்த்தேன்; பிறகு மாமாவின் சித்தி, சித்தியின் மார்வாடித் தோழி, தோழியின் உறவுக்காரர், உறவுக்காரரின் மைத்துனர் மதன் சந்த் இத்தனை பேரையும் பார்த்தேன். ஏனென்றால் என்னைப் போலவே எத்தனையோ பேர்கள் இந்த அகண்ட பெரிய பட்டணத்தில் ஒரு வேலைக்காக அலைந்து கொண்டிருந்தார்களே? ஆனால் மதன்சந்த் அவ்வளவு சீக்கிரம் என்னை வேலையில் சேர்த்துக் கொண்டு விடவில்லை. முதலில் தம் பிள்ளை— அவன் பெயர் கிஷன்சந்த்—க்கு ஒரு டியூஷன் வாத்தியார் அவசியம்தானா? அப்படி ஒரு வாத்தியார் தேவை என்றாலும் அதற்கு என்னைத் தேர்ந்தெடுக்க வேண்டுமா? இப்படி நிறைய யோசித்த பிறகே என்னை எடுத்துக் கொண்டார்.





நகைச் சுவைக் கதை : 3

யார் இந்த மதன்சந்த்? அவர் எப்படி இருந்தார்? உயரமா? குள்ளமா? குண்டா? சோனியா? கறுப்பா? சிவப்பா? இந்தத் தகவல்களெல்லாம் உங்களுக்கு எதற்கு? என்று கேட்கிறேன். அவர் பெயரைக் கூட நான் உங்களுக்குச் சொல்லியிருக்கக் கூடாது. அவர் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறார். அவர் பெயரைச் சௌகார்ப்பேட்டையில் போய்ச் சொல்லிப் பாருங்கள். அப்புறம்தான் அவர் மதிப்பு உங்களுக்குத் தெரியும். கூடவே என் மதிப்பும் தெரியும்.

பம்பாயில் இருக்கிற முப்பத்திநாலு பெரிய கம்பெனிகளுக்கு அவர் தமிழ் நாட்டு ஏஜண்ட். அவர் பையனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்காத நேரங்களில் என்னைத் தம் ஏஜன்ஸி விவகாரங்களையும் கவனிக்கச் சொல்வார். காரணம் அவருக்கு இங்கிலீஷ் எழுதப் படிக்கத் தெரியாது. தடபுடலாகப் பேச மட்டும் செய்வார். பம்பாய் கம்பெனிக்காரர்களோ இங்கிலீஷில்தான் கடிதம் எழுதினார்கள். ஒரு டைப்பிஸ்ட், ஓர் அக்கவுண்டெண்ட், ஒரு மானேஜர் அவரிடத்தில் வேலை பார்த்தார்கள். ஆனால் அவர்கள் மூன்று பேர் இங்கிலீஷ் ஞானமும் என்னுடைய இங்கிலீஷ் பேரறிவில் ஒரு சிறு பகுதி என்பதை இங்கு நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடக் கூடாதே என்று இரக்கப்பட்டுத்தான் கொஞ்ச நாளைக்கெல்லாம் நான் கடிதப் போக்குவரத்தை மட்டும் கவனித்துக் கொண்டு மற்ற விவகாரங்களிலிருந்து ஒதுங்கிக் கொண்டேன். இல்லாது போனால் கம்பெனி நிர்வாகம் முழுவதையும் மதன்சந்த் என் கையில் ஒப்படைத்திருப்பார்.


* * *

சரி, கிஷன் சந்த் யார்? எப்படிப்பட்டவன்?

ஒரு சின்னச் சங்கதி. நான் முதல் நாள் போனதும் 'இவர் தான் கிஷன்சந்துக்கு வாத்தியார். பையன் எங்கே?' என்று தம் மனைவியிடம் கேட்டார் மதன் சந்த். 'அவன் தூங்குகிறான்' என்றாள் அந்த அம்மாள். அடுத்த நாள்தான் அவனைப் பார்க்க முடிந்தது என்னால்.

கிஷன் சந்த் அழகான பையன். ஆரோக்கியமானவன். மகிழ்ச்சி நிரம்பியவன். கேவலம் படிப்பு, அறிவு, வித்தை, ஞானம் இப்படிச் சாமானிய பிரச்னைகளில் மனசைப் போட்டு உழப்பிக்கொள்கிறவன் இல்லை.

அவனுக்கு மூன்று காரியங்கள்:



சாப்பாடு, தூக்கம், சிரிப்பு.

முக்கியமாய்ச் சாப்பாடு. காலையிலிருந்து நடு ராத்திரி வரை சாப்பிட்டுக் கொண்டிருப்பான். சமயங்களில் ஆகாரத்தை மெல்வான். தீனியைத் தின்பான், உணவு உண்பான், பழரசம் உறிஞ்சுவான், பானம் பருகுவான்.

காசி அல்வா, பாம்பே தூத்பேடா, கல்கத்தா ரஸகுல்லா, ஹைதராபாத் ஸோஹன் அல்வா, கோல்ஹாபூர் மிளகாய் பஜ்ஜி, மைசூர் போண்டா, காஞ்சிவரம் இட்லி, டில்லி எருமைப் பால் என்று விதவிதமான பண்டங்களைச் சாப்பிடுவதன் மூலம் அவன் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஓர் ஒளிவீசும் உதாரணமாய் விளங்கினான்.

எனக்கு மட்டும் மூன்று வேளை உணவுதான் அவர்கள் வீட்டில். காலை ஆகாரத்தோடு கொஞ்சம் டீ, பகல் உணவு, பிறகு ராத்திரிச் சாப்பாடு. அவ்வளவுதான். கிஷன்சந்த்தோ போக வர ஏதோ தின்று கொண்டிருப்பான்.

கிஷன் சந்துக்கு வீட்டு மாடியில் ஓரமாய் ஓர் அறை கொடுத்திருந்தார்கள். அங்கேதான் தெருவிலிருந்து வாகனங்களின் ஓசை அவ்வளவாய்க் கேட்காது. அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்த இரண்டாம் நாள் இரவு பத்து மணிக்குப் பையன் 'ஒரு நிமிஷம் என்னோடு வாருங்களேன்' என்றான். அவன் அறையின் பின்பக்கம் ஓர் ஓட்டை உடைசல் ரூம் ஒன்று இருந்தது. அதை ஒட்டினாற்போல் மரத்தின

லான படிக்கட்டு ஒன்று தெரிந்தது. அதன் வழியாகக் கீழே இறங்கினேன். ஒரு குறுக்குச் சந்தின் வழியாக நடந்து தெருவின் பின் பக்கத்துக்கு வந்து விட்டோம். 'என்ன?' என்றேன். 'இங்கே ஓர் ஓட்டலில் பூரி, சாகு நன்றாய் இருக்கும்' என்றான் அவன். குருவுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையாக நாலு பூரியையும், பாம்பே மசாலா பாலையும் கணக்கில் சேர்த்துக்கொண்ட பின், சிஷ்யனை மன்னிப்பது தவிர எனக்கு வேறு வழியில்லாமல் போயிற்று.

பிறகு சிரிப்பு. பாடப் புத்தகங்களுக்குப் பதிலாக அநேக ஜோக் புத்தகங்கள் வைத்திருந்தான் கிஷன்சந்த். ஹிந்தியில் இருந்தவற்றை அவன் படித்து எனக்கு இங்கிலீஷில் விளக்குவான். இங்கிலீஷில் இருந்தவற்றைச் சுயமாகப் படிக்கிற — படித்தாலும் முழுதும் புரிந்துகொள்கிற—சாமர்த்தியம் அவனுக்குப் போதாது என்பது எனக்குத் தெரியும்.

முதலில் எனக்குச் சங்கடமாகத்தான் இருந்தது. மனச்சாட்சி உறுத்தியது. படிப்புச் சொல்லிக் கொடுக்க வந்த இடத்தில் சிரிப்பா? அவன் அப்பாவுக்குத் தெரிந்தால்? இது ரொம்பத் தப்பு. ஆனால் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு மனசைத் தேற்றிக் கொண்டேன். நான் எவ்வளவு சொல்லிக் கொடுத்தாலும் அவன் பாஸ் பண்ணப் போவதில்லை என்பது புரிந்தது. அதனால்தானே அவனைக் காலேஜ் வாத்தியார்கள் கைவிட்டு விட்டார்கள்! பிறகு ஏன் வீண் கவலை?

எங்கள் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வீட்டில் ஆள் கிடையாது. மதன்சந்த் வியாபாரத்திலேயே குறி; இருபத்திநாலு மணி நேரமும் டெலிபோன் அருகிலேயே இருப்பார். அவர் மனைவியோ சமையலறையிலேயே இருப்பாள். நாங்கள் இரண்டு பேரும் சொர்க்கத்தில் இருந்தோம்.

* * *

நான் போய்ச் சேர்ந்த பத்து நாட்களுக்கெல்லாம் கிஷன்சந்த் ஒரு கடிதம் கொண்டு வந்து காண்பித்தான். டில்லியிலிருந்து முன்னு என்கிற பெண் எழுதியிருந்தாள் — இங்கிலீஷில். அந்தக் கடிதத்துக்குத் தகுந்தபடி— அதாவது பிரமாதமான — அழகான பதில் எழுதித் தரும்படி அவன் என்னைக் கேட்டுக் கொண்டான்.

முன்னு அவன் உறவுக்காரப் பெண். கிஷன்சந்த் பரீட்சை முடிந்ததும் — இன்னும் ஆறு மாதங்களில் — அவனைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவள். டில்லியில் அவளும் காலேஜில் படிக்கிறாள்.

அவளுக்குக் கிஷன்சந்தின் ஆங்கில அறிவு பற்றித் தகவல் தெரியாது போலும். அவளை ஹிந்தியில் எழுதும்படி கேட்பதற்கோ கிஷன்சந்துக்குத் தயக்கம், வெட்கம்.

முதலில் வாரத்துக்கொன்று, பதினைந்து நாட்களுக்கு ஒன்று என்றுதான் கடிதப் போக்குவரத்து இருந்தது அவர்களுக்குள். நான் அந்த இலாகாவைக் கவனிக்க ஆரம்பித்த பிறகோ போக்குவரத்து வேகம் அதிகமாயிற்று. வாரத்துக்கு இரண்டு, சமயங்களில் மூன்று என்றுகூட ஆயிற்று.

இந்தக் கடிதப் போக்குவரத்தை உங்கள் பொருட்டுத் தமிழாக்கித் தருகிறேன்.

முதலில் முன்னுவின் கடிதம்.

அன்பே,

உன் கடிதங்கள் எனக்கு அலுப்பூட்டுகின்றன — ஒரே தாயாரின் அநேக குழந்தைகள் போல. ஒரே ஏரியின் நீர்த் திவலைகள் போல. சற்றே மாறுபட்டு புதிதாய் ஏதேனும் சொல்லு என் இதயத்தில் சூடேற்ற.

உன் நம்பிக்கை நாயகி,
முன்னு.

இதற்கு என் — அதாவது கிஷன்சந்தின் பதில்:

நம்பி நிற்பவளே,

என் கடிதங்களை ஒரே தாயாரின் அநேக குழந்தைகள் என்கிறாய். ஒரே உணர்ச்சியைத்தானே நாம் பரிமாறிக் கொள்கிறோம்? ஒரே ஏரியின் நீர்த் திவலைகள் என்கிறாய். ஒரே ஊற்றுத்தானே நம் நெஞ்சில் ஊறுகிறது? நம் காதலைத் தவிர மற்றவை அனைத்திலும் நான் மாறுபடத் தயார். — இதுமட்டும் நிலையானது, உன் அழகைப் போல் என்றும் மாறாதது.

என்றும் நிலையான,
கிஷன்சந்த் (அதாவது நான்)

மீண்டும் முன்னுவின் கடிதம்.

அன்பே,

இப்போது ஒரு புதிய ராகம், ஒரு புதிய கீதம் பாடுகிறாய். நான் இறக்கை முளைத்துப் பறப்பது போல உணர்கிறேன். இந்த நீலக் காகிதம் தேவதையாய்ச் சிறகடித்து நம் நினைவுகளைத் தாங்கிப் பறக்கிறது.

உன் பாடும் புறா,
முன்னு.

மீண்டும் நான் — அதாவது கிஷன்சந்த்.

மெல்லிய புறாவே,

ஆம், நான் புதிய உருவம்தான். உன் நினைவு என்னை நாளுக்குநாள் மாற்றுகிறது. மீண்டும் நான் பழையபடி மாற முடியாதோ என்று பயமாகக் கூட இருக்கிறது. அதே நேரம் இந்தப் புதிய உருவம் எனக்கு மகிழ்ச்சி ஊட்டுகிறது.

உன் காதல் கழுகு
கிஷன்சந்த் (அதாவது நான்)

கடிதப் போக்குவரத்து என் மேற்பார்வையில் நடந்த ஆறு மாத காலத்தில் இவை ஆரம்பகாலக் கடிதங்கள். போகப்போகச் சூடு இன்னமும் ஏறிற்று. வரும் கடிதங்களைப் படிப்பதும் அவற்றுக்குத் தகுந்த பதில்களை எழுதுவதும் எனக்கு முழுநேரச் சிந்தனையாகப் போயிற்று. விரக தாபத்தால் ஏங்குபவனாக நான் மாறினேன். கிஷன்சந்த் எப்போதும் போல் நாளைக்கு ஆறு வேளை சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

* * *

கிஷன்சந்த் ஒரு வழியாகப் பரீட்சை எழுதினான். ரிஸல்ட் வரும்வரைக்கும் காத்திருக்க

வில்லே மதன்சந்த். கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்து விட்டார். நாங்கள் எல்லோரும் டில்லிக்குப் பயணமாளேம். நீ எப்படிச் சேர்ந்தாய் என்கிறீர்களா? மதன்சந்த் இலேசுப் பட்ட ஆசாமி அல்ல. டில்லியில் குறைந்தது நாலு கம்பெனிகளுக்காவது ஏஜென்ஸி பிடிக்கிற திட்டம் வைத்திருந்தார் அவர். அந்தக் காரியங்களேக் கவனிக்கிற காரியதரிசி நான்.

முன்னுவின் அப்பாவும் பெரிய வியாபாரி. அவர் லோடி காலனியில் கல்யாணத்துக்காகத் தெருவையே வளேத்துப் போட்டிருந்தார். எங்கள் ஒவ்வொருவருக்கும் தனித் தனி அறைகள் கொடுத்திருந்தார். ஏராளமான ஜனங்கள் எங்களேச் சுற்றிக் கூடி நின்ருர்கள். ஒவ்வொரு நிமிஷமும் முன்னுவை நினேத்துப் பார்த்தபடி இருந்தேன். அதைத் தவிர்க்க முடியவில்லே என்ருல். எழுதிய கடிதங்கள் எத்தனே !

என்னேப் போலவே இன்னெரு ஆசாமி அந்தக் கூட்டத்தின் மத்தியில் சிக்கிக்கொண்டிருப்பது மாதிரி எனக்குப் பட்டது. அவனே நான் பார்த்த கணமே வெறுக்க ஆரம்பித்தேன். அசப்பில் என்னேப் போலவே இருந்தான் அவன். அடர்த்தியான தலேமயிர், கிருதா, மெக்ஸிகன் மீசை, ஒல்லி உடம்பு ! நானே இத்தனே நாட்களும் டில்லியில் தான் இருந்தேனே என்றுகூட சந்தேகமாயிருந்தது. அவ்வளவு உருவ ஒற்றுமை.

அவன் எல்லாரையும் உற்றுப் பார்த்தபடி இருந்தான். வேடிக்கை பார்ப்பதற்கென்றே இந்தக் கல்யாணத்துக்கு வந்திருந்தான் போல இருந்தது. அவன் என்னேப் பார்க்கும்போதெல்லாம் என் ரகசியம் அவனுக்குத் தெரிந்து விட்டது போல் நான் உணர்ந்தேன். அப்படித் துருவித் துருவிப் பார்த்தான் அவன்.

அத்தனே சந்தடியில் அவனே யாரோ எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

''இவர்தான் ராஜு அய்யர், எம். ஏ. முன்னு வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் இருக்

◆◇◇◆

அப்பாவுக்குத் தெரியாமல்...!

– ரமணி ரங்கநாதன் –

"ஏன்னம்மா, எங்கே புறப்படறே? இன்னிக்கும் ஒரு படமா!" என்று கேட்ட மகளே 'உஷ்' என்று எச்சரித்தாள் அன்னே! மற்ெருரு கை சமையல் அறையைச் சுட்டிக் காட்டியது. சமையல் அறைக்குள் பருப்பில் கல் பொறுக்கிக் கொண்டிருக்கும் மாமியாருக்குக் காதுதான் டமாரச் செவிடே தவிர, கண் பாம்புக் கண் என்று அவளுக்கு நன்ருகத் தெரியும்!

''சினிமாவுக்குத்தான் போறேன் லதா! ஆனல் இதை உன் அப்பாகிட்டேயோ பாட்டிகிட்டேயோ உளறிடாதே! மஞ்சு வீட்டுக்குப் போறேன்னு சொல்லு...''

''என்னம்மா இது? நேத்து காய்கறிகாரிகிட்டே காசு இல்லேன்னு காய்கறிகூட வாங்கல்லேயே?''

''அதனுல் என்னடி? அன்னிக்கு ஒரு நாள் அப்பாவுக்குத் தெரியாமல் மஞ்சுவுக்குப் பணம் தந்தேனே! அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்திருக்கா. அது இருக்கு! நான் வருகிறவரைக்கும் வீட்டைப் பார்த்துக்கோ!'' என்று ஒரு வழியாக மாமியாரையும், மகளேயும் சரி செய்து வைத்துவிட்டு மஞ்சுவின் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டினுள். அங்கே ஒரு பிரச்னே தலேதூக்கி நின்றது அவளுக்கு!

''என்னவோ ஒரே தலேவலியா யிருக்கு! இன்னெரு நாளேக்குப் போவோம்!'' என்ருள் மஞ்சு. தலேவலி மாத்திரை ஒன்றை வாங்கித் தந்து சமாளித்து அவளே இழுத்துக் கொண்டு தியேட்டரை அடைந்தாள். வெளியே 'அவுஸ் புல்' போர்டுதான் அவர்களே வரவேற்றது. புதுப் படமாயிற்றே?

இருவரும் ஏமாற்றத்துடன் வீட்டை நோக்கி நடந்தனர். தெருப் பக்கக் கதவைத் தாண்டிக் கொண்டு லதாவின் தாயார் நடையில் நுழைந்து சாத்தியிருந்த நடைக் கதவைத் தட்டப் போனுள். கை தயக்கத்துடன் பின் வாங்கியது! உள்ளே லதா போனில் யாருடனே சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தாள். ''அதனுல் என்ன பாஸ்கர்? உங்க வீட்டுக்கு வருவது ஒண்ணும் எனக்குக் கஷ்டமே இல்லே! எங்க அம்மா வீட்டிலே தங்குவதே அபூர்வம்! அப்பா அந்தப் பக்கம் போனுல் அம்மா இந்தப் பக்கம் கிளம்பி விடுவாங்க! பாட்டியோ படு செவிடு! சே...சே! எங்கப்பாவுக்குத் தெரியாமல்தான் வருவேன்! ஆமாம்! அப்படியே நான் திரும்பும் முன் அவர் வந்து விட்டாலும் என் சிநேகிதி வீட்டுக்குப் போய் வந்தேன் என்று சொல்லி அவரை நம்ப வெச்சுடுவேன்! கட்டாயம் வரேன்! மற்றதை நேரிலே பேசிக்கலாமா? ஓகே!'' லதா போனே வைக்கும் 'டக்'கென்ற ஒலி பாய்ந்து வந்து நெஞ்சைத் தாக்கப் பிரமை பிடித்தவள்போல் நின்ருள் லதாவின் அன்னே கதவுக்கு வெளியே!

அம்மா திரும்பி வந்துவிட்டது ஜன்னல் வழியே தெரிந்ததும், போனில் யாருடனே பேசுவது போல் நடித்தாள் லதா. இந்த அதிர்ச்சி வைத்தியம் அம்மாவின் போக்குக்கு ஒரு முடிவு கட்டியே தீரும் என்ற நம்பிக்கைப் புன்னகை உதட்டில் மின்ன, கதவு தட்டப்படும் ஒலியை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தாள்.



கிறார். அவள் படிக்கிற காலேஜிலேயே இங்கிலீஷ் லெக்சரர்!'' இருபத்தைந்து வயது நிரம்பாத பையன் ராஜு அய்யராம்! டில்லி பாஷன் போலிருக்கிறது.

''இந்தக் கல்யாணத்திலேயே தமிழர்கள் நாம் இரண்டு பேர்தான் போலிருக்கிறது'' என்றான் ராஜு அய்யர்.

'' 'நாம் தமிழர்' இயக்கம் மாதிரி!'' என்றேன் நான். ''ஹ...ஹ...ஹ'' என்று வாய் விட்டுச் சிரித்து விட்டு ''நல்ல ஜோக் ஸார்'' என்றான்.

அப்பொழுது அலங்காரம் செய்து கொண்டிருந்த முன்னாவை அழைத்துக் கொண்டு நாலைந்து பெண்கள் அந்தப் பக்கம் போனார்கள். முன்னாவைப் பார்த்ததும் பெங்களூர் முட்டைகோஸ் ஞாபகம் வந்தது எனக்கு.

''மிஸ்டர், ராஜு அய்யர்! நீங்க பெண்ணுக்கு ரொம்ப வேண்டியவரா?'' என்றேன்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. பக்கத்து வீட்டுக்காரன். நாங்க குடும்ப நண்பர்கள். போதாக் குறைக்கு நான் அவ காலேஜிலேயே இங்கிலீஷ் லெக்சரர். அவ்வளவு தான்'' என்றான்.

''இல்லே, முன்னா பத்தி ஒரு 'கமெண்ட்' அடிக்கலாமா?''

''தாராளமா.''

''முன்னாவைப் பார்த்தால் என்னமோ தெரியல்லே, முட்டைகோஸ் ஞாபகம் வரது எனக்கு.'' அதேசமயம் என் காதல் கோட்டை சரிந்து விழுந்தது.

''யு ஆர். ரைட். பையன் பாவம் ஏமாறப் போறான்'' என்றான் ராஜு அய்யர்.

''பையனைப் பத்தி எனக்குத் தெரியும். அவன் சுத்த காலி ப்ளவர்'' என்றேன் நான்.

''முன்னா முட்டைகோஸ் அப்படின்னு என்னால் நிரூபிக்க முடியும்'' என்றான் ராஜு அய்யர்.

''எப்படி?''

''அவளுக்கு லவ் லெட்டர் எழுதக் கூடத் தெரியாது ஸார். பையன் பாவம் ஆறு மாசமா வரிஞ்சு வரிஞ்சு எழுதிண்டிருந்தான். அத்தனைக்கும் பதில் போட்டவன் நானாக்கும்'' என்றான் ராஜு அய்யர்.

''அட பாவி!'' என்று இரைந்தேன் நான். ''பையனும் சுயமாய் எழுதவில்லே. அவன் பக்கத்து லெட்டர்களுக்கு நான் பொறுப்பு!''

''நாம் தமிழர், நாம் தமிழரேதான்'' என்று கூவியபடி என் கையைப் பிடித்துக் குலுக்கினான் ராஜு அய்யர்.

முட்டைகோஸ், காலி ப்ளவர், பகாளாபாத், பாதம்கீர் இத்தனையும் சேர்த்துச் சாப்பிட்டவர்கள் மாதிரி அந்தக் கல்யாணக் கூட்டத்தின் மத்தியில் நின்றோம், நாங்கள் இரண்டு பேரும்.

படித்துப்பாருங்கள்

காவ்ய ராமாயணம்

ராமாயணம் ஒரு பக்திக் கிரந்தம் என்பதைவிட இலக்கிய நூல் என்பதாலேயே நிலைத்துநிற்கிறது என்பது இந்தப் புத்தகத்தின் ஆசிரியருடைய கருத்து. ''ராமாயணத்தில் முதன்மையான அம்சம் இலக்கியம்'' என்கிறார். ''ராமாயணத்தை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி — 'தெய்வ பக்தி' புகட்டும் ஆர்வம் கொண்ட ஒருவரின் தயவின்றி — இலக்கியம் என்ற வகையில் ஏன் ரசிக்க முடியாது?'' என வினவுகிறார். அந்த வினாவுக்கு, ''முடியும்'' என்று கூறுகிற விடையாகவே இந்த நூலை உருவாக்கியுள்ளார். வால்மீகி, கம்பன் இருவரது அருமை பெருமை, நுண்மை திண்மைகளையும் தேறத் தெளிந்து ராமாயணக் கதையைக் கூறுகிறார், ஆங்காங்கு தமது நயம் பொருந்திய விமரிசனங்களோடு. வான்மீகத்தில் மட்டுமே காணப்படும் உத்தர காண்டத்தையும் சுருக்கமாகத் தொட்டிருக்கிறார்.

இலக்கியத் தரமுள்ள நூல் என்று தயங்காமல் பாராட்டலாம். அது மட்டுமல்ல; ஆசிரியரின் முகவுரையைப் படிக்கும்போது, கோடானு கோடி மக்கள் ஸ்ரீமந் நாராயணனாகவும், மகாலக்ஷ்மியாகவும் பூஜித்து வரும் ஸ்ரீராமனையும், சீதாதேவியையும் வெறும் இலக்கியக் கதாநாயக நாயகியாக எடைபோடுவதில் ஆஸ்திக உள்ளங்கள் வருந்த நேருமோ என்ற அச்சம் ஏற்படும். நூலைப் படிக்கப் படிக்க இந்த அச்சத்துக்கு ஆதாரமே இல்லை என்று கண்டு மகிழ்வோம்.

பாரதத்தின் புராதன காவியமான வான்மீகத்தையும், தமிழகத்தின் முடிமணிக் காவியமான கம்பன் கவியையும் சேர்த்துத் தரும் இந்நூல் பாராட்டுக்குரிய படைப்பு.

ஆசிரியர்: கே. எஸ். ஸ்ரீநிவாஸன்; பதிப்பாளர்: எஸ். சுகுமார், 193, பாரதிநகர், புதுதில்லி — 3. விலை: ரூ. 12. 00.

ஸுந்தர காண்டம் (தமிழ்)

சகல நலன்களையும் அளிக்கவல்ல ஸ்ரீமத் வால்மீகி ராமாயண சுந்தர காண்டத்தில் ஒவ்வொரு சர்க்கத்தையும் சுருக்கமாகத் தமிழில் தருவது இந்நூல். ஒவ்வொரு சர்க்கத்திலும் முதல், கடைசி மூல சுலோகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இறுதியில் ஸ்ரீராம பட்டாபிஷேக சர்க்கமும், சுந்தர காண்டத்தில் காயத்ரீ மந்திர அட்சரங்களோடு தொடங்கும் இருபத்தி நாலு சுலோகங்களும் இக் காண்டத்தில் விசேஷ தாத்பரியங்கள் கொண்ட ஒருசில சுலோகங்களின் விளக்கமும் தரப்பட்டிருக்கின்றன. பக்தர்களுக்குப் பயன் அளிக்கும் புத்தகம்.

[ஆசிரியர்; வெளியீட்டாளர்: டாக்டர் ஆர். ராகவாச்சாரி, 56, நல்லதம்பி முதலித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5]



சிந்தால்
வாக்குறுதி...
மேனியெழிலுக்கு முழுப் பராமரிப்பு
CINTHOL
புதுமை குன்றாத நறுமணம்
துர்நாற்றத்திலிருந்து சிறந்த பாதுகாப்பு
...சிந்தால் மட்டுமே நிறைவேற்றக்கூடியது
CINTHOL
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
ஜி-11 அடங்கிய ஒரே சோப் சிந்தால். இந்த அற்புத
கிருமி நாசினி உடல் துர்நாற்றத்திற்கும்
சருமக்கஷ்டங்களுக்கும் காரணமாக விளங்கும்
கிருமிகளை அழித்து விடுகிறது. இவ்வாறு சிந்தால்
உங்கள் மேனியெழிலை அப்பழுக்கின்றி
வைத்திருப்பதுடன், உங்களை நாள் முழுவதும்
புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கிறது.
Interpub/GSC/5/72R Tam

UCO-4/72




சிறு சேமிப்பே பெரிய கணக்குகளாக வளருகிறது



பணம் சேமிப்பதற்க்கும், கரண்ட்,
சேவிங்ஸ், பிக்ஸட்,
மற்றும் ரெக்கரிங்
கணக்குகளை
தொடங்கவும்
தாங்கள் எல்லா
வித சௌகரியங்
களையும் அளிக்கிறோம்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை அலுவலகம்: கல்கத்தா



இது எலெக்ட்ரானிக்ஸ் மின் அணு சக்தி யுகம். அந்தச் சக்தியின் உதவி கொண்டு அளப்பரிய சாதனைகளைப் புரிய முடிகிறது. அதில் ஒன்று தான் இப்போது சென்னை அரசாங்கப் பொது மருத்துவ மனையில் அமைக்கப் பட்டிருக்கும் அதிசய சாதனம்.

இருதய நோய்க்கு ஓர் அரிய சாதனம்

இதய நோய் சிகிச்சைக்கென்று சுமார் எழுபத்தைந்து லட்ச ரூபாய் செலவில் (கட்டடம் உள்பட) இந்தப் புது மருத்துவப் பிரிவு அண்மையில் தொடங்கப்பெற்றது.

இந்த மருத்துவப் பிரிவில் நவீன வசதிகள் உடைய இதய பரிசோதனைச் சாலையும் ஆறு படுக்கைகளும் உள்ளன. இந்த 'வார்டி'ன் விசேஷ அமைப்புக்களைச் செய்து கொடுத்திருப்பவர்கள் பிலிப்ஸ் கம்பெனியார்.


இதுகாறும் உடலுக்குள் எந்தப் பாகமாகிலும் கெட்டிருந்தால், எக்ஸ்ரே கதிர்களை அனுப்பி, எக்ஸ்ரே போட்டோ படம் எடுத்து டாக்டர்கள் உடலில் பழுதுபட்ட பகுதியைப் பரிசீலித்து வைத்தியம் செய்வார்கள்.

இதயம் சம்பந்தப்பட்ட நோய்க்குக் காரணங்கள் பல. இதயத்தில் எந்த வால்வாகிலும் பழுதாகியிருக்கலாம். இதயத்தை யொட்டியுள்ள ஒரு இரத்தக் குழாய் உட்புறம் தடித்து இரத்த ஓட்டத்தை ஓரளவு தடுத்து நிறுத்தியிருக்கலாம். என்ன காரணம் என்று அறிய இரத்தக் குழாய்க்குள் அதை விட மெல்லிய 'போலிதின்' விரலான குழாயைச் செலுத்திப் பார்க்கிறார்கள். இம் முறைப் பரிசோதனைக்குக் 'கத்திட்டரைஸேஷன் ' என்று பெயர். இப்படி இரத்தக் குழாய்க்குள் செலுத்தும், போலிதின் குழாயின் யாத்திரையை அதே சமயத்தில் பக்கத்திலுள்ள டெலிவிஷன் பெட்டியில் மிகத் துல்லியமாகப் பார்க்கும் சாதனமே இப்போது நிறுவப்பட்டுள்ளது.

உடலுக்குள் உள்ள உறுப்புக்களை இவ்வாறு படம் எடுக்க உதவுவது எக்ஸ் கதிர். 'எக்ஸ்' கதிர் மிக ஆபத்தானது. பொதுவாகவே எக்ஸ்ரே படம் எடுக்க ஓர் இமைப் பொழுது அல்லது ஒருசில நொடிகள்தான் எக்ஸ் கதிர்களைச் செலுத்துவர். அதிக நேரம் செலுத்தினால் உடல் உறுப்பு தீய்ந்து விடும். எக்ஸ்ரே போட்டோ எடுக்கும் சாலையில் நீண்ட நாட்களாகப் பணியாற்றுபவர்கள் எக்ஸ் கதிரினால் பாதிக்கப்படுவதையும் பார்க்கிறோம். ஆனால் இப்பொழுது இதயப் பரிசோதனை சாலையில் நிறுவப்பட்டுள்ள இயந்திரம், எக்ஸ்ரேயின் வீரியத்தை மிக மிகக் குறைந்த அளவில்தான் உபயோகப்படுத்துகிறது. டி.வி. திரையில் உருவத்தைத் தெளிவுபடுத்த மிக அதிக ஒளியை உபயோகிக்க இயலுவதால் எக்ஸ்ரே மிகக் குறைந்த வீரியத்தில் இருந்தாலே போதுமாக இருக்கிறது. இரத்தக் குழாயில் கத்திட்டர் செலுத்திச் செய்யும் பரிசோதனை சுமார் 45 நிமிடங்கள் வரை கூட ஆகலாம். ஆகவே எக்ஸ்ரேயின் வீரியம் மிக மிகக் குறைந்த அளவில் இருக்க வேண்டியது அவசியமாகிறது.

இரத்தக் குழாயில் கத்திட்டர் செலுத்தும்போது இதயத் துடிப்பின் ஒலி 'பீப் பீப்' என்று தெளிவாகக் கேட்கிறது. இன்னொரு இயந்திரம் இதயத் துடிப்பு எந்தக் கதியில் செல்கிறது என்பதை ஈஸிஜி வரைபடமாய்க் குறித்துக் காட்டிக் கொண்டே வருகிறது. இப்படிப் பல முக்கியமான விஷயங்களை ஒரே சமயத்தில் இந்த இயந்திர சாதனம் சுட்டிக் காட்டிக் கொண்டேயிருக்கிறது.

இவை யெல்லாவற்றையும் விட முக்கியமான உபகரணம் வீடியோ ரிக்கார்டர். அதா



மரம் காகித மானால் காகிதம் ஏன் மரமாகக் கூடாது?

சில வகை மரங்களிலிருந்து காகிதம் தயாராகிறது. மரங்களை அதிகமாக வெட்டித் தள்ள வேண்டாம் என்பதற்காக இப்போது பழைய குப்பைக் காகிதங்களிலிருந்து மரப் பலகைகளும் கட்டைகளும் தயாரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்! வீடுகளின் உட்புறச் சுவர்களையும் மேஜை நாற்காலி முதலானவற்றையும் உருவாக்க இந்த மரத்தைப் பயன்படுத்தலாம். இப்படி நடப்பது அமெரிக்காவில்.

சுத்தப்படுத்தப்பட்ட சுத்திகரிப்பு!

கல்ஃப் என்ற அமெரிக்க பெட்ரோலியம் நிறுவனம் பூமியிலிருந்து கிடைக்கும் எண்ணெயைச் சுத்திகரிக்கும்போது எழுபது சதவிகிதம் பெட்ரோல் கிடைக்க வழி வகுத்திருக்கிறது. இதுவரை சுத்திகரிப்பில் ஐம்பத்தைந்து சதவிகிதம்தான் கிடைத்து வந்ததாம்!



வது இதயப் பரிசோதனை நடத்தி டெலிவிஷனில் பார்த்தவற்றை அப்படியே பதிவுசெய்து வைத்து, அந்த முழுப் பரிசோதனையையும் பின்னால் எப்பொழுதாகிலும் பார்க்கவேண்டும் என்று தோன்றினால் பார்க்கக்கூடிய வசதி அமைந்திருப்பது மிகப் பெரிய சௌகரியமாகும். இது நோயாளியின் இதயம் முதலில் பரிசோதித்தபோது இருந்த நிலைமைக்கும், வைத்தியம் செய்து முடிந்த பின்னர் இருக்கும் நிலைக்கும் ஒப்பிட்டுப் பார்க்கவும், சந்தேகம் தோன்றினால் மீண்டும் பார்ப்பதற்கும் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் டாக்டர்களுக்கும் பெரிதும் உதவக் கூடியதாகும்.

* * *

இதயம் நோயுற்றுப் போனதால் ஆயுத சிகிச்சை பெற்றவர்களைக் கவனிப்பது மிகச் சிரமமான காரியம். இதயத் துடிப்பு, சுவாசத் துடிப்பு, தேக உஷ்ண ஸ்திதி, இரத்த அழுத்தம் இப்படி எத்தனையோ அம்சங்களை நிமிஷம் விடாமல் சோதித்துப் பார்த்து வர வேண்டும். எந்த நிமிஷத்திலும் ஏதாவது ஓர் அம்சத்தில் கோளாறு ஏற்படலாம். அது உயிருக்கே ஆபத்தாக முடியலாம். இப்படி அனைத்தையும் சோதித்து சதா எச்சரிக்கையாக இருப்பது சாதாரண மனித சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம். ஆனால் இந்த விசேஷப் படுக்கையில் நோயாளியைப் படுக்க வைத்து விட்டால் மேற்குறிப்பிட்ட இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் முதலியவற்றைப் பற்றிய குறிப்புக்களை அப்படுக்கையிலுள்ள இயந்திரங்கள் மைய ஸ்தானத்துக்கு அனுப்பிவிடும். இப்படி ஆறு படுக்கைகளில் படுத்துள்ள நோயாளிகளின் தேக நிலைமை அந்த மைய ஸ்தானத்துக்கு நிமிஷம் விடாமல் வந்து கொண்டிருக்கும். அதுமட்டுமல்ல, இதயத் துடிப்போ, இரத்த அழுத்தமோ ஒரு நோயாளிக்கு அதிகமாகியோ, குறைந்தோ போய், ஆபத்தான நிலைக்கு வருமானால் மைய ஸ்தானத்தில் எச்சரிக்கை ஒலி எழும். "குறித்த எண்ணுள்ள படுக்கையிலிருக்கும் நோயாளியின் இதயத் துடிப்பு பலவீனப்பட்டு வருகிறது" என்று மைய ஸ்தானத்தில் உள்ள நர்ஸ் புரிந்து கொண்டு டாக்டருக்குச் சொல்லி யனுப்பி, நோயாளியை ஒருசில விநாடிகளில் கவனிக்க ஏற்பாடு செய்துவிடலாம்.

இதய ஆபரேஷன் செய்யப்பெற்ற ஒரு நோயாளியைப் பல செவிலியரும் டாக்டர்களும் இருபத்திநாலு மணி நேரமும் கவனித்து வர வேண்டிய நிலை மாறி, ஆறு ஆபத்தான நிலைமையில் இருக்கக் கூடிய நோயாளிகளைக் கவனிக்க ஒரு நர்ஸே போதும் என்ற நிலை உருவாகியுள்ளது. மைய ஸ்தானத்திலிருக்கும் இயந்திரத்தை அந்த ஒரு நர்ஸ் கவனித்து வந்தாலே போதும்!


ஏதாகிலும் ஒரு நோயாளியின் படுக்கையின் அருகில் இருக்கும் கருவி பழுதுபட்டால் என்ன செய்வது? கஷ்டமே இல்லை. இவ்வளவு காரியங்களையும் செய்யும் கருவி ஓர் அடி நீளம், முக்கால் அடி அகலம், நாலு அங்குலம் உயரம் உள்ள சிறிய பெட்டியளவு தான் இருக்கிறது. அந்தப் பெட்டியை அகற்றி, ரிப்பேர் செய்பவரிடம் அனுப்பி விட்டு, தயாராக உள்ள மாற்றுப் பெட்டியைப் பொருத்திவிட்டால் போதும். தொடர்ந்து நோயாளியின் தேக நிலையை அறியலாம்.

அமெரிக்கா போன்ற மிக முன்னேற்றமடைந்த நாடுகளிலுள்ள முதல்தர ஆஸ்பத்திரிகளில் கிடைக்கக் கூடிய நவீன வசதிகள் சென்னை மருத்துவ மனையில் இன்று இடம் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது.

ஆனால் எவ்வளவுதான் சிறந்த யந்திர சாதனமாயினும், அது டாக்டராகிவிட முடியாது. வைத்தியம் செய்ய முடியாது. யந்திரம் அளிக்கும் குறிப்புக்களைப் புரிந்து கொண்டு, வைத்தியம் செய்வது அநுபவமும் ஆற்றலும் பெற்ற வைத்தியரே — மனிதனே!

அனுபவமும், அறிவும், திறமையும் இருந்தால்தான் இந்த இயந்திர சாதனங்கள் மக்கள் நலனுக்குப் பயன்பட முடியும்.

மேனாட்டு நவீன இயந்திரங்களின் மோகத்தில் மயங்கி, வைத்திய சாஸ்திரத்துக்குக் கொடுக்கப்பட வேண்டிய கவனமும் சிரத்தையும் உழைப்பும் குறைந்துவிடுமோ என்ற நியாயமான அச்சம் பலருக்கு ஏற்படலாம். ஆனால் இந்தச் சந்தேகத்தை வளர விடாதவாறு நமது டாக்டர்கள் திறம்படப் பணியாற்றுவார்கள் என்று நம்புவோம். —**வெங்கு**



(இந்தியன் பாங்கில் அதிகாரியாகப் பணியாற்றும் செஸ் சாம்பியன் திரு ஆரன் 'இந்த வருஷ தலைசிறந்த விளையாட்டுக்காரர்' என்ற விருதுடன் கூடிய கோப்பையைச் சமீபத்தில் பின்னி சேர்மென் திரு என். எல். பட்டிடம் பெற்றார். இந்தக் 'குருநாதன் கோப்பை'யை ஸ்போர்ட்ஸ் ரைட்டர்ஸின் ஆதரவில் 'ஹிந்து' ஸ்தாபனம் வருஷா வருஷம் வழங்கிவருகிறது.)

ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட அமெரிக்க விளையாட்டுக்காரர்களுக்கு இந்திய மகாராஜா லண்டனில் தேநீர் விருந்தளித்தார். அவர்களுக்கு செஸ் சாம்பியன் கல்தான்கானை முதலில் அறிமுகப்படுத்தி வைத்தார். ஆனால் தேநீர் விருந்து பரிமாறப்பட்டபோது அந்த செஸ் சாம்பியனே 'பட்லர்'ராக வந்து பரிமாறியபோது அமெரிக்க விளையாட்டுக்காரர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஆம், இந்திய மகாராஜாவிடம் பிரிட்டிஷ் செஸ் சாம்பியனும், உலகில் தலைசிறந்த பத்து ஆட்டக்காரர்களில் ஒருவருமான கல்தான்கான் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

இப்படி செஸ்ஸில் சாம்பியனாக விளங்கிய ஒருவர் தயக்கமோ கலக்கமோ இன்றி பட்லர் வேலை பார்த்ததை எடுத்துக் காட்டினார் இந்திய செஸ் சூரன் எம். ஆரன். இவர் இந்தியன் பாங்கியில் ஓர் அதிகாரியாகப் பணி புரிகிறார்.

எம். ஆரன் ரங்கூனில் பிறந்து, நாகர்கோயிலில் கல்வி கற்று, அலகாபாத்தில் பட்டதாரியானார். திரு ஆரன் தம் ஏழாவது வயதிலேயே தந்தையிடமிருந்து செஸ் ஆடக் கற்றுக் கொண்டார். பத்தாவது வயதிலேயே செஸ் விளையாட்டுப் போட்டியிலே கலந்து கொண்டார். திரு ஆரன் சங்கோசப் பேர்வழி. இவரை முன்னணிக்குக் கொண்டு வரப் பாடுபட்டவர் அவரது 'கஸின்' மற்றொரு 'ஆரன்'. இவர் லண்டனில் ஆசிரியராகப் பணி புரிகிறார்!

''நீங்கள் செஸ்ஸில் பெற்ற முதல் வெற்றி எது?''

''முதன் முதலில் 1959ம் வருஷம் தேசிய செஸ் போட்டியில் வென்று சாம்பியனானேன். 1961ம் வருஷமும் 1969ம் வருஷமும் தேசிய செஸ் சாம்பியன் பதவியைப் பெற்றேன். 1971ம் வருஷம் பிகானீரில் நடைபெற்ற தேசிய செஸ் போட்டியில் நான்காவது தடவையாகத் தேசிய சாம்பியன் ஆனேன்.''

''உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா? அல்லது 'செஸ்'ஸையே கட்டிக் கொண்டு....''

''செஸ் சாம்பியனிடம் அவர் மனைவி, 'உங்களுக்கு செஸ் வேண்டுமா, நான் வேண்டுமா? முடிவு செய்யுங்கள்' என்று கேட்டதாகச் சொல்வதுண்டு. அந்த மாதிரி ஜோக் எதுவும் நல்ல காலமாக என் வாழ்க்கையில் கிடையாது. எனக்குக் கல்யாணமாகி மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள்!'' என்றார் இந்திய செஸ் சாம்பியன் ஆரன்.

''செஸ்ஸில் உங்கள் மகத்தான சாதனைகள் என்னென்ன?''

''1961ம் வருஷம் சென்னையில் மங்கோலியன் சாம்பியன் மோமோவையும் சர்வதேசத்திலும் பிரசித்தி பெற்ற ஆஸ்திரேலிய பர்டியையும் ஜயித்தது. இந்தச் சாதனைகளினால் ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற இண்டர்ஜோனல் செஸ் பந்தயத்துக்குச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டது. ரஷ்யா, மலேஷியா முதலிய பல அயல்நாடுகளுக்குச் சென்று சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். இப்பொழுது ஆசிய செஸ் போட்டி டெஹ்ரானில் நடைபெறவிருக்கிறது. அந்நியச் செலாவணி கிடைத்தால் எனக்குப் போகும் வாய்ப்பு உண்டு!''

செஸ்ஸில் உலக சாம்பியனைத் தேர்ந்தெடுக்க உலக நாடுகளைப் பத்து பிரிவுகளாகப் பிரித்து நிபுணர்களை ஆட வைக்கிறார்கள். படிப்படியாகப் பல கட்டங்களில் முயன்று முன்னேறுகிறவர் இறுதியில் உலக சாம்பியனுடன் ஆடும் தகுதி பெற்றுச் சவால்விடும் 'சாலஞ்சர்' ஆகிறார்.

இந்திய சர்க்காரின் 'அர்ஜுன அவார்டு' பெற்ற ஆரன் சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொண்டால் இந்தியாவுக்குப் புகழ் தேடித் தருவார். பல செஸ் சாம்பியன்களைப் போல் 'செயின் சிகரெட்' ஊதும் பழக்கம் இவருக்குக் கிடையாது. மாட்ச் நடக்கும்போது அமெரிக்க சாம்பியன் பிஷர் கால்களைத் தட்டுவாராமே, அதுவும் இவருக்கு இல்லை. கருமமே கண்ணாக ஆட்டத்திலே ஈடுபடும் புள்ளி.

— பீ. எஸ். எம்.

இன்னுமொரு குழந்தையைப் பெறுவதற்குமுன் சற்று

யோசியுங்கள்



இக்குழந்தையை நன்றாக படிக்க வைக்க வேண்டாமா? உங்கள் விருப்பப்படி, குழந்தைக்கு வசதிகள் அனைத்தும் அளிக்க வேண்டாமா? இன்னொரு குழந்தையை உடனே பெற்றால், இதெல்லாம் முடியுமா? சிரமம் தான். அடுத்த குழந்தை உடனே வேண்டாம் என்று நீங்கள் கருதுவது இயற்கைதானே.

நீங்கள் மட்டுமல்ல; உலகெங்கிலும் தம்பதிகள் இவ்விதம்தான் கருதுகிறார்கள். வளமுடன் வளர்க்க வசதிகள் பெருகும் வரை, அவர்கள் இன்னொரு குழந்தையைப் பெறுவதில்லை. நீங்களும் 'நிரோத்' உபயோகித்து குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடலாம். அனைவரும் விரும்பி ஏற்கும் ஏப்பர் கருத்தடைச் சாதனம் நிரோத்; இது ஆண்களுக்கானது. தலைமுறை தலைமுறையாக உபயோகத்தில் இருந்துவரும் சிறந்த, எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத். நீங்களும் நிரோத் உபயோகியுங்கள்.

நிரோத் எங்கும் கிடைக்கிறது. அரசாங்க ஆதரவு விலை 15 பைசாவுக்கு 3



இன்னொரு குழந்தையை வளர்க்க வசதி பெறும் வரை உபயோகியுங்கள்

நிரோத்

லட்சக்கணக்கான பேர் விரும்பி ஏற்கும் எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத்.

davp 71/460

பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், வெற்றிலைபாக்குக்கடைகள் இங்கெல்லாம் நிரோத் விற்பனையாகிறது



வால் போய்க் கத்தி ; கடை போய்க் காரா ?

மதுரை ஸ்ரீ மீனாட்சி கோவிலைச் சுற்றியுள்ள காலி இடத்தில் கடைகள் கட்டும் விஷயத்தில் பல்லோரது எதிர்ப்பையும் அறிந்து, மேற்படி திட்டத்தைக் கைவிட்டு விட்டதாக அமைச்சர் திரு கண்ணப்பன் அவர்கள் அறிவித்துள்ளார். இப்பொழுது மேற்படி காலி இடத்தைக் கார்கள் நிறுத்தி வைக்கும் இடமாக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு இப்பொழுது சிறிது இடமளித்தால் இதுவே பிற்பாடு படிப்படியாகக் கடைகள் கட்டும் திட்டத்துக்கு மறுபடியும் அமைத்துச் செல்லலாம்.

மேற்படி காலி இடத்தில் அழகிய மலர்ச் செடி, மரங்கள் நிரம்பிய ஆலய நந்தவனம் தான் ஏற்படுத்த வேண்டுமென்பது சுமார் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே மதுரை மாநகராட்சி எடுத்த முடிவு. இதுவே இன்றைய ஆஸ்திகர்களின் விருப்பமும். இதற்கு மாறாக ஸ்ரீ மீனாட்சி ஆலயக் காலி மனையை வேறெந்த காரியத்துக்கும் உபயோகிக்கலாகாது.

மதுரை ஏவி.கே.தியாகராஜன் செட்டியார்
3–4–72 செயலர், நகரத்தார் சங்கம்.

★

மதுவிலக்குப் பிரசாரம்

திருநெல்வேலியில் 12–2–72 அன்று ஆரம்பித்த மதுவிலக்குப் பாத யாத்திரை சுமார் ஒன்றரை மாத காலமாக நெல்லை மாவட்டத்தில் உள்ள அத்தனை தாலுகாக்களிலும் தொடர்ந்தது. மதுவிலக்குப் பிரசாரங்கள் செய்தும், செயற்குழுக்கள் அமைத்தும், பொதுக் கூட்டங்கள் போட்டும், 26–3–72ல் கன்னியாகுமரியில் வெற்றிகரமாக நிறைவு பெற்றது. இந்தப் பாத யாத்திரையை நெல்லை மாவட்ட சுதந்திராக் கட்சியினர் முக்கிய பொறுப்பு எடுத்து நடத்தினர். கூடிய சீக்கிரம் நெல்லையில் மதுவிலக்கு மாநாடு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சர்வகட்சித் தலைவர்களையும் அழைக்க உத்தேசித்து உள்ளோம்.

திருநெல்வேலி டி.ஆர். சங்கர நாராயணன்
7–4–72 செயலாளர், மாவட்ட மதுவிலக்குக் குழு.

பயங்கரக் கூத்து

மாமேதை ராஜாஜி அவர்கள் கல்கியில் மதுவின் தீமைகளைப் பற்றி நல்ல முறையில் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். நான் மதுவைக் கையாலும் தொட்டு அறியாதவன். புகைப் பழக்கமும் கிடையாது. வெற்றிலை பாக்குக்கூடப் போட்டதில்லை. இவையத்தனையும் அவற்றிலுள்ள தீமையை உத்தேசித்து விலக்கியவன். ஆனால் இவை அத்தனையையும் விட இளைஞர்களைப் படுகுழியில் வீழ்த்தும் காரியம் ஒன்று தமிழ் நாடு முழுதும் பரவலாக நடைபெறுகிறது. பொருட்காட்சி என்ற பெயரால் நடைபெறும் ஆபாச அரை நிர்வாண நடனங்களையே குறிப்பிடுகிறேன். வேறு பழக்கங்கள் உடலை மட்டும் கெடுக்கக் கூடியவை. இது மனத்தையே கெடுக்கக் கூடிய மகா பயங்கரக் கூத்து. இதைத் தடுப்பதால் அரசுக்கு என்ன நஷ்டம் வந்துவிடும் என்று தெரியவில்லை.

அறந்தாங்கி
8-4-72 கோ. வீரராகவன்

★

தமிழுக்கு அவமானம் !

டில்லியில் உலகப் புத்தகச் சந்தை சிறப்பாக நடைபெற்றது. அதில் தமிழ்நாடு அரசாங்கம் நிறுவியிருந்த 'பெவிலியன்'தான் பரிதாபமாக இருந்தது. சந்தையில் கடை விரித்துவிட்டு, ''விற்பனைக்கல்ல'' என்ற போர்டையும் மாட்டியிருந்தது பரிகாசத்துக்கு உரியதாக இருந்தது. வடநாட்டாரும் வெளிநாட்டாரும் கேலி செய்தார்கள். தமிழர்களுக்கு வேதனையாக இருந்தது. இதைவிடச் சந்தையில் பங்கு கொள்ளாமல் இருந்திருக்கலாம். புத்தகங்களும் மிகக் குறைவாகவே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. தமிழ் நாடும், தமிழ் இலக்கியமும் அங்கு பெற்ற அவமானத்தை எண்ணித் தமிழ் எழுத்தாளன் தலை குனிய வேண்டியிருந்தது.

தமிழ்நாட்டுப் புத்தக வெளியீட்டாளர்கள் இதில் கவனம் செலுத்தவில்லை என்ற காரணத்தைக் காட்டித் தப்பிக்க இயலாது. அரசாங்கம் இதில் தலையிட்டு, தேவையானால், நிதி உதவியாவது (Subsidise) பிரசுரகர்த்தர்களுக்கு ஊக்கமூட்டிப் பெருமைப் படுத்தியிருந்திருக்கலாம். மொத்தத்தில் அந்தச் சந்தையில் பங்கு பெற்றுத் தொலைக்க வேண்டியிருக்கிறதே என்னும் மனப்பான்மையில் தமிழ் நாடு அரசு அதில் பங்கு கொண்டது போலிருந்தது.

தேசிய எழுத்தாளர்கள் முகாம் சிறப்பாக நடைபெற்றது. 102 எழுத்தாளர்கள் ஒரே இடத்தில் சந்தித்து அளவளாவும் வாய்ப்புக் கிடைத்தது. இது ஒரு சிறந்த முயற்சியே. பிற மொழி எழுத்தாளர்களின் எண்ணங்களையும் புரிந்துகொள்ள வாய்ப்பிருந்தது.

திருநெல்வேலி
7–4–72 ர. சு. நல்லபெருமாள்

இளைஞர் சமுதாயம்



பேட்டிக்குப் பதில் அளிக்கின்றனர்

3. சுவையான விஷயம்

வெள்ளி விழாவை நோக்கிப் பீடுநடை போட்டுக் கொண்டிருக்கும் சைதாப்பேட்டை பாரதி கலைக் கழகம் நடக்கும் கணபதி பாடசாலைக்குப் போனதும் எனக்குப் பிரமை பிடித்தாற்போலாகி விட்டது. மிகப் பழைய கட்டிடம். 'இளைஞர்களோடு பேசிப் பழகி அவர்களுடைய பணிகளையும், துடிப்பான உணர்ச்சிகளையும் கேட்டறிந்து பகிர்ந்து கொள்ள வந்திருக்கும் நமக்கு இந்த ஹைதர் காலத்துக் கட்டிடமே சவால் விடுகிறதே!' என்ற நினைப்போடு உள்ளே நுழைந்தேன். 'கட்டிடம் பழைமையானது என்பதோடு சங்கம் ஆரம்பித்தும் இருபத்திரண்டு ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டனவே. சங்கம் ஆரம்பித்தபோது இளைஞர்களா யிருந்தவர்கள் இப்பொழுது இளமைப் பருவத்தைத் தாண்டி யிருப்பார்களே. இளைஞர் சமுதாயத்துக்குத் தேவையான தகவல்கள் கிடைக்குமா ?'

மேற்படி ஐயப்பாடுகளுடன்பரீட்சைஎழுதும் மாணவனின் குழப்பமும் பயமும் என்னை யறியாமல் எனக்குள் புகுந்துகொண்டு விட்டன.

தலைவர் இரா. சுராஜும், செயலாளர் வ. சா. பஞ்சநதீசன், துணைச் செயலாளர் முருகசரணன், பொருளாளர் ப. நா. பாலசுப்பிரமணியன் ஆகியவர்களும் இன்னும் சில இலக்கிய அன்பர்களும் அன்போடு வரவேற்றனர்.

கல்கியில் வரும் இளைஞர் சமுதாயம் பகுதிக்கு அவர்கள் எழுதியிருந்த கடிதத்தை எடுத்துக் கொண்டு முதல் கேள்வியை எப்படித் தொடங்கலாம் என்று ஒரு கணம் சிந்தித்தேன்.

உடனே சங்கத் தலைவர் திரு இரா. சுராஜ், சிரித்துக் கொண்டே ''உங்கள் யோசனை எனக்குப் புரிகிறது. இந்தச் சங்கம் தொடங்கியபோது அதாவது 1951ம் ஆண்டு நாங்களெல்லோரும் இளைஞர்களாகத்தான் இருந்தோம். இப்பொழுதும், இங்கு எங்கள் சங்கத்தைக் கட்டிக் காக்க இளைஞர்கள்தான் முன்னணியில் நிற்கிறார்கள். இதைத் தொடங்கியபோது இளைஞர்களைப் பற்றிக்கூட நாங்கள் அதிகமாக நினைக்கவில்லை. சிறுவர்களை மனத்தில் வைத்துக் கொண்டுதான் தொடங்கினோம். அவர்களுக்கு ஆரம்பத்திலேயே தமிழ் இலக்கியஉணர்வை ஊட்டிவிட்டால், அது வாலிப வயதில் எல்லாப் பொறுப்புக்களையும், பண்புகளையும் அவர்களிடம் ஏற்படுத்தி விடும் அல்லவா?'' என்றார்.

''அதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?''

''பாரதியாரின் பாப்பாப் பாட்டு, கண்ணன் பாட்டு ஆகியவைகளுக்கு வகுப்பு நடத்திக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறோம். நாடகத்தில் நடிக்கவும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம். எங்கள் சங்கத்தின் விழாக்களில் அவர்களைக் கொண்டு பல நாடகங்களை நடத்தி யிருக்கிறோம். எங்கள் இளம் நடிகர் குழுவினர் பல வானொலி நாடகங்களில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நாங்கள் அவர்களுக்கு விசேஷப் பயிற்சி அளிக்கிறோம். நாடகங்களில் நடிக்கும் பயிற்சி இளைஞர்களுக்குப் பிற்காலத்தில் வாழ்க்கையில் பல விதங்களிலும் பயன்படுகிறது.''

''உங்கள் சங்கத்தின் ஆரம்ப காலத்தில் யாரைத் தலைவராகக் கொண்டு என்னென்ன குறிக்கோள்களோடு தொடங்கினீர்கள்?''

''இப்பொழுது சேலம் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றி வரும் திரு எஸ். சுவாமிக்கண்ணு பி.எஸ்ஸி., எம்.எல். அவர்களைத் தலைவராகக் கொண்டு இந்தச் சங்கம் தொடங்கப்பட்டது. அப்பொழுது அவர் சட்டக் கல்லூரி மாணவரா யிருந்தார். பிறகு வழக்கறிஞரானார். பாரதியாரின் கவிதைகளைப் படிப்பது, அவற்றைப் பரப்புவது, இலக்கிய உணர்வைத் தட்டி எழுப்பி இளைஞர்களுக்கு உத்வேகமூட்டுவது இவைதான் அப்பொழுது எங்கள் கொள்கைகள். மகாகவி பாரதியார்தான் இந்தச் சங்கத்தின் நிரந்தரத் தலைவர்.''

''அது சரி. இளைஞர் சமுதாயத்துக்கு உங்கள் சங்கத்தின் மூலம் செய்யும் பணிகளைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?''

''ஓகோகோ! நான் மறந்தே போனேன். நீங்கள் இப்பொழுது இளைஞர் சமுதாயத்தைப் பற்றிய நினைப்பில் அல்லவா இருக்கிறீர்கள்! சமூகத் தொண்டுக்கும், அரசியல் தொண்டுக்கும், தெய்விக நற்பணிகளுக்கும் நகரத்தில் எத்தனையோ சங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் ஏராளமான பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இலக்கியத்தை வளர்க்க, பரப்ப இளைஞர்களை ஆயத்தம் செய்வதுதான் எங்கள் பணியின் இன்றி

யமையாத குறிக்கோள். இதுவே சமூகத் தொண்டுதான்.''

''பாரதி பாடல்களைப் பாடப் பயிற்சி அளிப்பதினாலும், அடிக்கடி கூட்டம் நடத்திப் பரப்புவதனாலும் மட்டும் தமிழ் இலக்கியம் வளர்ந்துவிடும் என்று கூற முடியுமா?''

''அப்படிக் கூற முடியாதுதான். அதற்குத்தான் புதிதாக வரும் இளம் கவிஞர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் அளிக்கும் வகையில் அவர்களது கவிதைகளுக்காகவே கவியரங்கம் நடத்துகிறோம். இதுவரையில் மாதம் ஒரு கவியரங்கம் நடத்தி அண்மையில் பொன் விழாக் கொண்டாடினோம். மேற்படி கவியரங்கங்களின் மூலம் மின்னலெனப் பளிச்சிடும் கவிப் பொறிகளைக் கன்னல் தமிழ் மொழியில் கவிதைகளாக வெளியிட்டுப் பட்டிமன்றங்களைக் கலகலக்கச் செய்யும் சக்தி வாய்ந்த பல இளம் கவிஞர்களை அறிமுகப்படுத்தி யிருக்கிறோம்.''

(இது பாரதி கலைக் கழகத் தலைவரின் வாய்மொழி வசனம்தான். சிறிதும் கலப்படமில்லை!)

''கடந்த இருபத்தொரு வருடங்களாக இந்தச் சங்கத்தை நடத்தி வருகிறீர்களே, இதில் சிரமமே ஏற்பட்டதில்லையா?'' என்று கேட்டேன்.

செயலாளர் திரு பஞ்சநதீசனின் முகம் சிவந்து விட்டது. — கோபத்தினால்தான்! ''என்ன சார் இது? ஒரு சங்கம் நடத்துவதென்றால் பல சிரமங்களையும் எதிர்பார்த்துத்தான் நடத்த வேண்டும். ஆனால் அந்தச் சிரமங்களைப் பற்றி வெளிப்படையாகச் சொல்லுவதில் பயன் எதுவும் இல்லை. இதை நீங்கள் என்னத்துக்காக ஆர்வத்தோடு கேட்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை'' என்றார்.

''ஸார்! ஒரு சங்கம் என்றால் அதன் சாதனைகளை மாத்திரம் சொல்லுவதில் பயனில்லை. அதை நடத்துவதில் ஏற்பட்ட வேதனைகளையும் சொன்னால்தான் நல்லது. ஏற்பட்ட இக்கட்டான நிலைகளையும் அவற்றிலிருந்து நீங்கள் விடுபட்ட கலையையும் கூறினால் அவை வேறு பலருக்கு எச்சரிக்கையாக இருக்கும்'' என்றேன்.

''அது சரி. வேதனைகள் நிறைய ஏற்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் இறைவன் சோதனையாக நினைத்துச் சமாளித்து வந்திருக்கிறோம். தவிர்க்க முடியாத பல காரணங்களால் கழகத்தின் வளர்ச்சி சிறிது காலம் தடைபட்டிருந்தது. அதனால் நாங்கள் சிறிதும் தளர்ந்து விடவில்லை. முயற்சியை நிறுத்தி விடவும் இல்லை. 'கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்' என்ற கவிஞரின் வாக்கையே உறுதியாகப் பற்றிக் கொண்டு பொறுமையாக இருந்தோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக எங்கள் சங்கம் மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், பல சந்தர்ப்பங்களில் சொற்பொழிவாளர்கள் வராமலிருந்து எங்களை வேதனைக்குள்ளாக்கி யிருக்கிறார்கள். ஆனால் அந்தச் சந்தர்ப்பங்கள் எங்களுக்கு வேறொரு விதத்தில் நன்மையாகவே முடிந்தன!''

''அது எப்படி?''

''அவர்கள் செய்ய வேண்டிய பணியை நாங்களே செய்ய நேர்ந்ததால் மேடைப் பேச்சுக் கலையும், இலக்கிய ஞானமும் எங்களிடையே நல்ல முறையில் அபிவிருத்தியடைந்து விட்டன. அது லாபந்தானே? ஒவ்வொரு கூட்டத்தின்போதும் நிதி வசதிக் குறைவினால் பல சிரமங்களுக்கு உள்ளாகியிருக்கிறோம். 'துன்ப நினைவுகளும் சோர்வும் பயமுமெல்லாம் அன்பில் அழியுமடி, கிளியே, அன்புக்கு அழிவில்லை காண்!' என்ற பாரதியின் வாக்கு மன உறுதியைத் தந்தது.''

''சரிதான். சற்று முன்பு இலக்கிய உணர்வைப் பரப்புவதே சமூகத் தொண்டுதான் என்று கூறினீர்கள். அதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல முடியுமா?''

'''நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ, சொல்லடி சிவசக்தி! எனைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய், வல்லமை தாராயோ, இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே!' என்ற கவிஞர் பெருமானின் வாக்கை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். கவிதா சக்தியென்னும் வல்லமையைத்தான் கவிஞர் குறிப்பிடுகிறார். 'எந்தன் பாட்டுத் திறத்தாலே — இவ்வையகத்தைப் பாலித்திடல் வேண்டும்' என்ற வரியில் அதை நன்றாய் வலியுறுத்துகிறார்.... மேலும் 'பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்' என்ற கவிஞரின் வாக்கையும் கவனிக்க வேண்டும். இந்த வாக்குகளில் உள்ளதை விட நாம் தனியாகச் சமூகத் தொண்டு என்று என்னத்தைச் சாதித்துவிட முடியும்?'' என்று ஆவேசமாகக் கேட்டார் தலைவர்.

இதைக் கேட்டபோது எனக்கும் பாரதியாரின் கவிதை ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று ஆசை ஏற்பட்டு விட்டது!



பாரதி கலைக் கழக அங்கத்தினர்கள் விவாதிக்கின்றனர்



கத்தியுண்டு : ரத்தமில்லை !

நியூயார்க்கில் ஒரு பௌதிக நிபுணர் சஸ்திர சிகிச்சைக்கு ரத்தம் சிந்தாத கத்தி கண்டுபிடித்திருக்கிறார். இக்கத்தி விநாடிக்கு 30,000 தடவை விதம் அதிர்கிறது. இந்த அதிர்வு ஓர் அங்குலத்தில் ஐயாயிரத்தில் ஒரு பங்கு நீளத்துக்கே பரவுகிறது. இதனால் ஏற்படும் உராய்வு ரத்த நாளங்களில் உஷ்ணத்தை ஏற்படுத்தி அவற்றை 'வெல்ட்' வைத்தாற்போல் மூடிக்கொள்ளச் செய்கின்றது. ஆகவே சஸ்திர சிகிச்சையின் போது ரத்தப் பெருக்கை நிறுத்த முன்போல ரத்த நாளங்களுக்கு 'முடிச்சுப் போட' வேண்டியதில்லை. இந்தக் கத்திக்கு 'அல்ட்ராஸோனிக் கத்தி' என்று பெயர். 'அல்ட்ராஸோனிக்' எனில் ஒலியின் வேகத்தை மிஞ்சிய என்று பொருள். இக்கத்தியின் அதிர்வு ஒலி வேகம் அத்தகையது.

தாகம் தணிக்கும் விலை !



வெய்யில் காலம்; தாகமாயிருக்கிறது. கோல்ட் ஸ்பாட், கோக்கோ கோலா என்று அருந்த நினைக்கிறோம். விலையைக் கேட்டதுமே தாகம் அடங்கி விடுகிறது!

இந்தகைய பிரபலமான பானம் ஒன்றின் அடக்க விலை ஆறு பைசாதான் என்கிறது பம்பாய் நிறுவனம். ஆனால் விற்பனை விலை 45 பைசா முதல் 70 பைசா வரை! காரணம் வரி சுமை. பாட்டில், மூடி, அதனுள் இருக்கும் கார்க், சர்க்கரை, பாட்டிலுக்குள் அடைக்கும் வாயு, [கடைசியாகக் கடைகளுக்குப் போகும் பானம் என்று எல்லாவற்றுக்கும் தனித்தனியே வரி. அடக்க விலை போல் 600 சதவீதம் வரி!

'' 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும் — இங்கு வாழும் மனிதருக் கெல்லாம்' என்று பாரதியார் பாடியிருக்கிறாரே! அதைப் பின்பற்றுவதில்லையா?'' என்று ஒரு கேள்வி கேட்டு வைத்தேன்.

''ஆகா! அதுவும் உண்டு'' என்றார் செயலாளர். ''ஒவ்வொரு கவியரங்கத்துக்குப் பிறகும் சங்க அங்கத்தினர்களில் ஒருவர் மற்றவர்களை அழைத்து விருந்து வைப்பது வழக்கம். இத்துடன் கவியரங்கத்தின்போது அரங்கேறிய கவிதைகளையெல்லாம் கவிமலராகத் தொகுத்து அவ்வப்போது வெளியிட்டு வருகிறோம்.''

''ஏதாவது நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய முக்கிய நிகழ்ச்சியைச் சொல்ல முடியுமா?''

''நிச்சயமாய்ச் சொல்ல முடியும். எங்கள் கழகத்துக்கு ராஜாஜியின் ஆசி கிடைத்தது. 'பற்றற்ற எந்தப் பணியுமே நல்லது. அதிலும் பற்றற்ற கலைப்பணி மிக நல்லது. இந்த நல்ல பணியைச் செய்யும் சைதாப்பேட்டை பாரதி கலைக் கழகத்துக்கு என் மனமார்ந்த ஆசீர்வாதம்' இவ்வாழ்த்து எங்களுக்கு மனப்பாடம் ஆகிவிட்டது.''

''மிக்க மகிழ்ச்சி. எதிர்காலத் திட்டம் ஏதாவது உண்டா? அதைப் பற்றிச் சொல்லுங்கள்'' என்று கேட்டேன்.

''இலக்கியப் பணியையே முழுமூச்சாகக் கொண்டு இயங்கி வரும் பாரதி கலைக் கழகம் செய்வனே செய்து முடித்த பணி சிலவே. ஆற்ற வேண்டிய பணிகள் பல உள. கழகத்துக்கென்றே கவிதைகளும் கட்டுரைகளும் நிறைந்த இலக்கிய ஏடொன்றைத் தொடங்க வேண்டும் என்பதும், பாரதியின் படைப்புக்களை அழகிய முறையில் வெளியிட வேண்டும் என்பதும், சைதாப்பேட்டையில் கழகத்துக்கென்றே ஒரு கட்டிடம் அமைக்க வேண்டும் என்பதும், பாரதி பெயரில் இந்நகரில் ஒரு கல்லூரி தொடங்க வேண்டும் என்பதும், பாரதி இலக்கிய, தமிழ் இலக்கியப் பணிக்கென்றே நிரந்தர நிதி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதும் எங்கள் ஆசைகள். அன்பர்கள் ஆதரவாலும் இறையருளாலும், இவை ஈடேறுமென நம்புகிறோம்'' என்று தமது நீண்ட ஆசைப் பட்டியலை ஒப்பித்து விட்டார் தலைவர்.

''உங்கள் ஆசைகள் அனைத்தும் நிறைவேற வேண்டும் என்பதுதான் என் ஆசை!'' என்று நானும் என் ஆசையைத் தெரிவித்துக்கொண்டேன். ''இன்னும் ஏதாவது சுவையான நிகழ்ச்சி உண்டா?'' என்று கேட்டு வைத்தேன்.

(என் கட்டுரையைப் பற்றிய கவலை எனக்கு. என் கட்டுரை முழுவதையும் படித்துவிட்டு 'இன்னும் சுவையாக எதுவும் இல்லையா?' என்று ஆசிரியர் கேட்டு விட்டால் என்ன செய்வது?)


''கலைஞர்களையும், கவிஞர்களையும் பாராட்டுவது போலவே சுவைஞர்களையும் பாராட்டும் வழக்கம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அதுதான் விருந்து என்று சொன்னேனே, அதில் சுவைஞர்களுக்கும் பங்கு உண்டு. இது சுவையா யில்லையா? இதைவிடச் சுவையான விஷயம் உங்களுக்குத் தேவையா?'' என்று கேட்டார் தலைவர் சுராஜ்.

ஒன்றுமட்டும் நிச்சயம்; விருந்து கொஞ்சம் சுமாராகப் போய்விட்டால்கூட அது பாரதி கலைக் கழகத்தினருக்குத் தெரியாது! ஏனென்றால் அவர்கள் மனத்தில் பாரதியின் கவிதைச் சுவை நிரம்பித் ததும்புகிறது. வாய் உணவை அசைபோடும்போதும் மனம் பாரதி பாடல்களை அசை போட்டுக் கொண்டிருக்குமாதலால், ''பிரமாதம்! பிரமாதம்!'' என்று சொல்லிவிடுவார்கள்.

—ஸோமாஸ்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

எஃகிலும் காலங்களின் மாறுதலுக்கேற்ற முன்னேற்றம்



போர்வாளிலிருந்து தொடங்கி 'விஜயந்தா' டாங்க் தயாரிப்பு வரை மனித சமுதாயம் வெகுவாக முன்னேறியிருக்கிறது. அதற்கேற்றவாறு எஃகுத் துறையும் முன்னேறியிருக்கிறது. பண்டைக்காலத்து முறைப்படி மூலப் பொருளை உருக்கி இரும்பு தயார் செய்யப் பட்டது. ஆனால் இன்று நவீன விஞ்ஞான முறைப்படி விசேஷ தேவைகளுக்கேற்றவாறு விசேஷமான எஃகுகள் உருவாகின்றன. விமானங்களுக்கு—க்ரோம் மோலிப்டினம் எஃகு. துப்பாக்கி குண்டுகள் புக முடியாத போர்க் கவசத்திற்கு—ஹெல்மெட் எஃகு. பாலங்களுக்கு—உயர் டென்ஸைல் எஃகு. 64 ஆண்டுகளுக்கு முன் எங்களுடைய முதல் உருக்காலையில் வார்க்கப் பட்ட தீ நிறம் மாறி உருமாறி, முன்னேற்றத்தின் புதிய வண்ணங்களுக்கு என்றென்றும் துணை நிற்கிறது.

டாடா ஸ்டீல்

TAL [illegible] (A)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)